# சித்தகுமாரன்.

இரண்டாம்பாகம்.

## இடைக்காடர்.

Copyright Reserved.

விலை ரூபா. 1

1925.

230
கிடை
L|PR

11.08.07

உ

சிவமயம்.

# சித்தகுமாரன்.

உ-ம் பாகம்.

ஆசிரியர்

இடைக்காடர்

எழுதியது.

Copy-right reserved. 42064 விலை ரூபா 1·50

யாழ்ப்பாணம்,

நாவலர், அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1925.

# முகவுரை.

சரியை, கிரியை, யோகம், என்னும் மூன்று பாதங்களையும் ஒட்டி யெழுதப்பட்ட முதலாம் பாகத்தின் முகவுரையே, ஞானபாதத்தை யொட்டி யெழுதப்பட்டிருக்கும், இவ்விரண்டாம் பாகத்துக்கு மமையும்.

ஆக்கியோன்.

உ

சிவமயம்.

# சித்தகுமாரன்.

## ௨௦-ம் அத்தியாயம்.

சித்தகுமாரன் தனது சகோதரன் மானதராசனுக்கு விரோதமாக விவேகநாதனுக்குமுன் கொண்டுவந்த வழக்கையும், அதனது முடிவையும் யாவரும் அறிவார்கள். அக்காலங்களில், அவர் விவேகநாதனைப் பலமுறைகளிலுங் கண்டிருந்தார். அதன்பின், யுத்தம் நடந்த காலத்தில், விவேகநாதன் சேனாதிபதியாயிருந்து யுத்தத்தை நடத்தியபொழுது, அவருடைய குணாகுணங்களைச் சித்தகுமாரன் நன்றாய்க் கவனித்திருந்தார். அக்காலந் தொடக்கம், சித்தகுமாரனுக்குவிவேகநாதனில் ஓர் கவர்ச்சியுண்டாயிற்று. ஆதலால், அவர் அடிக்கடி, கோட்டைக்குச் சென்று, அங்கே விவேகநாதனுடன் கலந்து பேசிக்கொண்டிருப்பர்.

அவர் கோட்டைக்குப் போய்வருங் காலங்களில், எப்பொழுதும் அதற்கு முன்னேயுள்ள முற்றத்தில், ஒருவர் நிற்பதைக்காண்பார். அவர் ஆழ்ந்த கண்ணும், வெறித்த பார்வையுமுள்ளவர். முறுகியசடையும், வீசை தாடியுமுள்ளவர். தோய்த்துலர்ந்த நேர்த்தியான வஸ்திரத்தையாவது, விபூதி, உருத்திராட்சம் முதலிய சிவசின்னங்களையாவது, அணிந்திருப்பதில்லை. சைவசமய வாசாரங்களின்படி யொழுகுபவராய்த் தோற்றவில்லை. ஒருவரோடு மொன்றும்பேசாது பிரமைகொண்டவர்போல, நிலத்தைப் பார்த்த வண்ணமாக நிற்பார். ஆடாதசையாது நட்ட கட்டைபோல நிற்பார். எவர்களாவது, அவரிடம் யாதுங் கேட்பின், நிமிர்ந்து பார்த்து உரத்துச் சிரிப்பார். அச்சிரிப்புச் சந்தோஷச் சிரிப்புமல்ல, கோபச் சிரிப்புமல்ல. அதை யுற்று நோக்குமிடத்து, விழலுக்குத் திரிபவர்கள் ஏனென்னிடம்வீண்கேள்விகளைக் கேட்கின்றார்களென நினைத்து அவர்களை யலட்சியம் பண்ணுவதாகத் தோற்றும். அக்கோட்

டையிலுள்ள காவற்காரர்களும், தொண்டு வேலைக்காரர்களும் அவரைப் பைத்தியங் கொண்டவரெனச் சொல்லிக் கொள்வார்கள்.

ஒருநாள், சித்தகுமாரன் அவரை நோக்கி, "சுவாமி! தங்கள் நாமதேயமென்ன? எப்பொழுதும் இவ்விதந் தனியனாய் நிற்கின்றீர்களே. தங்களுக்கு யாதும் தொழிலில்லையா?" எனக் கேட்டார். அவர் வழக்கப்போல, உரத்துச் சிரித்து, பின்சித்தகுமாரனைநோக்கி, "உலகத்தவர்கள் என்னை வைராக்கிய நாதனென்றழைப்பர். என்னைத் துணைக்கொண்டு, தாங்களிங்கு வந்த கருமத்தை முடிக்க, ஆட்களனுப்பப் படும் வரைக்கும் இங்கு காத்திருக்கின்றேன். என்னிடத்துக்குத்தகுந்த ஆட்களை யனுப்புவது விவேகநாதனின் கடமையாகும். உமது முகக் குறியை நோக்குமிடத்து, நீர் விரைவில் என்னைத் துணைக் கொள்வீரென்று நினைக்கின்றேன்." எனச் சொல்லி முடித்து முன்போல நின்றார். சித்தகுமாரன் அவர் சொல்லியவற்றை நன்றாய் விளங்காது, பின்னுஞ் சிலகேள்விகளைக் கேட்டார். வைராக்கியநாதன் யாதும்விடைபகராது, மௌனஞ்சாதிக்கவே சித்தகுமாரன் அவரை விட்டுப் பிரிந்து, சலித்த முகத்துடன், கோட்டைக்குள் நுழைந்தார். அங்கே விவேகநாதன் சித்த குமாரனுடைய தோற்றத்தைக்கண்டு, சற்றே விசாரம் பிடித் தவர்போலக் காட்டினார். அதைக்கண்டு சித்தகுமாரன் அவரை விளித்துப் பின்வருமாறு பேசினார்.

**சித்தகுமாரன்.** உலகத்தவர்கள் உய்யுப்பொருட்டு சமயசாத் திரங்கள் விதித்திருக்கும் சற்கிரியைகளைத் தவறாது செய்தும், ஆலயவழிபாட்டை ஒழுங்காக நடத்தியும், அறிவுக்குரிய அரிய சாத்திரங்களைக் கற்றதுமன்றி, பரோபகாரமாகச் சாத் திரங்களைப் பிறருக்குக் கற்பித்தும் வருகின்றேன். இருந்தும் உமக்குநான் செய்பவைகளிற் றிருப்தியிருப்பதாகத் தோற்ற வில்லை. என்னிடம், யாதுங் குறையிருப்பின், தயை செய்து கூறும்படி வேண்டுகின்றேன். அங்ஙனமிருந்தால், அக்குறை களை நிவிர்த்தி செய்து, நீர்கற்பிக்கும் விதமாக நடப்பதற்குச் சித்தமுள்ளவனாயிருக்கின்றேன்.



**விவேகநாதன்.** *

வாயினாற்பல நூல்படித் துணர்ந்து நல்
வழி பிறர்க் குரை செய்து
நீயு லோகவா சாரமோ ரணுத்துணை
யானு நீங்கிலை நெஞ்சே
தூய தாமிவண் பிறர்கொளக் குங்குமஞ்
சுமந்து செல் கரமுன்னில்.

(பலஞான சாத்திரங்களை வாயினாற் படித்தும், அவற்றி னது பொருள்களை ஆராய்ந்தறிந்தும், பிறர்க்குநன்னெறியாவும் அவர் சம்மதிப்பச் சொல்லியும், நீ முன்னிருந்த உலோகாசார வழக்கத்தில், ஓரணுவளவாயினும் உள்ளே துறந்தனையில்லை. இங்ஙனம் பிறப்பிற்கேதுவாய உலோகாசாரந் துறத்தலின்மை யால் வீட்டிற் கேதுவாய ஞானசாரம் பற்றியதின்றென்பது நன்கறிந்தேன். நெஞ்சமே குங்குமப் பொதி சுமந்துசெல்கின்ற கர்த்தபம் (கழுதை) உன்னினும் நின்மலமுள்ளதாம் (சுத்த முள்ளதாம்).

சி. பலநூல்களைக் கற்றறிந்து, பிறர்க்குரைக்கச் சிவபூசைதோத் திரம்பண்ண, இவற்றால் யாவரும் மதிப்ப விருந்த வென்னை மிருக சண்டாளமாகிய கழுதைக்குங் கீழ்ப்படுத்திக்கூறினீர். அதற்கு நியாயமென்ன?

வி. காய மானுடத் தின்றதற் கன்றியுட்
களவு மின்மையினாலே.

(நீ மானுடதேகத்தைப் பெற்று, நூற்பொருளுணர்ந்தும் அந்நூற்பொருளால் வீட்டின்பமாய பயனைப் பெறாது அப்

---

* இந்த மேற்கோள்கள் திருத்துறையூர்ச் சாந்தலிங்க சுவாமி களாலருளிச் செய்யப்பட்டதும், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளால் உரையருளிச் செய்யப்பட்டதும், யாழ்ப்பா ணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களாற் பதிப்பிக் கப்பட்டதுமாகிய வைராக்கியசதகத்திலிருந் தெடுக்கப் பட்டன. அந்நூலை முழுவதும் படிப்பவர்கள் மிக்க நன்மை யடைவார்கள்.

பயன் பெற்றவன் போல, நெஞ்சில் வஞ்சம்வைத்துக்கொண்டு அந்நூற்பொருளை பிறர்பயன்படுமாறு கூறுகின்றாய். ஆனால் கழுதையோ, மானுடதேகமின்றி, தான் சுமக்கும் குங்குமம் பிறர்க்குபயோகமாகக் கொடுத்தேன் என்னும் வஞ்சமு மின்றி யிருப்பதால், உன்னைக் கழுதையினுங் கீழ்ப்படுத்திக் கூறினேன்.)

சி. நீர் கூறியவற்றிற்கு யாதுமாதாரமுண்டா?

வி. திருவள்ளுவநாயனார்,

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதைய ரில்."

(சகலகலைகளையுங் கற்றறிந்தும், அவைகளைப் பிறர்க்குரைத்தும், தன்மனதை யடக்க முடியாத மடையர்களிலும் பெரிய மடையர்களில்லை.)

அறிவானந்த சித்தியார்,

"விரிந்த நல்வேத புராணங்க ளாகம மிக்ககலை
தெரிந்து படித்தும் பொருள் செப்பித் தாநிலை சேர்ந்துநில்லா
திருந்த சண்டாளரி னேற்றங் கழுதை யெழிற் குங்குமம்
பரிந்து சுமந்தும் பின்வஞ்சம் பண்ணாத பயனெறிலே."

(விரிவாகிய நல்ல வேதங்களையும், புராணங்களையும், ஆகமங்களையும், சிரேட்டமான கலைஞானங்களையும் ஆராய்ச்சி செய்து படித்தும், அவைகளின்பொருளைப்பிறர்க்குச் சொல்லியும், தாம் ஒருநிலையிலும் நில்லாத சண்டாளர்களிலும், அழகான குங்குமத்தை யன்பாகச் சுமந்தும், பின் வஞ்சகமின்றி யிருக்கும் கழுதை யுயர்ந்த தாகும்.)

சி. என் மனதின்கண் வஞ்சகமிருந்ததாக நீர்இகழ்ந்துகூறினீர். அங்ஙனமாயின், அதைவிடுவது ஓர் அரிய செயலல்ல. ஆனால் அரிய தவத்தைச்செய்து மோட்சத்தையடைதற்கு மேலான சமயமின்னதென்பதை யறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.



வி. நாலுவேதமு மொருசமநிலை சொல
நவைசெயி ரவத்தைபாற்
கோலுமூவிரு சமயமாகிய படு
குழியினூ டழிகின்றாய்.

(இருக்கு முதலிய நான்கு வேதங்களும் சகலகேவலங்களுக்கு மத்தியமாகிய சுத்தாவத்தையே மோட்சமடைதற்கு ஏதுவென்று சொல்லக் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களை யுண்டாக்கும், சகலம், கேவலம் என்னும் இரண்டவத்தைகளின்பகுதியாகச் சமயிகள் தங்கள் தங்கள் சித்த விகற்பத்தால் உண்டாக்கிய அறுவகைச் சமயமாகிய பிறவியென்னும் படுகுழியில் விழுகின்றாய்.

சி. இந்த ஆறுவிதமான சமயங்களையும் படுகுழி யென்கின்றீர். நியாயமென்ன?

வி. நீ சமயங்களின் மேல் வைத்த பற்றுகள் ஒன்றையும் ஏன் இன்னும் விடவில்லை?

சி. அவ்விதம் விடாது பற்றுவதால், வருங் கேடியாதோ?

வி. வேலையா வுனக்குடறரு விதியுற
வையு மதை விடுவிக்குங்
காலனார் தொடர்பையு மினந்தொடருதி
போலு நீகடை நெஞ்சே.

(இதுவே தொழிலாக, உனக்குத் தேகத்தைக் கொடுக்கின்ற பிரமனென்று சொல்லப்படும் உனது உறவையும், அவனாற் கொடுக்கப்பட்ட தேகங்களை விடுவித்தலே தொழிலாகவுள்ள இயமனாகிய உனது நட்பையும் விட்டுவிடாது, பிறப்பையும் இறப்பையுங் கொடுக்கும் அப்பற்றுகளை யின்னும் வைத்திருத்தல் மூடத்துவமாகும்.)

சி. நான்கு வேதங்களும் சமநிலையைக் கூறுகின்றன வென்பதற்கும், சமயநிலைகள் படுகுழிக ளென்பதற்கும் ஆதாரமுண்டா?

வி. பட்டினத்தடிகள்,

சினந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையாதது மற்று நின்மலமாய்த்
தனந்தனியே யிருந்தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

(கோபமில்லாமலும், நட்பில்லாமலும், ஓர்வித செய்கையு மில்லாமலும், ஒன்றை நினையாதும், ஒன்றை மறவாதும் மல மில்லாது தனியேயிருந்து ஆனந்தமாகிய நித்திரை யென்னும் விளையாட்டிலே எப்பொழுது இருப்பேன், மேலான கடவுளே கயிலாய நாதனே) யெனவும்,

தேவிகாலோத்தரம்,

சமயாசார சங்கற்ப விகற்பமும்
அமையாதாங்குல வாசாரமானதும்
இமையாதாரும் விடாத வில்வாழ்க்கையும்
அமையார் தோளாய் விடுதலாசாரமே.

(சமயாசாரத்தா லேற்படும் கட்டுகளையும், அவைகளின் பேதங்களையும், சாதியாசார ஒழுங்குகளையும், தேவர்களும் விடாத இல்லற வாழ்க்கையையும் விட்டுவிடுதலே உண்மை யான வாசாரமாகும்.)

சி. தயைசெய்து, எங்களுயிரைக் கவர்ந்து செல்லும் இயம னுக்குத் தப்பும் வழியை எனக்கறிவிக்கும்படி இரந்துகேட் கின்றேன்.

வி. நெஞ்சமே யுடலந்த மாதியை விடார்
நிற்க மற்றவர்க் கெல்லாம்
வெஞ்சமற் குதிப்பதரிது.

(தேகாந்தத்தில், எவர்களுக்கும் முதல்வனாகிய சிவனது திருவடியை மறவாத பெரியோர்கள் தவிர, மற்றைச் சரியை கிரியைகளைச் செய்கின்ற சீவர்களுக்கு கொடியவனாகிய இயமனை விலக்கிச் செல்லுதலரிதாகும்.)

சி. அதற்கு யாதும்பிரமாண முண்டா?



வி. ... இவைக்கொரு மிரு
கண்டுபுத்திரன் சான்றால்
அஞ்ச லிவ்வுடற் கிறுதி யிப்பொழுதென
வறியொரு மையினுளுந்
தஞ்சமென்றரன் சரண்விடேல் யாமுமச்
சமன்வலி தடுப்பாமே.

(சிவனது திருவடியை மரணகாலத்திலும் மறவாதுபிடித்து இயமனை விலக்குதற்கும், மனமாதியால் சிவனது திருவடியை வழிபட்டும், இயமனை விலக்குதலரிதென்பதற்கும்மார்க்கண் டேயருடைய சரித்திரமே சாட்சியாகும். மார்க்கண்டேயர் மரணகாலத்திலும் மறவாது சிவனது திருவடியைப் பிடித்த படியால், இயமனைக் கடந்தார். அவ்விதமே நாமும் நினைப்பு மறப்பின்றிக் கடவுளுடைய திருவடிகளிலேயே எம்மனதைப் பதித்தால், இயமனைத் தவிர்த்துக் கொள்ளலாம்.)

வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில."

என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

சி. இயமன் எங்களுயிரைக் கவர்தற்குச் சிலகாலத்துக்கு முன் கடவுளில் நம்மனதைப் பதித்தால், அது போதியதல்லவா?

வி. (சிரித்து) மின்னலை யொத்த இல்வாழ்வையும், நீர்க்குமிழி போன்ற இத்தேகத்தையும் நம்பி யிருப்பவனிலும், மயிர்ப் பாலத்தை நம்பி அக்கினியாற்றைக் கடப்பவன், விசேஷ புத்தியுள்ளவன்.

"நீரிற்குமிழியிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை"

சி. இம்மானுடதேகம் காத்திராப்பிரகாரமா யொழிய நேரிடின் இன்னொரு மானுடதேகத்தை யெடுத்து, அப்பிறவியில் மனதைக் கடவுளிற் பதித்தல் கூடாதா?

வி. "இப்பிறவி தப்பினால் * எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ வறிகிலேன்" என வான்றோர் கூறியிருப்பதை யறியாயா? இத்தேகத்தை நம்பியிருப்பவர்கள் கானற் சலத்தை நம்பி நெல் விதைத்தவர்கள் போலாவார்கள்.

மாணிக்கவாசகசுவாமிகள்,

"பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணமாகாமே
தீத்தாய் திகழ் தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்"

என்று திருவாய் மலர்ந்தருளியபடி, அறியாமையை நீக்கி சென்றதையும் வருவதையும் நினையாது சந்தோஷமாவது துக்கமாவது கொள்ளாது, அவ்வப்பொழுது வருவதை நமது ஊழின்வழி வருகின்றனவென வெண்ணி, யதையனுபவித்துக்கொண்டு,கடவுளை மறவாதசிந்தையோடெப்பொழுதுமிருக்கவேண்டும். அவ்விதமாகக் கடவுளைத் தியானிக்கும் பொழுதும், நிராசையுடன் அவரைத் தியானிக்கவேண்டும்.

சி. மோட்சபதவியைவிரும்புதலும்ஆசையே. அந்த ஆசையையுமொழிக்க வேண்டுமோ?

வி. "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவாஅப்பிறப்பீனும் வித்து."

(ஆசையென்பது எல்லாவுயிர்களுக்கும் எப்பொழுதும் தவறாத பிறப்பைக் கொடுக்கும் வித்தாகும்) எனத் திரு

* (Darwin) டார்வின்பண்டிதர், தானியற்றிய (Evolution Theory) சிருட்டிமுறை சாத்திரத்தில், மானுடப் பிறப்பை யெடுத்த சீவர்கள், திரும்ப, கீழான பிறவிகளை எடுக்கமாட்டார்களெனக் கூறுகின்றார். இந்திய தத்துவ சாஸ்திரிகள் மானுடதேகத்தை யெடுத்த சீவர்கள், தங்கள் செய்கைகளால் இழிந்த பிறவியை யெடுக்கும் எனக் கூறுகின்றார்கள். மேல் நோக்கத்தால் மேற்பிறப்பை யெடுக்கும் சீவர்கள், கீழ்நோக்கத்தால் கீழ்ப்பிறவியை யெடுப்பது சாத்திர சம்மதமும் நியாய விலக்கணமுமாகும்)



வள்ளுவநாயனார் கூறியபடி, ஆசைபிறவி யெடுத்தற்கு ஏதுவாயிருக்கின்றது. ஆனால் சிலர் பதவி யடைந்தபின், பிறப்பில்லை யென்பதாக வெண்ணுகின்றார்கள். அது தவறு. ஏனெனில், பதவியை விரும்புபவர்கள், அதைப் பெறக்கூடிய மேலான பிறவியை யடைகின்றார்களே யன்றி, மோட்சத்தைப் பெறுவதில்லை. ஆகையால், அந்த ஆசையுமொழிந்தாலன்றி, முத்தி சித்திக்காது.

சி. அங்ஙனமாயின் நாம் செய்யவேண்டிய தென்ன?

வி. சும்மாவிருத்தலே, சுகமானவழி. அதாவது, மனதை அசைவற வைத்திருப்பதாகும்.

சி. அசைவற வைத்திருப்பதாவது, ஐம்புலன்களையு மடக்கி, அதனால் கரணவாசனைகளை விட்டுவிடுவதாகும். அதைச் செய்யும் உபாயங்களைச் சற்றே கூறும்படி பிரார்த்திக்கின்றேன்.

வி. "பார்த்தவிடமெல்லாம் பாமன்காணம்மானை" (திருவம்மானை). "எங்குஞ் சிவமொழிய வில்லை யவன்றன்னாணை" (சிவானந்தமாலை), என ஆன்றோர் கூறியிருக்கும் வண்ணம், அண்டபிண்ட சராசரமனைத்தும், சிவத்தையன்றியில்லை. ஆகையால், நான், நீ, எனப் பேதம் பாராட்டாது, எல்லாம் ஆனந்த சொரூபம் என நினைப்பாயாக. சிவமயம் என்பதன் பொருளுமதுவே. இனிமேல், ஒன்றையும் சுட்டிப்பாவியாது பாவனாதீத நிலையை யடையப் பிரயாசப்படு.

இவ்வாறு சொல்லி, விவேகநாதன், சித்தகுமாரனுக்கு விடைகொடுத்தனுப்பினார். சித்தகுமாரன் இன்னது செய்யவேண்டுமென விளங்காது, சித்தங்கலங்கி நிற்கும்பொழுது அவருடைய கால்கள், வழக்கம்போல, அவரைக் கோட்டையினின்றும் வெளியே கொண்டுவந்தன. அப்பொழுது வைராக்கியநாதன் அவரைக்கண்டு, சந்தோஷங்கொண்டு சிரித்தார். சித்தகுமாரன் புத்திதெளிந்து, அவரைப் பார்த்து, அவரே

தனக்குத் தஞ்சமென்றெண்ணி, அவரை யிறுகப் பிடித்துக்கொண்டார். அன்று தொடக்கம் இருவரும் பிரியாநண்பர்களானார்கள்.

சி. நண்ப! நான் உம்மைத் தஞ்சமென்றடைந்தேன். உம்மையன்றி யெனக்கோர் துணையுமில்லை. என்னை யீடேற்றுவது உமது கடனாகும்.

வை. நீர் ஒன்றிற்கு மஞ்சவேண்டியதில்லை. “நாமார்க்குங்குடியல்லேம், நமனையஞ்சேம்” எனத் திருநாவுக்கரசுநாயனார் கூறியிருப்பதைமறந்துவிட்டீரா? நீர், என்னுடைய எண்ணப்படி நடந்துவரின், உமது காரியம் விரைவில் ஜெயமடையும். ‘தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக்கூலிதரும்” எனத் திருவள்ளுவநாயனார்கூறியபடி முயன்றால் எதுதான் கைகூடாது? திடத்தைக் கைவிடாது, நல்வழியிற் சென்றால், நல்ல கதியை யடையலாம். ஆகையால் ஒருவருடனும் சேராது, ஒருவருடனும் வார்த்தையாடாது, ஏகாந்தத்திலிருந்துகொண்டு, கருமத்திலேயே கண்ணாயிருப்பின் காரியம் வாய்க்கும். அதை யிக்கணமேயாரம்பிக்கவேண்டும்.

இவ்விதமாக, வைராக்கியநாதன் சொல்லி முடித்தவுடன், சித்தகுமாரன் மனந்தேறி, அவர் மயமானார். அந்நேரந்தொடக்கம், சித்தகுமாரன் வேறுதோற்றமுள்ளவரானார். அவரது கண்களாழ்ந்தன. முகம்வெளுப்படைந்தது. அங்கிங்குபாராது கீழ்நோக்குடையரானார். அயலில் நடப்பன அவருக்குப் புலப்படுவதில்லை. ஊணுடைகளை விட்டார். நித்திய கர்மங்களை யொழித்தார். தொழிலைவிட்டார். பார்வைக்குப் பைத்தியங்கொண்டவர் போலானார்.

மானதராசனும், அவருடைய நண்பர்களான காமநாதனும் ஆணவநாதனும், அவரைக்கண்டவுடன், திகிலடைந்தார்கள். அவர் யாதோ நோய்கொண்டாரெனப் பயந்து, அவரெதிரே யோடிப்போய் அவரிடம் பலவித கேள்விகளையுங் கேட்டார்கள். சித்தகுமாரன் ஒருவிடையும் பகராது, கீழ்ப்



பார்வையுடன் நடந்து சென்றார். அவர்கள் ஒன்றும் விளங்காதும், என்னசெய்ய வேண்டுமெனத் தெரியாதும், மலைத்து, அவருக்குப் பின்னே சென்றார்கள்.

அன்று தொடக்கம், சித்தகுமாரன், ஞானோதயவித்தியாசாலையிற் கல்வி கற்பிப்பதை விட்டுவிட்டார். அங்கு வந்து கூடுபவர்களுடன், கலக்காதும் பேசாதும் விட்டார். தனியேயிருந்து தனதுதலையைக்கையிற்றாங்கிக்கொண்டு, கீழேபார்த்து யாதோ யோசனை செய்பவர் போல, உட்கார்ந்துகொள்ளுவார். யாவராயினும் அவரிடத்திற்குச் சென்று யாதுங் கேட்பின், நிமிர்ந்து பார்த்துவிட்டு, மறுபடியுக் தலைகுனிந்து மௌனஞ் சாதிப்பர். நித்திய கர்மங்கள் செய்யார். ஆலய தரிசனஞ் செய்யார். வித்தியாசாலையைத் திரும்பியும்பாரார்.

மானதராசன் தனது தமையன் சித்தகுமாரன் செய்து வந்த கடமைகளைத் தானே செய்து வந்தார். வித்தியாசாலையிற் கல்வி கற்பிப்பதும், அங்கு கூடுபவர்களுடன் வார்த்தையாடுவதும், அவர்மேற் பொறுத்தன. முன்போல சகலகருமங்களும் தவறாது நடைபெற்று வந்தன.

மானதராசனும், காமநாதனும், ஆணவநாதனும், முன் சித்தகுமாரன் செய்து வந்தது போல, நித்திய கர்மங்களை முடித்து, ஆலயத்துக்குப் போய் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வந்தார்கள். சமய சாத்திரங்களைக் கற்று, ஆராய்ச்சி செய்து, விதிப்படி யொழுகத் தொடங்கினார்கள். தங்களுக்கு விளங்காதனவற்றைச் சுவாமியாரிடங்கேட்டுத் தெளிந்தார்கள்.

சித்தகுமாரன், இவைகளொன்றிலுஞ் சேராது தனியேயுட்கார்ந்திருப்பதைக்கண்டு, வித்தியாசாலையில் வந்து கூடுபவர்கள், மிகவும் விசனப்பட்டு, அவரது உண்மை நிலையை விளங்காது தத்தம் மனம் போனவாறு, தங்களுக்குட் பலவாறாக வெண்ணியிருந்தார்கள். முன்னே மானதராசனுடைய செய்கைகள் சித்தகுமாரனுக்கு எவ்வளவு கவலையைக் கொடுத்தனவோ, அவ்வளவு கவலையை, சித்தகுமாரனுடைய செய்கைகள் இப்பொழுது மானதராசனுக்குக் கொடுத்தன.

## உக-ம் அத்தியாயம்

இவ்விதமாகச் சித்தகுமாரன் காலங்கழித்துவரும்நாட்களில் ஒருநாள், சுவாமியார், அவனைச் சோதனை செய்ய நினைத்து, ஏகாந்தமான வோரிடத்திற்கு அவரை யழைத்துப் போய், உட்கார்ந்திருந்து பின்வருமாறு பேசினார்.

சு. நீர் இதுகாறும் நடந்துவந்த விதமாக நடவாது, மாறான கொள்கைகளைக் கொண்டதன் நியாயமென்ன?

சி. சுவாமி! அடியேன் இதுகாறுஞ் சுவாமி தரிசனஞ் செய்தும், யாத்திரை செய்தும், யோகாப்பியாசஞ் செய்தும், மனச்சுத்தமடைந்தேனேயன்றி, மனச்சாந்தமடையவில்லை. இலவு காத்த கிளிபோல், எனதுபாடு முடிந்தது. ஆகையால் அவைகளைவிட்டு, நற்கதியடைய ஞானத்தைப்பெற விரும்புகின்றேன்.

சு. நீர் பைத்தியங்கொண்டவர் போல, இவ்விதம் நடந்துவரின், உமது சுற்றமித்திரர்கள் உம்மை நகையாரா? இகழாரா?

சி. சுற்றமித்திரர்களுடைய புகழ்ச்சியாலாவது, இகழ்ச்சியாலாவது, நாமடையும் உயர்வு தாழ்வு என்னையோ? ஒன்றுமில்லையே. அவைகள் நம்மை மோட்சத்துக்கு உயர்த்தவுமமாட்டா. நரகத்துக்குத் தள்ளவுமாட்டா. ஆகையால் அவைகளிற் புலனைச் செலுத்துவதால், ஓர் பிரயோசனமுமில்லை. "நின்னையொருவர் சுடவுரைத்த பழுதாற் பயனென்ன?" எனப் பட்டினத்தடிகள் கூறியிருப்பது தெரியாதா?

சு. ஒருதொழிலுஞ்செய்யாது, பொருள்சம்பாதிப்பதெங்ஙனம்? "பொருளிலார்க்குப் புகழில்லை, புண்ணியமில்லை" யென்றார் ஆன்றோரும். யாகம் முதலிய சற்கருமங்களை யுத்தேசித்தாவது பொருள் சம்பாதிக்க வேண்டாமா?

சி. * யாகாதி கருமங்களைச் செய்வதற்குப் பொருள் வேண்டியதுண்மையே. ஆனால், பொருளைச் சம்பாதிக்க ஆரம்பிக்கும் பொழுதே, ஆசையும் பிறக்க ஆரம்பிக்கின்றது. ஆசையினால்

---

* ஞானவாசிட்டம், வைராக்கியப் பிரகரணத்தின் மொழிப்பு.



வீராதி வீரர்களும், இராசாதிராசர்களும், அறிவுள்ளவர்களும், அஃதில்லாதவர்களும், மிகுந்த கீழ்மையை யடைகின்றார்கள். அன்றியும் யாகாதி கர்மங்களைச் செய்யும்பொழுது நான், எனது என்னும் அகங்கார மமகாரங்கள் எழுகின்றன. அவைகள் எப்பொழுதும் உயிருக்கு நாசத்தையே கொண்டு வரும். விதிவிலக்காக, மிகச்சிலர், தாஞ் செய்யுந் தொழில்களில் அழுந்தாமல் நிராசையுடன் செய்வார்கள். அப்படிப் பட்டவர்கள் ஞானிகள். அவர்கள் எத்தொழிலையுஞ் செய்யலாம். செய்யினும், அவர்களுடைய மனம் தொழிலிற் பந்தப் படாது. கடவுளிலே சதாபதிந்திருக்கும்.

சு. நாம் ஆயுளை விர்த்திபண்ணி வைத்திருந்தாலன்றோ, எதையுஞ் செய்யலாம்.

சி. ஐம்புலன்கள் என்னுஞ் சர்ப்பங் (புலநாகர்கள்) தீண்டஅதனால்மனந்தளர்வடைபவர்களும், ஞானமில்லாதவர்களும் ஆயுள் தளர்வடைவார்கள். ஆகையால், நிலையற்ற அவ்வாயுளை விரும்புவதாற் சுகமென்ன? மிருகங்களையும்விருட்சங்களையும் போல, வீணைக் காலம் போக்காது, ஆத்ம விசாரத்தால் அறிவை விர்த்திபண்ணி, ஆனந்தமடையும் ஆயுள் மேலானதாம். அன்றியும், ஞானமில்லாதவர்களுக்கு சரீரம் சுமையாயிருக்கின்றது. ஆகவே, அவர்களுக்கு ஆயுள் சுமையாயிருக்கும்.

சு. நாம்மேனிலையையடைதற்கு, நித்தியகர்ம்ம், யாகம் முதலியவற்றைச் செய்ய வேண்டியதின்றோ?

சி. அவைகளால் மனச்சுத்தி யடையலாம். அகப்பாவமின்றி யவைகளைச் செய்யின், அவைகள் உயர்ந்த பதவியைக் கொடுக்கும். அன்றேல் அவைகள் பிறவிக்கு வித்தாகும். ஆகையால் அவைகளிலிச்சை வைப்பது புத்தியல்ல.

சு. அகம்பாவத்தைக் கற்பிக்கும் மனத்தை வசமாக்கின், அதன் செய்கைகள் நன்மையாக முடியுமே.

சி. மனமானது ஆசையென்னு மில்லாளைப் (ஆசைத்தாசியை) பின்றொடரும். அதனால் நாய் பிணத்தைப் பிடுங்கித்தின்பது

போல, அது அறிவைப்பிடுங்கித் தின்னும். பிசாசு பிடித்த பாலர்களைப்போல, மனுஷரை விருத்திகளிற் றள்ளிவிடும். ஒருகணத்தில், பூமியினின்று பாதலத்துக்குப் போகும். பாதலத்தினின்று பூமிக்கு மீண்டுவரும். இந்த மனமாகியபிசாசு அக்கினியிலுங் கொடியது. மலைகளிலுங் கடத்தற்கரியது. வச்சிரத்திலும் வலியது. கடலைக் குடிக்கினுங் குடிக்கலாம் மலையைப் பிடுங்குகினும் பிடுங்கலாம் அக்கினியை விழுங்குகினும் விழுங்கலாம். மனதை நிறுத்துவதோ முடியாத காரியம். ஆகையால், அவ்விதமான மனதை நசிப்பதே முறையாகும்.

சீ. மனதை நசிப்பின், ஆசையற்றுப் போகும். அப்பொழுது முத்தியை யடைய எவ்விதம் ஆசையுண்டாகும்?

கு. ஆசையினற் சற்குணங்கள் கெடும். ஆசையென்னும் அக்கினியே அறிவை யெரிப்பது. இந்த ஆசையென்னுங் கிழக்கணிகை (ஆசைத்தாசி) தனக்கொன்றுங் கிடையாதாயினும், திரவியத்தை விரும்பி, எவருக்கும் பின்செல்வள். ஆசையாகிய குரங்கு, ஒன்றைப்பற்றி யிராது. ஒன்றினின்று ஒன்றுக்குப்பாயும். மதுவுண்டுகளித்த வண்டைப்போல, பாதலம் ஆகாயம், அட்டதிக்குகள் முதலிய பலவிடங்களிலும் கணப்பொழுதிற் சுற்றித் திரியும். ஆசையானது மனதிடமுள்ள வீரர்களையும் ஞானவான்களையும் நொடிப்பொழுதிற் றுரும்பாக்கும்.

சீ. சுவரிருந்தாற்றானே சித்திரமெழுதலாம் எனச் சாதாரண சனங்களுஞ் சொல்வதுபோல, தேகமில்லாது நாமெதையுஞ் செய்ய வியலாது. ஆகையால், நாங்கள் தேசத்தைப் போஷித்துக் காப்பாற்றுவது ஆவசியகமல்லவா?

கு. தோல், எலும்பு, மச்சை முதலியவற்றால் உண்டாய வித்தேகமானது ஒருபோது சிறுத்தும், ஒருபோது பருத்தும் வரும். அது எவ்வளவு அழகுள்ளதா யிருப்பினும், துக்கத்துக்கேதுவானது. அற்ப விஷயங்களில் சுகதுக்கமடையும். அகங்காரம் (ஆணவநாதன்) குடியிருக்கும் வீடு. இந்திரியங்க



ளென்னும் பசுக்கள் மேயும்மனதைத் தன்னிடத்தேயுள்ளது. ஆசையென்னும் தாசிக்கு வாசஸ்தலமானது. நாக்கென்னும் குரங்கு தத்தித் திரிவதற்கு எற்றவிடம். ஒருகணமாவது நிலைக்குமெனச் சொல்லப்படக் கூடாதது. மின்னலையும் கந்தர்வ நகரத்தையும் கானற்சலத்தையும் நிசமென்று நம்பும் அறிவிலிகளை யன்றி, வேறியாவர் தேகத்தைநிசமானதென்று நம்புவார்கள். அப்படிப்பட்ட தேகத்தைப் போஷித்துக் காப்பாற்றுவதால், அடையும் பயனொன்றுமில்லை.

சீ. தேகத்தை யொருங்கே தூஷித்தல் தகுதியன்று. விருத்தாப்பியத்தில் இளைத்துப் பெலனற்றிருப்பதால் அக்காலத்தில் அது உதவாவிடினும், மற்றைய பருவங்களில் உபயோகமுள்ளதாயிருக்குமே.

கு. பாலப்பருவம் எப்பொழுதும் துன்பத்திற்கிடமானது. தளர்வடைந்தது. பேச்சற்றது. அறியாமையுள்ளது. கண்டதை நாடுங் குணமுள்ளது. அற்ப சுகதுக்கங்களில் அழுங்குணமுள்ளது. மண்ணைத் தின்னும். மலத்தைப் புசிக்கும். சந்திரனைப்பிடித்துத் தரும்படி சொல்லும். உபாத்தியாயர், மாதா, பிதா, மூத்தோர், முதலியவர்களுக்கு நடுங்கும்.

யௌவன பருவம் மன்மதனென்னும்பேயடிக்க மெலியும். பேய்த்தேரைப்போல உண்மையானதல்ல. ஆசைகளுக்குறைவிடமானது. ஆகையால் தீமையை விளைக்கும். ஆனல் சற்குரு வுபதேசத்தால் தீயவைகளை யொழித்து, சாது சங்கத்தை யடைந்து பரிசுத்தமான குணங்களை யுள்ளதாய் மோட்ச வழியிற்செல்லின் யௌவன பருவம் மேலானது. அவ்விதமான சற்குணங்கள் பூர்வசென்மதேட்டமுள்ளவர்களுக்கன்றி ஏனையோருக்கமைவதரிதாகும்.

சீ. இயற்கையிலே ஆண் பெண்ணென இருவகைச் சிருட்டிகளிருக்கின்றனவல்லவா? அவைகள் ஒன்றிற்கொன்று இன்றியமையாதனவல்லவோ? ஆகையால் ஆடவர்கள்ஸ்திரிகளோடு கூடிவாழ்தலியல்பல்லவா? அதுவுந்தூஷிக்கப்படத்தக்கதோ?

சி. தோல் எலும்பு மச்சை முதலியவற்றாலாய பெண்களின் தேகத்துக்கும் அவ்வாறாய எங்கள் தேகத்துக்கும் யாதும் பேதமிருக்கின்றதா? பெண்களின் அணிகளும் உடைகளும் அகற்றப்படின் பெண்களின் கோலம் அவகோலமல்லவா? அவர்களுடைய கண்ணீரையும் புண்ணீரையும்உற்று நோக்குபவர்கள் பெண்களி லிச்சை வைப்பார்களா? ஆடவர்கள் மிகவும் விருப்பங்கொண்டு தங்கள் மனதுக் கெட்டிய உவமைகளைக் கூறும் ஸ்தனங்கள் இடுகாட்டில் நாய்கள் விரும்பு மிரைகளல்லவா? கூந்தலென்னும் புகையை யுடைத்தாயிருப்பதாலும் கண்ணென்னும் சுவாலையை யுடைத்தாயிருப்பதாலும் பாவமேயுருவெடுத்து வந்தாற் போன்ற பெண்ணை அக்கினியென்று சொல்வது குற்றமாகாது. அக்கினி தனக்கு முன்னெதிர்ப்படும் விறகுகளை யெரித்துச் சாம்பராக்குவது போல, பெண்ணென்னுந் தீயும் தனக்கு முன்னெதிர்ப்படும் எவ்வித ஆடவர்களையும் நீறாக்கி நரகத்திற்றள்ளும். இன்னும் மன்மதனாகிய வேடன் ஆடவராகிய பட்சிகளைப் பிடிப்பதற்கு பெண்களாகிய வலைகளை வீசுவான். மனமென்னும் வலைஞன் பிறவியென்னுங் குளத்தில், ஆடவரென்னும் மீனைப்பிடிப்பதற்கு காலமென்னுந் தூண்டிலில்பெண்ணென்னு மிரையைக் குத்துவான். இவ்விதமான பெண்களில் ஆசை வைப்பது எவ்வளவு மதியீனம். அதுவுமன்றி மகளிர் போகத்தால் ஆடவர் ஆண்மை கெட்டு, வியாதியும் மூப்புங்கொண்டு விரைவில் மடிவார்கள். ஆகையால் அப்படிப்பட்டபெண்களை விரும்புவது, அவிவேகம். பெண்ணிச்சை யொழியின் மனிதர்களிற் காணப்படும் மற்றைய விச்சைகளனைத்தும் நாமமாத்திரையாய் முடியும்.

சு. நீர் சொல்லியவைகளனைத்தும் காலத்திற் கட்டுப்பட்டவைகளாகையால் காலத்தைப்பற்றி யென்ன சொல்லுகின்றீர்?

சி. சமுத்திரசலத்தைப் பானஞ் செய்யும் வடமுகாக்கினியை (Subterranean fire) ப்போல, காலமும் உலகத்திலுள்ள எவற்றையுந் தனக்கிரையாக்கும். அரசர்க்கரசனாயிருப்பினும் பிரமாதி தேவர்களா யிருப்பினும் மிகவுமுயர்ந்த மலையா



யிருப்பினும் ஒன்றையுந் தப்பவிடாது காலமழிக்கும். அவ்வளவு சக்தியுள்ள காலத்தை மதித்து நடப்பதால் யாதும் பிரயோசனமின்று.

தான் கேட்ட கேள்விகளுக்குத் தக்கவிடைகளை யளித்ததனால், சித்தகுமாரன் ஞானோபதேசம்பெறக்கூடிய பக்குவத்தை யடைந்தானெனக்கண்டும், சுவாமியார்தனது குருசுவாமிகளிடம் அழைத்துக்கொண்டு போகாது, அவரந்நிலை தவறாது நிற்பாராவென, இன்னுஞ் சோதனை செய்ய வெண்ணி, சிலகாலங்கழிய விட்டார். அன்றியும் சித்தகுமாரனைப்பற்றித் தானறிந்த வுண்மைகளை, அவருடைய சகோதரன் மானதாசனுக்காவது, நண்பர்கள் காமதாசனுக்காவது, ஆணவதாசனுக்காவது, ஞானோதய வித்தியாசாலையிற் கூடும் ஏனையோருக்காவது, சுவாமியார் அறிவிக்கவில்லை. ஆகவே அவர்களனைவரும் அவரது உண்மைநிலை தெரியாது அவரைப்பற்றிப் பேதமாய்விளங்கிக்கொண்டார்கள்.

## ௨௨-ம் அத்தியாயம்.

ஒருநாள் ஞானோதய வித்தியாசாலையிற் கூடுபவர்கள், சுவாமியாரை நமஸ்கரித்து, விடுதலை நாட்களுக்குமுன், அவர் தங்களைக் கேட்ட வினாக்களுக்குத் தகுந்த விடைகள் தங்களுக்குத் தெரியாதபடியால், அவைகளுக்கு விடைகளைக் கூறி, மயக்கமான விடைகளைத் தங்களுக்கு விளங்கப்படுத்த வேண்டுமென விரந்து கேட்டார்கள். சுவாமியார் அதற்கியைந்து பின்வருமாறு கூறினார்.

அன்பர்களே! நான் விடைகளைக் கூறுமுன் மெய்கண்டதேவரருளிச் செய்த சிவஞானபோதத்திலுள்ள, அவையடக்கப் பாவைச் சொல்லி, அதேயெனது அவையடக்கமுமென வறிந்து கொள்ளும்படி கோருகின்றேன்.

### சிவஞானபோதம்—அவையடக்கம்.

தம்மை யுணர்ந்து தமையுடைமை தன்னுணர்வார்
எம்மையுடைமை யெமையிகழார்—தம்மை
யுணராருணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

இ-ள். தம்மை உணர்ந்து-தம்மை (தம்முடைய தேகத்தினின்று அன்னியமென்று) அறிந்து, தமைஉடைமை தன் உணர்வார்-தம்மை (யடிமையாக) வுடைய வீசனை யறிந்தவர்கள், எம்மை உடைமை-எம்மை (யடிமையாக)வுள்ளவர்கள், எமை இகழார்-(ஆகையால்) எம்மை யிகழமாட்டார்கள். தம்மை உணரார்-தம்மை யறியாதவர்கள், உணரார்-(தாம்பாசபந்தராய் நிற்கின்ற முறைமையையும் அந்தப்பாசம் நீங்கக் கடவுளுணர்த்தும் முறைமையையும்) அறியார், உடங்கு இயைந்து-இவர்கள் கூடிப்பொருந்தி, தம்மில் புணராமை - தம்மில் முரணுவர், கேளாம் புறன்-(ஆகையால்) அவர்களுடைய புறன் கூற்றைக் கேளோம்.

(பொழிப்பு. வேதாகமங்களை நன்கு கற்றறிந்த ஞானிகள் குற்றமிருப்பினும் குற்றஞ் சொல்லார். ஏனையோருடைய பழிப்புரைக்கு நாம் செவி கொடோம்).

இன்னும் விடைகளை யாரம்பிக்குமுன் அவைகளை நன்றாய் விளங்கக்கூடிய சிலவுண்மைகளை ஆதாரமாகக் கூறி அதன்பின் அவ்விடைகளைக் கூறின் நீங்கள் அவைகளை நன்றாய் விளங்கிக் கொள்வீர்கள்.

ஓ, ஒப், ஆம் என்னும்பதங்கள் உடன்பாட்டைக் குறிக்கும் சொற்களாம். உடன்பாட்டைக் கூறுமிடத்துச் சிலர் "ஓ" எனவும், சிலர் "ஓம்" எனவும் வேறு சிலர் "ஆம்" எனவும் கூறுவதை நீங்களனைவரும் அறிவீர்கள். இன்னும் நாமொருவரைக் கூவியழைக்கும் பொழுது, அவர் தனது சமுகத்தை யறிவிக்கும்பொழுது இப்பதங்களி லொன்றையே யுபயோகிப்பர். ஆகவே இப்பதங்கள் எவர்களாலும் ஒவ்வொருநாளும் எந்நேரமும், உபயோகிக்கப்படுகின்றன. வேறெந்தப்பதமாவது இவ்வளவு உபயோகமுள்ளதாய்த் தோற்றவில்லை. ஆகையால் இவைகள் மிகவிசேஷம் பெற்றவையென வெண்ணக்கிடக்கின்றன. எங்களுடைய வாழ்நாட்களில், இப்பதங்கள் உபயோகிக்கப்படாத நாட்களே கிடையா. பிறப்புத் தொடக்கம் இறப்புவரைக்கும் இந்தச் சொற்களை நாங்களொவ்வொரு



வரும் அனந்தமுறை யுபயோகிக்கின்றோம். இயற்கையாக இப்பிரயோகம் நடந்து வருவதால், இயற்கைக்கும் இப்பதங்களுக்கும் யாதோ சம்பந்த மிருக்க வேண்டுமென வூகிக்கக் கிடக்கின்றது.

இன்னும் இப்பதங்களின் சத்தம், எங்களில் மாத்திரம் உண்டாவதன்றி, அண்டத்திற் சதா தொனித்துக்கொண்டிருக்கின்றது. மனச்சாந்தமடைந்தவர்களும், ஐம்புலனொடுக்கமுள்ளவர்களும் "ஓம்" என்னும் ஒலியைச் சதாகேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். சங்கீத வித்துவான்கள் இசைக்கருவிகளுடன் பாடும்பொழுது, தங்கள் குரலோசையை இசைக்கருவியினோசையுடன் கலக்கவிட்டு, தாங்கள்பாடாதிருப்பதுபோல, ஞானிகளும் தங்களிடமிருந்து, ஸ்மரணையின்றி யெழும் "ஓம்" என்னுமொலியை, அண்டத்திலெழும் "ஓம்" என்னு மொலியுடன் கலக்கவிட்டு, அதைச் செவிப்படுத்திக்கொண்டு அவ்வொலியில் அமிழ்ந்துகின்றார்கள். (அப்பினுப்புக் கரைவது போல=நீரினுப்புக்கரைந்து நீராவது போல). அவ்வொலியின் காரியமாகிய நாங்கள், காரணமாகிய வொலியிற் கலப்பது நூதனமல்ல. அவ்விதமாகக் கலக்கும் மனநிலையுள்ளவர்களுக்கு அண்டபிண்டங்களில் நடக்கு மெவ்வித சம்பவமும் புலப்படுவதில்லை.

சாமானியரும் ஏகதேசமாய் அவ்வொலியைக் கேட்பதுண்டு. ஆனால், அதையின்னதென வுணராதும், தம்புலனைச் செலுத்தி யதனை யாராய்ச்சி செய்யாதும், உலகவிவகாரங்களிற் றம்புலனைச் செலுத்துகின்றார்கள். இதைச் சுட்டியே, இயேசுக்கிறிஸ்துநாதர் "கண்ணிருந்துங் காண்பதில்லை, காதிருந்துங் கேட்பதில்லை" என்று சொல்லியிருக்கின்றார்.

தங்கள் வாழ்நாட்களில், இதுகாறும் அண்டத்தில் நிகழும் "ஓம்" என்னும் ஒலியைக் கேட்டிராதவர்கள், இனிமேலாவது அவ்வொலியைச் செவிப்படுத்த முயலவேண்டும். முயல்வாராயின், அது பேரின்ப வீட்டுக்குச் செல்லும் வழியைக் காட்டும். அவ்வொலி ஓய்வில்லாது ஒலித்துக்கொண்டிருப்பதால் அது

எவ்விடத்திலிருந்து உற்பத்தியாகின்றதென்றும், எப்பொழுது ஆரம்பித்ததென்றும், எப்பொழுது ஒயுமென்றும், அறிவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

நானிப்பொழுது உங்களுக்குச் சொல்லப்போகுமுண்மைகள் அநுபவிகட்கு நன்றாய் விளங்கும். ஆகையால் அவர்கள் அவைகளைப்பற்றி யாட்சேபிக்க மாட்டார்கள். ஏனையோர் அநுமானிப்பதே யன்றி, அநுபவத்திற் காணாதபடியால், பூரணமாய் விளங்கிக்கொள்ளமாட்டார்கள். இவ்வுண்மைகள் சிருட்டி முறையைக் கூறும் சாத்திரங்களிற் காணப்படும். இச்சாத்திரங்கள் பூதபௌதிக சாத்திரம், ரசாயனசாத்திரம், வானசாத்திரம் சோதிடசாத்திரம், தருக்க சாத்திரம் முதலிய சாத்திரங்களைப் போல; சகலமதத்தருக்கும் சகலசாதியாருக்கும், சகல தேசத்தவர்களுக்கும் பொதுவானவை. அவைகள் சைவசமயிகட்கே யுரிமையானவைகளெனக் கூறுவது அறிவின்மையாகும். இந்தியர்கள், அனேகவாயிர வருஷங்களுக்குமுன், இவ்வுண்மைகளை யாராய்ச்சி செய்து, சோதனை செய்து, அநுபவத்தில் உண்மைகளெனக்கண்டு, நூல்களை யியற்றியிருப்பதால், அந்நூல்கள் தங்களுக்கே யுரியனவெனக் கற்றறிந்த இந்தியர்கள் சொல்ல மாட்டார்கள்.

நாஸ்திகம், நபாதிகம் பேசும் நிரீச்சுரவாதிகளையும் லோகாயுதர்களையும் தவிர, ஏனைய சகலமதத்தர்களும், அண்டபிண்டங்களையும், அவைகளிலுள்ள சராசரமனைத்தையும் தோற்றுவிப்பதற்கு ஓர் வஸ்துவிருக்கின்றதென ஒத்த முடிபினராய்க் கூறுகின்றார்கள். அவ்வஸ்து, பரப்பிரமம், பரமாத்மா, பரமசிவம், ஜெகோவா, அல்லா, முதலிய பலபெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. அந்த வஸ்துவே, சிருட்டி, திதி, சங்காரம் முதலியவைகளுக்குக் காரணமாயிருக்கின்றது. சகலமதத்தருங் கூறும் இலட்சணங்கள் முழுவதும், அவ்வஸ்துவிலொருங்கே யமைந்திருக்கின்றனவெனச் சொல்வது தவறாகாது. நிற்க,

அவ்வஸ்துவுக்கு சக்தியுண்டு. சக்தியின்றி வஸ்துவில்லை. வஸ்துவின்றிச் சக்தியில்லை. வஸ்துவும் சக்தியும் ஒன்றேயா



யினும், அவைகள் குணமுங்குணியுமென விரண்டாக்கிக் கூறப்பட்டிருக்கின்றன (அக்கினியும் சூட்டையும் போல). சைவசமயிகளும் அதற்குச்சார்பான மற்றைய சமயிகளும், குணியை ஆணாயும், குணத்தைப் பெண்ணாயும் உருபிக்கின்றனர். கிறிஸ்த சமயிகள் குணியைப் பிதாவாயும் குணத்தைப் பரிசுத்த ஆவியாயும் உருபிக்கின்றனர். நாமபேதமிருப்பினும், எவரும் வஸ்துவும் சக்தியுமிருப்பதாக ஒப்புக்கொள்ளுகின்றனர்.

மேனாட்டாருக்கு (ஐரோப்பிய, அமெரிக்கர்களுக்கு) சிருட்டிமுறை தெரியாது. Darwin முதலிய பண்டிதர்கள் சிருட்டி முறையில், இப்பூமியிலுள்ள சீவராசிகளைப்பற்றி மாத்திரம் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். அவ்வாராய்ச்சிகளும் தூலபதார்த்தங்களைப் பற்றியனவேயாம். அவர்கள் தங்கள் கருவிகளைக்கொண்டு தூலவுலகத்தைச் சோதனை செய்து தூலபதார்த்தங்களை நன்றாய்ச் சோதனை செய்திருக்கின்றார்கள். தூலகருவிகளைக் கொண்டு, தூலபதார்த்தங்களைச் சோதனை செய்யலாமே யன்றி, சூக்குமவுலகத்தையும் அதிலுள்ள சூக்ம பதார்த்தங்களையும் சோதனை செய்ய முடியாது. மேனாட்டாரிடம் தற்காலத்துள்ள தூலகருவிகளும், இயந்திரங்களும் சூக்ம சோதனை செய்யவுதவா. சூக்மவுலகமும் அதற்குச் சேர்ந்தவைகளும், சூக்ம கருவிகளாலேயே சோதனை செய்யப்பட வேண்டியன.

பரதகண்ட வாசிகள் (இந்தியர்கள்) அனேகவாயிரவருஷங்களுக்குமுன், சூக்மவாராய்ச்சிசெய்து, அதிநுட்பமானவுண்மைகளைக் கண்டுபிடித்து, லோகோபகாரமாய் அவைகளை யெழுதி வைத்திருக்கின்றார்கள். அவ்விதஞ் செய்தவர்கள் ஞானிகளும் சித்தர்களுமே. அவர்களுடைய ஆதாரங்களைக் கொண்டே, பின்வருமுண்மைகள் கூறப்பட்டிருக்கின்றன.

வஸ்துவிலுள்ள சக்தியை, பரையென்றும், மாயையென்றும்மூலப்பிரகிருதியென்றும், காலதத்துவமென்றும்மகதத்துவமென்றும் இன்னும் பலவாறாகப் பலருங் கூறுகின்றார்கள். அச்சக்தி, வஸ்துவின் ஸ்மரணையின்றி யசையும் பொழுது சத்த

முண்டாகின்றது. (சத்தம், ஒலி, யென்பவைகளின் பரிபாஷா பதம்நாதம்). அந்த நாதமே சிருட்டிக்குக்காரணமானது. தர்க்க நூலின்படி காரணமின்றிக் காரியமில்லை. ஆகவே, நாதமாகிய காரணமின்றி, அண்டபிண்ட சராசரங்களாகிய காரியமில்லை. நாதம் சக்தியின் காரியமாயிருப்பதாலும், சக்தி வஸ்துவின் காரியமாயிருப்பதாலும் வஸ்துவே எவற்றிற்கும் மூலகாரணமாயிருக்கின்றது. சிலவிடங்களில் வஸ்துவையும் சிலவிடங்களில் சக்தியையும், சிலவிடங்களில் நாதத்தையும் காரணமாகக்கூறியிருப்பினும் அவைகளனைத்தும் ஒன்றையே கருதுமென வெண்ணவேண்டும்.

மேலே கூறப்பட்ட நாதமே, சகல சீவராசிகளிலும் இயல்பாக வுண்டாகும் ஒலியும், அதன்விரிவுமாகும். சகலசீவர்களும் பிறந்தவுடன் "அ" வென வாயைத்திறக்கின்றன. அப்பொழுது "அ" என்னும்ஒலியுண்டாகின்றது. அவ்வொலியானது அடங்கியுதித்தவிடத்தே நிற்கும். விரியும்பொழுது அதாவது இடம் விட்டுப் பெயரும்பொழுது "உ" எனத் திரிந்து அண்டபிண்டங்களைத் தாக்கும். அதுபோலவே, வஸ்துவிலுள்ள சக்தியானது வஸ்துவின் ஸ்மரணையின்றி யசையும்பொழுது, "அ" என்னும் ஒலியுண்டாகி அடங்கி நிற்கும். அது இந்தவெளியிற் பெயரும்பொழுது, "உ" என விகாரப்பட்டு, அண்டபிண்ட சராசரங்களனைத்திலும் உலாவும். அனைத்திலும் வியாபித்து அவைகளைத் தாக்கவே, சிருட்டி யாரம்பமாகின்றது. *

"அ" "உ" என்பவைகளாலாகும் நாதமே அண்டபிண்ட சராசரங்களில்சதாதொனித்துக்கொண்டு, சிருட்டி திதிகளுக்கு காரணமாயிருக்கின்றது. "அ" என்னும் ஒலியையும், "உ" என்னும் ஒலியையும்ஒருமித்துஉச்சரிக்கும்பொழுது "ஓ" என்னும்

* விதை வஸ்துவுக்கும், அதிலடங்கியிருக்கும் முளை, யிலை கொப்பு முதலியவை சக்திக்கும், முளைத்தற்குரியகாலம் அசைவுக்கும் "அ" என்னும் ஒலி முளைப்பதற்குப் பொருமினவிதைக்கும் "உ" என்னும் ஒலி மூவிலைகளோடு தோற்றும் முளைக்கும் நிகரானவைகளென்று ஞானிகள் கூறியிருக்கின்றார்கள்.



ஒலியுண்டாகின்றது. (அ + உ = ஓ. லோக + உபகாரம் = லோகோபகாரம் என்பது போல.) நாம் சிருட்டிகள் இயல்பாக வாயைத் திறக்கின்றனவென்று முன்னே கூறியிருக்கின்றோம் அச்சிருட்டிகள் இயல்பாக வாயை மூடும்பொழுது மேலுதடும் கீழுதடும் பொருந்தி, "ம்" என்னும் ஒலி பிறக்கின்றது. (மீகீழிதழுறப் பமமப் பிறக்குமென்றார் நன்னூலாரும்). இந்த "ம்" என்னும் அட்சரம்பரிபாஷையில் ஊமையெழுத்தென்று சொல்லப்படும். 'அ' என்னும் ஒலியும், "உ" என்னும் ஒலியும்முறையே சிருட்டி திதிகளுக்குக் காரணமாயிருப்பது போல, "ம்" என்னும் ஒலி, சங்காரத்துக்கு (ஒடுக்கத்துக்கு)காரணமாயிருக்கின்றது. இவைகளைப்பற்றி, மிகவிரிவாயும் நுட்பமாயு மறிய விரும்புபவர்கள், சற்குருவை யண்டி, அவரிடத்து நூல்களை முறையாகக் கற்க வேண்டும். "கற்க கசடறக் கற்பவைகற்றபின்நிற்கவதற்குத்தக" வெனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் கூறியபடி தாங் கற்பவைகளைச் சந்தேக விபரீதமறக் கற்று தெளிந்தபின் அவைகளைத் தங்களனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும். அனுபவத்துக்கு ஒத்துப்போகாத வுண்மைகளை, அவைகள் சுருதிகளிற் கூறப்படினும்,நாங்களங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை. ஞானிகளாற் கூறப்பட்டிருக்கும் பின்வருங் கவிகளை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

ஞானக்கும்மி.

1. நாதவிந்தல்லோ நால்யோனிதச
நாதவிந்தல்லோ வெழுதோற்றம்
நாதவிந்தா லுடலுயிரும் பர
நந்தியைப் போற்றடி ஞானப்பெண்ணே.

(நாதவிந்தே, நால்வகை யோனிகளுக்கும் எழுவகைத் தோற்றங்களுக்கும் உடலுயிர்களுக்கும் காரணமானது).

சிவவாக்கியர்.

2. அகார காரணத்திலே யனேகனேக ரூபமாய்
உகார காரணத்திலே யுருத்தரித்து நின்றனன்
மகார காரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகார காரணத்திலே தெளிந்ததே சிவாயமே.

(அ+உ+ம்=ஓம்=சிவாய. அ, உ, ம் என்னும் மூன்றட்சரங்களினொலிகளே, அண்டபிண்டங்களின் தோற்றம், லயம், ஒடுக்கங்களுக்குக் காரணமாயிருக்கின்றன).

ஞானக்கும்மி.

3. ஓங்காரமான பிரணவத்தா ளோங்கு
முயர்ந்த சோமகலை நிறத்தாள்
ரீங்காரமான பராசத்தியை நீங்கள்
நேர்ந்து கும்மி யடியுங்கடி.

(ஓங்காரமே பிரணவமென்றும், (பரை) பராசத்தியே ஓங்காரமான நாதவுற்பத்திக்குக் காரணமா யிருக்கின்றதென்றுங் கூறுகின்றது )

4. விரைந்து சொல்லுவன் மூன்றெழுத்தாற் சகம்
விரிந்துதா னுயிருண்டாச்சு
தெரிந்து கண்டவர்களுக் காவலை
தீட்சையிதல்லவோ ஞானப்பெண்ணே.

(அ, உ, ம், என்னும் மூன்றட்சரங்களால், சகந்தோன்றி, உயிருண்டாயது.)

5. அவ்விட்டே யுவ்விட்டே மேற்சுழியில்
அங்கியை விட்டுக் காலாலே
மவ்வுட்டு நாதலிந்துட் பொருளைக் கண்டு
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி.

சிவவாக்கியர்.

6. அவ்வெனு மெழுத்தினா லகண்டமேழுமாகினாய் (அருவம்)
உவ்வெனு மெழுத்தினா லுருத்தரித்து நின்றனை (உருவம்)
மவ்வெனு மெழுத்தினால்மயங்கினார்கள்வையகம் (ஒடுக்கம்)
அவ்வுமுவ்வுமவ்வுமாயமர்ந்ததேசிவாயமே. (அ+உ+ம்=சிவாய)

(அண்டபிண்டங்களின் தோற்ற வொடுக்கங்களைப்பற்றிக் கூறியிருக்கின்றது. பிரணவமே=பஞ்சாட்சரம்.)



ஞானக்கும்மி

7. (1) நவ்வெழுத்தே பிரமனுக்கு மதில் ... (ந=பிரமன்=சிருட்டி)
நாரணன் மவ்வெழுத்தானே ... (ம=விஷ்ணு=திதி)
சிவ்வெழுத்தே தெய்வவுருத்திரனுஞ் (சி=உருத்திரன்=சங்காரம்)
செப்புவன் கேளடி ஞானப்பெண்ணே.

(2) செப்பவே வவ்வுமகேசுரனும்வட்டஞ்...(வ=மகேசுரன்=மறைப்பு)
சேர்ந்த யகாரஞ் சதாசிவனும் ...(ய=சதாசிவன்=அருளல்)
தப்பிலாத வைந்தெழுத்தாலேசராசரந்
தங்கியிருந்தது ஞானப்பெண்ணே.

("நமசிவய" என்னும் பஞ்சாட்சரமே சிவேசுரர்களுடைய தோற்றத்துக்குக் காரணமானது. சூக்கும சிருட்டிமுறை கூறப்பட்டிருக்கின்றது.)

சிவவாக்கியர்.

8 நவ்விரண்டு காலதாய்நவின்றமவ்வயிறதாய் (ந=கால்கள், ம=வயிறு)
சிவ்விரண்டுதோளதாய்சிறந்தவவ்வுவாயதாய்(சி=தோள்கள், வ=வாய்)
யவ்விரண்டு கண்ணதாயெழுந்துநின்றநேர்மையிற் (ய=கண்கள்)
செவ்வையொத்து நின்றதே சிவயமஞ்செழுத்துமே.

(தேகம் பஞ்சாட்சர சொரூபம். தூலசிருட்டி கூறப்பட்டிருக்கின்றது )

9. மூலமென்ற மந்திர முணர்த்த வஞ்செழுத்துளே
நாலுவேத நாவுளே நவின்ற ஞான மெய்யுளே
ஆலமுண்ட கண்டனு மரியயனு மாதலால்
ஓலமென்ற மந்திரஞ் சிவாயமல்லதில்லையே.

("ஓம்" என்பது பிரணவமென்றும், மூலமந்திரமென்றுஞ் சொல்லப்படும்.

அ, உ, ம். என்பனமுறையே, பிரம, விஷ்ணு, உருத்திரரைக் குறிக்கும்.

அ, உ, ம். என்பன முறையேசிருட்டி, திதி, சங்காரத்தைக் குறிக்கும்.

முன்னே கூறியபடி "சிவய" என்னும் மந்திரமும் இவைகளையே குறிக்கும்.

ஆகையால் "ஓம்" என்னும் மந்திரமும், "சிவய" என்னும் மந்திரமும் ஒன்றே. பேதமில்லை)

சிவவாக்கியர்.

10. ஓரெழுத்திலிங்கமா யோது மட்சரத்துளே
ஓரெழுத்தியங்குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே.

(அ, உ, ம், என்னும் அட்சரங்கள் "ஓம்" என ஒலிக்கும். "ஓம்" என்பதில் "ம்" ஊமையட்சரம். எஞ்சியது "ஓ" என்னு மட்சரமே. ஆகையாலேஓரெழுத்தெனக்கூறப்பட்டிருக்கின்றது. "ஓம்" என்னும் மந்திரமும் "சிவாய" என்னும் மந்திரமும் தனித்தனி திரிமூர்த்திகளைக் குறிக்கும்.)

வாலைத்தும்மி.

11. ஓமென்ற வட்சரந்தானு முண்டதற்கு
ஊமையெழுத்து மிருக்குதடி
நாமிந்தெழுத்தை யறிந்துகொண்டோம், விளை
யாடிப்பாரடி வாலைப்பெண்ணே.

(வாலை=பரை=பராசக்தி. "ஓம்" என்னும் மந்திரத்தில், "ம்" என்னுமட்சரம் ஊமையெழுத்து.)

அனந்தந்திரட்டு.

12. எப்பொழுதுந்தானாகி யிலங்கிடப்படுவானீசன்
அப்படிவிளங்குகின்ற தறிதலே பரன்றனக்கு
மெய்ப்படு பூசைவேறோர் செயலினாலன்றுமெய்யே
யிப்படிஞானந்தன்னா லிறைஞ்சிடப்படுவானீசன்.

(எப்பொழுதும், தானாகி விளங்குகின்ற வீசனை, அவ்விதம் விளங்குகின்றாரென வுள்ளபடியறிதலே, அவருக்குச் செய்யும் உண்மையான பூசையாகும். உண்மையான பூசை வேறியாதுந் தொழிலினாலல்ல. இதுவுண்மை. இவ்விதமாக, வீசன் ஞானத்தால் வணங்கப்படுவான்.)



திருவாசகம்.

13. நிலநீர் நெருப்புயிர் நீள் விசும்புநிலாப்பகலோன்
புலனாய மைந்தரோடெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகேழெனத்திசைபத்தெனத் தானொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கமாடாமோ.

* (நிலம், நீர், நெருப்பு, உயிர், ஆகாயம், சந்திரன், சூரியன் மைந்தர் ஆகிய அட்ட முகூர்த்தங்களிலுங் கலந்து நின்றான் அந்தவீசன். சகல தோற்றமும் ஈசனுடைய முகூர்த்தங்களெனச் சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது.)

சுப்பிரமணியர் ஞானம்.

14. ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்றபர சிவமுமாகி
சோதியென்ற சிவனிடமாய் சத்தியாகித்
தொல்லுலகி லெழுவகையாந் தோற்றமாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்த பரிபூரணமாய் நிஷ்களமுமாகி
சாதியென்ற சத்திசிவமருள் தன்னாலே
சண்முகனுங் கணபதியுந் தானுண்டாச்சே.

வால்மீகர் ருத்திரஞானம்.

15. இருள்வெளியாய் நின்றசிவபாதம் போற்றி
எழுத்தினுட விபரத்தை விரித்துச் சொல்வேன்
அருவுருவாய் நின்றதுவே யெழுத்ததாகும்

---

* இதன் கருத்தை விளங்காது சில மேனாட்டார் சைவ சமயிகளை (Pantheists) இயற்கை வணக்கக்காரரென இகழ்ந்து கூறுகின்றார்கள். ஒன்றை விளங்கக்கூடிய சக்தியும் பக்குவமுமில்லாதவர்களின் கூற்றை, அறிவாளிகள் விசரின் வெற்றுச் சொல்லென மதிப்பதே யன்றி, வேறுயர்தாயும் மதியார்கள். ஆகவே, அறிவாளிகள் அவர்கள் கண்டனங்களுக்கு மௌனஞ் சாதிப்பர். அதைக்கண்டு விடைபகர வகை தெரியாது, விழிக்கின்றாரென நினைத்து, மேனாட்டார் செருக்குறுவர். அவ்விதமான மேனாட்டாருக்கும் சிறுபாலர்களுக்கும் யாதும்பேதமிருக்கின்றதாவென நம்மவர்கள் சிந்திப்பார்களாக.

ஆதியந்த மண்டபிண்ட மதுவேயாகும்
திருவுருவாய் ரவிமதியாய் நின்றரூபம்
சிவசத்தி திருமாலின் ரூபமாகும்
வருமுருவே சிவசத்தி வடிவமாகும்
வந்ததிலும் போனதிலு மனதைவையே.

மேலே கூறப்பட்டிருக்கும் உண்மைகளையும், இன்னு மனேக வுண்மைகளையும், ஞானிகளும் சித்தர்களும் லோகோபகாரமாய்ப் பாடியிருக்கின்றார்கள். அவைகளைக் கற்று அவைகளின் உண்மைப்பொருளைத் தெரிந்தவர்களிடங் கேட்டு, அறிவது உங்கள் கடனாகும். நான் இதுகாறும், தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் பற்றிச் சொன்னேன். இனிமேல் தோற்றத்துக்குமூலகாரணமின்னதென்பதையும், தோற்றம் எப்பொழுது ஆரம்பித்ததென்பதையும், பற்றிச் சிலவற்றைக் கூறுவேன்.

தோற்றத்துக்கு மூலகாரணம் ஒடுக்கம். (அடங்கிநிற்றல்) ஒடுக்கம் சக்தியிலியல்பாயுள்ளது. வஸ்துஎப்பொழுதுள்ளதோ சக்தியெப்பொழுதுள்ளதோ, அப்பொழுது ஒடுக்கமுமுள்ளது. வஸ்து அநாதியாயுள்ளதால், ஒடுக்கமு மநாதியாயுள்ளதெனச் சொல்வதே யன்றி, வேறெவ்விதமாயும் சொல்லமுடியாது. அங்ஙனமன்றி விசாரிக்கப்புகின், அது தாலபீஜ நியாயமாய் முடியும்.

சக்தியில், அண்டபிண்ட சராசரங்களின் அமைப்புகள் அடங்கியிருக்கின்றன. ஒருசிறிய ஆலம் விதையில், ரத, கச, துரக, பதாதி யென்று சொல்லப்படும் நால்வகைச் சேனைகளுக்கும் நிழல் தரக்கூடிய ஒரு பெரிய ஆலவிருட்சத்தின், இலை, தளை, கொம்பு முதலியன எவ்வித மடங்கியிருக்கின்றனவோ, அவ்விதமே, சக்தியில் அண்டபிண்ட சராசரங்களும் அவைகளின் விரிவுகளும் அடங்கியிருக்கின்றன. அவை உரியகாலத்திற்றோற்றி, ஒடுங்குங் காலத்திலொடுங்கும்.

ஆதலால், தோற்றத்துக்குத் தொடக்கங் கூறுவது தவறாகும். ஆட்சேபிப்பவர்கள், அக்கினிக்குச் சூடு எப்பொழுது ஆரம்பமானதெனக்கூறுவாராக. சிருட்டிகள், தோன்றியொடுங்



குவது இயல்பாகும். ஒடுக்க காலங்களில் சீவர்கள் தொழிலற்று சக்தியிலொடுங்கி யிருக்கும். விரியுங் காலத்திலே, ஒடுங்கின முறைப்படி விரிந்து தோற்றும். இத்தோற்றம் எண்ணில்லாத முறை நடந்திருக்கின்றது. அவ்விதமாகிய தோற்றமுண்டாய ஓர் காலத்தையே சிற்றறிவுள்ள நாங்கள் சிருட்டி யாரம்பமெனக் கூறுகின்றோம்.

நாம் முன்னே கூறியபடி வஸ்து எப்பொழுதுள்ளதோ அப்பொழுதே பஞ்சகிருத்தியமு முண்டாயிருக்க வேண்டும். தோற்றத்துக்கு ஒடுக்கமே காரணமென்பது சிவஞான போதத்தில் க-ம் சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

சிவஞானபோதம். க-ம் சூத்திரம்

அவனவளதுவெனு மவைமூவினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி யென்மனார் புலவர்.

இ-ள். அவன் அவள் அது எனும் அவை-அவனென்றும், அவளென்றும், அதுவென்றும், சொல்லப்படும் (பிரபஞ்சத்திலுள்ள சராசரங்கள்) அனைத்தும், மூவினைமையின்-(சிருட்டி திதி சங்காரம் என்னும்) மூன்று தொழில்களையு முடைமையால், தோற்றிய திதியே ஒடுங்கி-(தனக்குக் காரணமாயமாயையினின்று) தோற்றிய விதமாக ஒடுங்கி, மலத்து உளது ஆம்-(மீளவும்) சகசமலத்தாலுண்டாம், அந்தம் ஆதி-(ஒடுக்கமே தொடக்கமாம்), அதற்குக் கர்த்தா அந்தத்திலுள்ளார், என்மனார்புலவர்-என்று அறிவாளிகள் சொல்வார்கள். (புலம்=அறிவு, புலவர்=அறிவாளிகள்).

இன்னும் இப்பிரபஞ்சம், சக்தியினு லெவ்வித முண்டாகின்றதென்றும், அச்சக்தி சிருட்டிமுறையில், ஒவ்வொரு கிரியையையும் செய்யும்பொழுது, என்ன என்ன பெயருடன் என்ன என்ன கிரியையைச் செய்கின்றதென்றும், மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவெம்பாவை யென்னும் பாசுரத் தொகுதியிற் கூறப்பட்டிருக்கின்றது. நீங்கள் அதைப் படித்து, அதன் தத்துவார்த்தத்தைத் தெரிந்தவர்களிடங் கேட்டுத் தெளிவீர்களாக.

நான் முன்னே கூறியபடி, நாதமே சகத்தோற்றத்திற்குக் காரணமாயிருக்கின்றது "ஓம்" என்பதே யந்த நாதம். சைவ சமயிகள், அதை "ஓம்" எனவும், முகமதியர்கள், "ஓ" எனவும் கிறிஸ்தவர்கள் "ஆமென்" எனவும் உபயோகிக்கின்றார்கள். சைவர்கள் "ஓம்" என்பதைத் தங்கள் செபங்களில் மூலமந்திரமாயுபயோகிக்கின்றார்கள் முகமதியர் தங்கள் பள்ளிகளிற் றொழும்பொழுது, "ஓ" வென உரத்து உச்சரிக்கின்றார்கள். கிறிஸ்தவர்கள், தங்கள்வீடுகளிலும், ஆலயங்களிலும் மற்றையவிடங்களிலும், செபமுடிவில், "ஆமென்" எனச் சொல்லுகின்றார்கள். "ஆமென்" ஆம் என்பதன் திரிபு. "ஓம்" என்பதற்குப் பதிலாக, "ஆம்" என்பது சில சைவநூல்களில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. "ஆமென்" எனபது எபிரேயபாஷைப்பதம். அது "அப்படியாகட்டும்" என்னும் உடன்பாட்டுப் பொருளையுடையது. "ஓம்" "ஆம்" என்பவைகளின் பொருளுமதுவே. ஆகையால், "ஓம்" என்பதும் "ஆமென்" என்பதும், அந்த நாதத்தையே சுட்டும்.

நான் மேலே கூறியவிதமாக, மேனாட்டாருக்கு நாதத்தைப் பற்றியும், அண்டபிண்டங்களின் தோற்றத்தைப் பற்றியும், அவைகளின் தொடர்பைப் பற்றியும் தெரியாவிடினும் ஞானோதயமான சிலபுலவர்கள், தங்கள் செய்யுட்களில் இந்த வுண்மைகளை ஆங்காங்கே கூறியிருக்கின்றனர் அவ்விதமான செய்யுள்களிலொன்றே, ௧௧-ம் அத்தியாயத்திற் கொடுபட்டிருக்கின்றது. அது, ஆங்கில புலவசிகாமணியும், வரகவியுமாகிய ஷேக்ஸ்பியர் என்பவராற் பாடப்பட்டது.

இவைகளைச் சொல்லி முடிக்கவும், காலாதீதமானதால், சுவாமியார், விடைகளை இன்னொருநாள்கூறுவதாகவாக்களித்து சபையாரைத் தத்தம் வீடுகளுக்கேகும்படி கற்பித்தார். இச்சபைக்கு, சித்தகுமாரன் சமுகமளிக்கவில்லை. அவர் ஒருவருடனும் பேசாது தூரத்தே தனியனாயிருந்து, யாதோ சிந்தித்துக்கொண்டிருந்தார்.



## ௨௩-ம் அத்தியாயம்

வாக்குப்பண்ணியபடி, சுவாமியார், ஞானோதய வித்தியாசாலையில் அனைவருங்கூடியிருந்த ஓர்நாள் பின்வரும் விடைகளைக் கூறினார்.

௧-வது. யோவான் எழுதிய சுவிசேஷம்.

௧ம் அதிகாரம். வசனங்கள். 1—5.

* 1. In the beginning was the word and the word was with God and the word was God.

ஆதியிலே நாதமிருந்தது. அந்தநாதம் கடவுளிடத்து ஒடுங்கியிருந்தது. அந்த நாதமே கடவுள்.

---

* உண்மைப்பொருளை விளங்காது, பதப்பொருளுக்கியைய ஒன்றை மொழிபெயர்க்கின், அது வாக்கியத்தின் பொருளைக் கொடாது. சூக்குமவுலகவறிவில்லாத ஐரோப்பிய பண்டிதர்கள், எபிரேய, கிரேக்க பாஷைகளில், எவ்வளவு பாண்டித்திய மடைந்திருப்பினும், சூக்மபதார்த்தங்களை யனுபவத்திற் கண்ட ஞானிகளின் பரிபாஷைவாக்கியங்களைச் சரியாக மொழிபெயர்க்க மாட்டார்கள். பண்டிதர்கள் தங்கள் விவேகத்துக்கு மறிவுக்கு மெட்டியவரையில் ஆங்கிலத்திலும் ஏனைய பாஷைகளிலும் செய்திருக்கும் மொழிபெயர்ப்பு, முதனூற் கருத்தைச் சரியாகவுணர்த்துமோவென ஐயப்படவேண்டியிருக்கின்றது. அவ்வித மொழி பெயர்ப்புக்கு எவ்வளவு விருத்தியுரை கூறுகினும் அதனால் ஓர் பிரயோசனமு மின்று.

தமிழிலே யுள்ள பரிபாஷை வாக்கியங்களையனேக தமிழ்ப் பண்டிதர்கள் விளங்காது முட்டுப்படுவதை நாம் கண்டிருக்கின்றோம். அதுபோல, ஐரோப்பிய பண்டிதர்களும் விளங்காது மலைவுறுவரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எபிரேய கிரேக்க பாஷைகளில் வல்ல இந்திய ஞானிகள் அப்பாஷைகளிலுள்ள விவிலிய நூலை மொழிபெயர்ப்பரேல், அது சனோபகாரமாயிருக்கும். விவிலிய நூலைப்பற்றிய கண்டனங்களும் ஒழிந்துவிடும்.

[வார்த்தை பரிபாஷைப்பதமல்ல. நாதமே பரிபாஷைப் பதம். ஆகையால், word என்பதை நாதமென மொழி பெயர்த்தாம். ஆனால் சிலதமிழ்ப் பாக்களில் "சொல்" என்னும் பதம் உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. உதாரணமாக, இடைக்காட்டுச் சித்தர்பாடல். "எல்லாவுலகமு மெல்லாவுயிர்களு, மெல்லாப் பொருள்களு மெண்ணரிய, வல்லாளனாகிய பரமசிவனது,சொல்லாலாகுமேகோனரே". இவ்வசனத்தில், word என்பதாற் கருதப்பட்டது. "ஓம்" என்னும் பிரணவமே. சிருட்டி முறையில் நாதமே முதற்றத்துவம். சக்தி தொழிற்படாதபொழுது சக்தியெனவும், தொழிற்படும்பொழுது நாதமெனவும் கூறப்படும். கடவுளும் சக்தியும் ஒன்றெனச் சொல்லப்பட்டபடி, நாதம் கடவுளெனக் கூறப்படுவதாற் குற்றமில்லை ஆகையால் விவிலிய நூலிற் கூறப்பட்டிருக்கும் "the word was God" என்னும் வாக்கியம், சாத்திரங்களுக்கு ஒத்த முடிபுள்ளது.]

2. The same was in the beginning with God.

அதே யாரம்பத்தில் கடவுளிடத்து ஒடுங்கியிருந்தது.
(கருத்து வெளிப்படை)

3. All things were made by **him**; and without **him** was not anything made that was made.

சராசரங்களனைத்தும், அதனாலாயது. அஃதின்றி, ஆக்கப்பட்ட தொன்று மாக்கப்படவில்லை. (அண்டபிண்ட சராசரங்களனைத்தும் நாதகாரியம். காரணமாகிய நாதமின்றிக் காரியமாகிய அண்டபிண்டங்களும் அவைகளிலுள்ள வனைத்துமில்லை.) இந்தவாக்கியம்,

எல்லாவுலகமு மெல்லாவுயிர்களு
மெல்லாப் பொருள்களு மெண்ணரிய
வல்லாளனாகிய பரமசிவனது
சொல்லாலாகும் கோனரே. என்னும் இடைக்காட்டுச்சித்தர்பாவுக்கு ஒத்திருக்கின்றது.

4. In him was life; and the life was the light of men.

அதில் ஆத்மா வொடுங்கியிருந்தது. சீவாத்மாவே மணிதரிற் ஜொலிக்கும் ஒளி.
(ஒடுங்கியிருக்கும் ஆத்மா உருவெடுத்துத் தன்னை விளக்கும்.



5. And the light shineth in darkness; and the darkness comprehends it not.

அந்தவொளி, மாயையாகிய இருளினுள்ளிருந்து ஜொலிக்கின்றது. அந்தவிருள், அதினுள்ளும் புறம்பும் சலக்காது அதைச் சுற்றியிருக்கின்றது.

(பசு, பாசபந்தமுள்ளது. அதாவது பாசத்தினாற் கட்டுப்பட்டிருக்கின்றது. இருந்தும், உள்ளேயிருந்துகொண்டு, தனதியல்பாகிய அறிவென்னும் ஒலியைச்சொலிக்கின்றது. வாளுறைபோல் பாசம் பசுவைச் சுற்றியிருக்கும்).

நான் ஆரம்பத்திற் கூறியவுண்மைகள், மேலே சொல்லப்பட்ட வாக்கியங்களை நன்கு விளக்கும். ஆகையால் அவைகளுக்கு விருத்தியுரை யவசியமின்று.

௨-வது. மஸ்தான் சாகிபு அவர்கள் பாடல்.

நிராமயக்கண்ணி.

எட்டிரண்டு மின்னதென்று மேழையறியாதபடி
வெட்டவெளியில் பேதையென விட்டாய் நிராமயமே.

எட்டுஇரண்டும்-தமிழ்ப்பாஷையிலேஎட்டென்னும் இலக்கத்தைக் குறிக்கும் "அ" என்னுமட்சரத்தையும், இரண்டென்னுமிலக்கத்தைக் குறிக்கும் "உ" என்னு மட்சரத்தையும், இன்னது என்று—இன்னபொருளை யுணர்த்துகின்றனவென்று...... மற்றவை வெளிப்படை.

கண்மணியாலைக்கண்ணி.

நாதவிந்தாய் நின்றதுவும் நானென்றுபதேசங்
காதிலுரைத்தருளாய் கண்ணே பராபரமே.
(நாதத்தைப்பற்றிக் கூறியவுண்மைகள், இதை நன்குவிளக்கும்.)

௩-வது. ஷேக்ஸ்பியர். ௨-ம் றிச்சேட் அரசன்.

௫-ம் பாகம். ௫-ம் காட்சி. 1—9. வரிகள்.

I have been studying how I may compare
This prison where I live into the world;

5

And for because the world is populous
And here is not a creature but myself
I cannot do it; yet I'll hammer it out,
My brain I'll prove the female to my soul,
My soul the father; and these two beget
A generation of still-breeding thoughts
And these same thoughts people this little world.

This prison where I live—ஆத்மனுகிய நான்குடியிருக்கும் இந்தக் கூட்டை (பிண்டத்தை), into the world—இந்தப்பூவுலகமாகிய அண்டத்துக்கு, how I may compare—எவ்விதமாக வுவமிக்கலாமென, I have been studying—நான் சிந்தித்துக்கொண்டிருக்கின்றேன், And for because the world is populous—அண்டத்திலே சீவராசிகளிருப்பதாலும், and here is not a creature but myself—இங்கே (பிண்டத்தில்) என்னை (ஆத்மாவை) யன்றி, வேறொரு வஸ்துவு மின்மையாலும், I cannot do it—நான் உவமை கூற முடியாது (அண்டமும் பிண்டமும் ஒன்றிற்கொன்று ஒத்தவைகளெனச் சொல்ல முடியாது), yet I'll hammer it out—இருந்தும் இயன்றளவு பிரயாசப்படுவேன், my brain the female to my soul—என்மனம் (புத்தி) எனது ஆத்மாவின் சக்தியென்றும், my soul the father—எனது ஆத்மா காரணகருத்தாவென்றும், and these two—ஆத்மாவும் மனமுமாகிய இவ்விரண்டும், breed a generation of still-breeding thoughts—எப்பொழுதும் விருத்தியாகிக் கொண்டிருப்பதும், ஒன்றிற்கொன்று தொடர்புள்ளதுமான மனோசங்கற்பங்களை, விர்த்தியாக்கும், and these same thoughts people this little world—இந்த மனோசங்கற்பங்களே இந்தச்சின்ன வுலகமாகிய பிண்டத்திற் (தேகத்திற்) குடியிருக்கும்.

(அண்டத்திலே (macrocosm), வஸ்துவுஞ் சக்தியுங் கூடி, சகல தோற்றங்களையு முண்டாக்குவது போல, பிண்டத்திலே (microcosm) ஆத்மாவும் மனமுங்கூடி, சங்கற்பங்களைச் செய்யும்.)

உவமான உவமேயங்கள்.

1. அண்டம்=பிண்டம். 3. சக்தி (மாயை)=மனம் (புத்தி).
2. பரமாத்மா=சீவாத்மா. 4. சிருட்டிபேதங்கள்=மனோசங்கற்பங்கள்.

௪-வது $a^{\circ}=1.$

'a' என்பதைப் பொருளெனமதியாது, சூனியமான தோற்றன்மாத்திரையே யென நினைக்க, வஸ்துவாகிய ஒருபொருளே



தோற்றும். எதுபோலவெனின், உலகத்திலுள்ள சிருட்டிகளனைத்தும், பரப்பிரமமேயன்றி வேறொன்றுமல்லவென நினைக்க அவை பரப்பிரமமாய்த் தோற்றும். ("பார்த்தவிடமெல்லாம் பரமன்காணம்மானை" என்றார் மாணிக்கவாசக சுவாமிகளும்.)

பின்வருங்கவி, மேலே கூறப்பட்ட தாட்டாந்த (data) திருட்டாந்தங்களை (demonstrata) நன்குவிளக்கும்.

திருமூலர் திருமந்திரம்

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தில்மறைந்தது பார்முதற்பூதம்.

(கருத்துவெளிப்படை)

௫-வது. ஞானசூரியனாய் விளங்கும் நியாயாதிபதிக்கு, மின்மினிக்கொப்பான நியாயவாதிகளின் சகாயந் தேவையில்லை. வாதி, பிரதிவாதிகளின் வாதையும், பிரதிவாதையும், ஒருவர் சொல்லாது, தாமேயறியக்கூடிய நியாயாதிபதியவர்களுக்கு நியாயவாதிகளாற் பிரயோசனமில்லை.

௬-வது. தேகத்திலுண்டாகும் எவ்விதநோயும் மனது சம்பந்தமானது. அதை நோக்கியே, விசுவாசமில்லாதவர்களுக்கு வைத்தியஞ் செய்யப்படாதென வைத்திய சாத்திரங்கூறும். மனம் ஒருமைப்படின், நோயுங்குணப்படும். காயமும்வச்சிரமாகும். ஆகையால் மனதை யலையவிடாது, ஒருவழிப்படுத்துகின், அதாவது பிரவிர்த்தியிற் செல்லவிடாது தடுக்கின், நோய்குணப்படும். மனதைப் பிரவிர்த்தியிற் செல்லவிடாது தடுத்தலைச் சிந்தாத்தியாகமெனப் பரிபாஷையிற் கூறுவர். ஆகவே, சிந்தாத்தியாகம் ஔஷதமாகின்றது. சிந்தாத்தியாகமென்னும் திவ்விய ஔஷதம், தேகசம்பந்தமான எவ்விதநோய்களையுங் குணப்படுத்தும். வித்தையில் அதியுன்னத நிலையை யடைந்திருக்கும் ஜேர்மன் வைத்திய பண்டிதர்களின் கருத்துமிதுவே.

இந்த விடைகளைக் கேட்டு, சபையிலிருந்தவர்கள் கரகோஷ்டஞ்செய்து, ஆனந்தமடைந்தார்கள். பலபல சாத்திரநிபுணர்களும், சமயவாதிகளும், இவ்விதமான அரியவுண்மைகளைத் தாங்கள் ஒருகாலமுங் கேட்டதில்லை யென்றும், சுவாமியார் கூறியவிடைகள், தருக்கம், தத்துவசாத்திரம், அனுபவம் முதலியவைகளுக்கு ஒத்தமுடிபுள்ளவைகளா யிருக்கின்றனவென்றும், தங்களுக்குட் பேசிக்கொண்டார்கள்.

## ௨௪-ம் அத்தியாயம்

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடி யுள்ளத்துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோடிருந்திருவா தனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.
(பட்டினத்தடிகள்)

சித்தகுமாரன், தனது சகோதரன் மானதராசனோடாவது தனது நண்பர்கள் காமநாதன், ஆணவநாதன் என்பவர்களோடாவது, வார்த்தையாடாது, தனியே யுட்காருவதும், உலாவுவதுமா யிருந்தார். எவர்களாவது யாதுங் கேட்பின், ஒன்றும் பேசார். அக்காலத்தில் வைராக்கியநாதனே யவருக்குவந்த நண்பர். அவருடன் அந்தரங்கமாய்ப் பேசுவதும், அவருடன் கூடித்திரிவதுமே சித்தகுமாரனுக்கு விருப்பமாயிருந்தது. எவராவது, அவரை வைராக்கியநாதனைவிட்டுப் பிரிக்கப்பிரயாசைப்படின், அவர் வைராக்கியநாதனுடன் கூடிக்கொண்டு வெளியே போய்விடுவார். யாவராவது, அவர்களைப் பின்றொடரில், இருவரும் ஓடி ஒருவருடைய கண்களுக்கும் புலப்படாது மறைந்துவிடுவார்கள். பிரதானமாக, சனங்கள் நுழையமுடியாத பற்றைகளுக்குள்ளும், போக்குவரவில்லாத தனியிடங்களிலும், தமியராயிருந்து சம்பாஷிப்பார்கள். ஆகையால் அவர்கள் இன்னது பேசுகின்றார்களென்றும், இன்ன யோசனை செய்கின்றார்களென்றும், ஒருவராலுமறிய முடியவில்லை. அவர்களுடைய அந்தரங்கம் சுவாமியாருக்கு மாத்திரம் விளங்கும். அவர் அதை யொருவருக்கும் வெளிவிடவில்லை.



இவ்வாறாகச் சித்தகுமாரன் காலங்கழிக்கும் பொழுது, சனங்கள் அவருடைய உண்மை நிலையை யறியாது, தங்கள் தங்கள் மனப்போக்கிற் கியையப் பலவாறாகவும் பேசிக்கொள்வார்கள். சிலர் அவருக்குப் பித்தந் தலைக்கேறிக்கொண்டது. புளிநெய் வைத்து தலையிலிருந்து பித்தத்தை யிறக்கினாலன்றிப் புத்திதெளியாதென்பர். சிலர் அநேக நூல்களைக் கற்றதினால் மூளை பெலவீனமுற்றது. சிலகாலம் ஆறுதலாயிருந்தால், குணப்படுவாரென்பர். சிலர் அவரிதுகாறும், மிகச்சன்மார்க்கமுள்ளவராயிருந்தவர். தெய்வ சங்கற்பத்தால், யாரோவொரு பெண்ணைக்கண்டு மோகங்கொண்டதால், சித்தப்பிரமை கொண்டாரென்பர். சிலர் அவருடையமனதிலே யாதோவொருமர்மமிருக்கவேண்டும். அதனாலே யுலகத்தைவெறுத்துத் திரிகின்றாரென்பர்.

பலரும் பலவாறாகப் பேசினும், மானதராசனும், காமநாதனும், ஆணவநாதனும் என்ன செய்வதெனத் தெரியாது, மனங்கலங்கித் துக்கப்பட்டார்கள். அல்லும் பகலும் அவர்களுக்கு அவருடைய கவலையே யதிகரித்தது. அவரை யங்கிங்கு போகவிடாது, அவருக்குப் பின்னே தொடர்ந்து செல்வார்கள். எங்கேயாவது ஓடிப்போவாரோவெனப் பயந்து, அவரைக் காத்துத்திரிவார்கள். அவர் என்ன என்ன செய்கின்றாரெனக் கவனித்துப்பார்ப்பார்கள். அவருடைய செய்கைகளும், போக்குகளும் விசர்த்தனமானவை யென்றெண்ணுவார்கள். காமநாதனும், ஆணவநாதனும் மானதராசனுக்கு என்னவுதவிகள் செய்யவேண்டுமோ, அவைகளைத் தவறாது செய்து வந்தார்கள்.

சித்தகுமாரன் முன்னே செய்து வந்ததுபோல, காமநாதனும் ஆணவநாதனும் ஒழுங்காக ஆலயதரிசனம் முதலியவைகளைச் செய்துவந்த சிலமாதங்களில், முன்னிருந்த குணங்கள் முழுவதும் மாறி, நற்குண நற்செய்கைகளுள்ளவர்களாய் வந்தார்கள். தங்கள் கடமைகளை முடித்தபின், வீண்வாதங்களிலும் பயனற்றவிடம்பங்களிலும் தங்கள்காலத்தைப் போக்காது சமயநூல்களைக் கற்பதிலும், அவைகளை யாராய்ச்சி செய்வதிலும், தங்களுக்கெழும் சந்தேகங்களைக் கேட்டுத்தெளிதலிலும் கழித்து வந்தார்கள். அதனால் சனங்கள் அவர்களை மதிக்கத் தொடங்கினார்கள்.

அவர்களவ்விதமான நன்னிலைக்கு வருவதற்குக் காரணராயிருந்த சித்தகுமாரன் அவர்களுடன் சேராதும், பேசாதும் தமியனாய்த் திரிவது, அவர்களுக்கு மிக்க விசனத்தைக் கொடுத்தது. அவர்கள் தங்கள் காலம் முழுவதையும், ஆத்மலாபத்திற்காகச் செலவழிக்க முடியாமலிருந்தது. ஏனெனில் அவர்கள் சித்தகுமாரனைக் குணப்படுத்தி, அவரை அவர் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு சிலகாலத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது.

சிலவேளைகளில், சித்தகுமாரன் தனியேபுறப்பட்டு வைராக்கியநாதனுக்குப்பின் மிகவேகமாய் நடப்பார். வைராக்கியநாதனோ, மிகவுந் துணிந்தவர். திடமுள்ளவர். ஒன்றுக்குமஞ்சாதவர். எவரும் அவரை யெதிர்க்கப் பயப்படுவார்கள். ஈசனும் முன்னிற்கமாட்டான். இயமனும் அவரை யணுக அஞ்சுவன். அவ்விதகுணமுள்ள வைராக்கியநாதனைமானதராசனும் அவரது நண்பர்களுமென்செய்வர்? வைராக்கியநாதன் சித்தகுமாரனை அடர்ந்த காடுகளுக்குள் நுழையப் பண்ணுவார். மலைகளிலேறச் செய்வர். நீரின்மேலும், நெருப்பின் மேலும் அச்சமின்றி நடக்கச்செய்வர். தனது துணைகொண்டால், சித்தகுமாரனுக்குச் செய்யமுடியாத தொன்றுமில்லையென அவரை யெண்ணப்பண்ணுவர். சித்தகுமாரன் அவ்விதஞ் செய்துவருங்காலத்தில் மானதராசனும் அவரது நண்பர்களும் அவர்களைத் தடுக்கப் பயந்து அவர்களுக்குப் பின்னே சென்று, அவர்கள் செய்வதைத் தூரத்தே நின்று பார்ப்பார்கள்.

அதனால் மனமலுத்து அவர்கள்சித்தகுமாரனை வைராக்கியநாதனை விட்டுப் பிரித்தாலன்றி, தாங்களொன்றும் செய்யமுடியாதெனவும், சித்தகுமாரனைக் குணப்படுத்த முடியாதெனவுங் கண்டார்கள். எவ்விதமாகப் பிரிக்கலாமென யோசனைசெய்தார்கள். வைராக்கியநாதனுக்குக் கிட்டப்போவதற்குப் பயப்படுபவர்கள் அவர்களை எங்ஙனம் பிரிக்கக்கூடும்? ஈற்றில் தங்களாலதைச் செய்ய முடியாதெனக் கண்டு, சுவாமியாரிடஞ் சென்று அவருக்குத்தங்கள் முறையீடுகளைச் சொன்னார்கள். சுவாமியார் அவர்களை நோக்கிப் பின்வருமாறு அருளிச் செய்தார்:—



நீங்கள் மூவரும் செய்யும் யோசனைகள் தவறானவை. சித்தகுமாரனை வைராக்கியநாதனைவிட்டுப்பிரிக்கவெண்ணுவது புத்தியீனம். உங்களால் அதுமுடியாத காரியம். அன்றி அவர்களைப் பிரிக்கமுடியுமெனினும் அதுகேடாய் முடியும். சித்தகுமாரன் வைராக்கியநாதனை விட்டுப் பிரியுங்காலத்தில் சித்தகுமாரன் உங்களுக்குதவார். ஆகையால்நீங்கள்சித்தகுமாரனையும் வைராக்கியநாதனையும் பிரிக்க முயலவேண்டாம் இன்னுஞ் சிலகாலத்தில் சித்தகுமாரன் குணப்படுவார். முன்னிலும்உயர்ந்தநிலைக்கு வருவார். அப்பொழுது வைராக்கியநாதனை விட்டுத் தானே பிரிவார். அதுவரையும் வைராக்கியநாதனுடைய சகாயம் சித்தகுமாரனுக்குத் தேவை. சித்தகுமாரன் உன்னத நிலையையடையும்பொழுது நீங்கள் மிகவுஞ் சந்தோஷமடைவீர்கள். முன் நீங்கள் அவரிடத்தில் அனேகவரிய வுண்மைகளைக்கற்றது போல இன்னுஞ் சிலகாலத்தில் அவரிடமிருந்து மிகவந்தரங்கமான விஷயங்களை யறிந்து நீங்களும் மேனிலையையடைவீர்கள். அது நிச்சயம். ஆகையால் நீங்கள் ஒன்றிற்கு மஞ்சவேண்டாம்.

சுவாமியார் சித்தகுயாரனுடைய நிலையைப் பற்றிப் பரிபாஷையிற் பேசினாரேயன்றி அவர்களுக்குப் புலப்படக்கூடிய தெளிவான பாஷையிற் கூறவில்லை. இருந்தும் சுவாமியாரிடம் அவர்கள் கொண்ட வன்பினாலும் நம்பிக்கையினாலும் அவர் சொல்லியவற்றை நம்பி சித்தகுமாரனையும் வைராக்கியநாதனையும் பிரிக்கவேண்டுமென்னுமெண்ணத்தை யொழித்து அவர்கள் முன்னடந்ததுபோல நடக்க விட்டுவிட்டார்கள்.

இது நிகழுங்காலத்தில், சித்தகுமாரன் ஊணுடைகளைக் கவனியாது, வைராக்சியநாதனே தனக்குத் தஞ்சமென்றெண்ணி அவரைப் பின்றொடர்ந்தார். மானதராசன் அவரை வலிந்து கூட்டிவந்து உணவூட்டுவார். உடை தரித்துவிடுவார். சித்தகுமாரனோ, கிடைத்ததைப் புசித்து, நித்திரை வந்தவிடத்திற் படுத்துறங்கி, பித்தம் பிடித்தவர்கள்போற்றிரிந்தார்.

## ௨௫-ம் அத்தியாயம்.

முன்னொருநாள், சுவாமியார், ஞானோதயவித்தியாசாலையிற் கூடியிருந்தவர்களுக்கு சமயத்தைப்பற்றி யோருபந்நியாசஞ் செய்வதாக வாக்களித்திருந்தார். உபந்நியாசஞ்செய்யுமத்தினம் வந்தது.

வைகாசிவிசாகம். பூரணைநாள். கௌதமபுத்தர் பிறந்த தினம். குமரக்கடவுள் அவதரித்த நட்சத்திரம். ஆகவே அத்தினம் சைவசமயிகட்கும், புத்த சமயிகட்கும் ஓர்விசேஷநாள். அரசினர் விடுதலைநாள். அன்று எவர்களும் தத்தம் வீடுகளிற் றங்கி விசேஷகொண்டாட்டம்நடத்துவார்கள். அத்தினத்திற்கு முதனாள் மேற்கூறப்பட்ட உபந்நியாசஞ் செய்யப்படுவதற்கு ஏற்றநாளாக நியமிக்கப்பட்டது.

சூரியனஸ்தமிக்க ஐந்துநாழிகைக்குமுன், பற்பல கிராமங்களினின்றும், சனங்கள் திரளாகவந்து கூடினார்கள். ஞானோதய வித்தியாசாலையினுள்ளும் புறம்பும் எள்ளிடவிடமின்றி சனங்கள் வந்தீண்டினார்கள். தென்றற்காற்று கணகண வென்று வீசியது. சந்திரன் தனது குளிர்ந்தகிரணங்களை வீசி, ஒளிபரப்பி, இருளை யோட்டியது. வித்தியாசாலையினுள் தீபங்களேற்றப்பட்டு இரவைப் பகலாக்கின. இந்த நேரத்தில் சுவாமியார் எழுந்தருளி வந்தார். சபையிலிருந்த வனைவரும் எழுந்து நின்று அவரை நமஸ்கரிக்கவும், அவர் அவர்களைக் கையமர்த்தி யாசனத்திருத்தியபின், பின்வருமாறு பேசத் தொடங்கினார்.

அன்பர்களே!

நானிப்பொழுது, சமயம் என்னும் விஷயத்தில் அத்தியாவசியகமானவைகளை யெடுத்து, அவைகளைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவேன். சமயத்தைப்பற்றி நன்குயறிய விரும்புபவர்கள், சிறிது சிறிதாகஆராய்ச்சியுடன் அறிந்தவர்களிடம் பாடங் கேட்கவேண்டும். அன்றி, உபந்நியாசத்தைக்கேட்டு, அதனால் முழுவதையு மறியவியலாது. அதுவுமன்றி நான் இங்கே ஒரு சமயத்தைப்பற்றி மாத்திரம் கூறவில்லை. சகல மதத்தருக்கும் பொதுவானவைகளையே எடுத்துக் கூறுவேன்,

42064



சமயம் என்னும்பதம், மார்க்கம், மதம் முதலிய ஒரு பொருளையும், வேளை, காலம் முதலிய இன்னொரு பொருளையுங் கொள்ளும். நானிங்கு கூறும் சமயம் என்பது மார்க்கம், மதம் என்பனவாதியபொருளுள்ளதே. மார்க்கம், மதம்என்பன சமயம் என்னும் பதத்தின் பொருளைச் சரியாகவுணர்த்தா. அதன் பொருளைத் தமிழ்ப்பாஷையிலுள்ள வேறெந்தப் பதமும் விளக்காது. அதற்கு அதே பொருளென்று சொல்வதேயன்றி, எவ்விதமாயும் வாக்கினாற் சொல்ல வியலாது. அதன் பொருளை மனதினாலனுமானிப்பதே யன்றிச், சொல்லுதலரிதாகும். அது கருதும் பொருளை யுணர்த்துவதற்குத் தமிழ்ப் பாஷையில் மாத்திரமல்ல, வேறெந்தப் பாஷையிலும் ஏற்ற பதங் காண்பதரிது.

சமஸ்கிருதத்தில் வல்ல தமிழ்ப்பண்டிதர் சிலர், "சமயம்" என்னும் பதத்தை, சம்+யம், எனப் பதச்சேதஞ் செய்து, அதற்கு, சம்=இன்பத்தை (பேரின்பத்தைப் போலும்) யம்=கொடுப்பது எனப் பொருள்கொள்வர். வேறுசிலர் சம+யம் எனப் பதச்சேதஞ் செய்து, சம=ஒரே தன்மைத்தான(நிலையை) யம்=கொடுப்பது எனப்பொருள்கொள்வர். இவைகள் பொருத்தமான பொருள்களோவெனச் சிந்தித்துப் பார்ப்பீர்களாக. "சமயம்" என்னும்பதம், ஆரியத்திலிருந்து உற்பத்தியானதென்றெண்ணி, அதற்குத் தாது, மூலம் முதலியவைகளைக் கண்டுபிடித்து, தங்களறிவுக்கெட்டிய பொருளைக் கொண்டார் போலும்.

"சமயம்" என்னும்பதத்தை வலிந்து பதச்சேதஞ் செய்து, அதற்கு வலிந்து பொருள்கொள்ள, எங்கள் பண்டிதர்களை யேவிய காரணம் நமக்குப் புலப்படவில்லை. தமிழ்ப்பாஷையிலுள்ள பதங்களனைத்தும், சமஸ்கிருதபாஷை மொழிகளென்னு மபிப்பிராயத்தாலோ, அன்றி, ஆரியர்கள் அநாகரிகளாயிருந்த காலத்து, அவர்களுடைய மிருகக் குணத்துக்குப் பயந்து, இவர்களுடையமுன்னோர், அவர்களைநயவசனங்களாற் றம்வயப்

படுத்திவந்த பழக்கத்தினாலோ, அன்றித் தங்கள் பூர்வத்தை நன்றாயாராய்ச்சி செய்யாத மூடத்துவத்தாலோ, யாமறியேம். இதைப்பற்றிக் கற்றறிந்ததமிழ்மக்கள் இனிமேலாவது ஆராய்ச்சி செய்வார்களாக.

மனிதனின் மனதிலெழும் எவ்வித எண்ணங்களையும், வெளிப்படுத்துவதற்கு, தமிழ்ப் பாஷையில் ஏற்ற பதங்களும் வாக்கியங்களும் காணப்படும்பொழுது, சமஸ்கிருத பாஷைப் பதங்களையும், வாக்கியங்களையும், தமிழ்ப்பாஷையில் உபயோகிக்கவேண்டிய அவசியமின்று. இந்தப்பொருள் கந்தப்புராணத்திலுமில்லையென எவராலும்புகழப்படும், கந்தப்புராணத்தையும், லௌகிகத்தில் மனிதனுக்குத் தேவையான சகலவறிவுகளையும் தம்மிடத்துக்கொண்டிருக்கும், பாரதம், இராமாயணம்முதலிய இதிகாசங்களையுமியற்றிய நூலாசிரியர்கள், தங்கள்பாடல்களில் சமஸ்கிருத பதங்களை யுபயோகித்திருக்கின்றார்களா? தங்கள் மனதிலுதித்த வெண்ணங்களை வெளியிடுவதற்கு ஏற்றபதங்களின்றி முட்டுப்பட்டனரா? தமிழிலக்கியத்தில், விசேஷ காவியங்களாகக் கூறப்பட்டிருக்கும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காவியங்களில், சமஸ்கிருத பதங்களுபயோகிக்கப்பட்டிருக்கின்றனவா? சமஸ்கிருத பண்டிதர்கள் இவைகளை யாராய்ச்சி செய்வார்களாக.

தற்காலத்தில், ஆங்கிலபாஷை, உலகத்திலுள்ள சகல பாஷைக்காரரோடும் சம்பாஷிக்க உபயோகப் படுத்தப்படுவதுபோல, முன்னொரு காலத்திலே, இந்தியாவிற் குடியிருந்த சகல பாஷைக்காரரும், சமஸ்கிருத பாஷையை சகலருக்கும் பொதுவான பாஷையாக உபயோகித்து வந்தார்கள். தமிழ்ச் சாகியத்தாருள் அவதரித்த ஆதிசங்கராசாரியாரவர்கள், அவருடைய காலத்தில், இந்தியாவிலிருந்த சகல சாதியாருக்கும் சகல பாஷைக்காரருக்கும் பயன்படுமாறு நூல்களை யியற்றுவதற்கும், பாஷியஞ் செய்வதற்கும், உபந்நியாசஞ் செய்வதற்கும் ஆரியத்தையே யுபயோகித்தார். அன்றி, தமிழ்ப் பாஷையில் தனது எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற பதங்களும் வாக்கியங்களும், இல்லாமை பற்றியன்றென்க. அவருக்கு நிக



ரான சமஸ்கிருத பண்டிதர்கள் முன்னுமில்லைப் பின்னுமில்லையெனலாம். அவரியற்றிய நூல்களிலும், பாஷியங்களிலும், உபந்நியாசங்களிலும், தமிழ்ப்பாஷையிலுள்ள பதங்களையும் வாக்கியங்களையும், அத்தியாவசியகமெனக் காணுமிடத்து, உபயோகஞ் செய்திருக்கின்றாரா வென, நமது சமஸ்கிருத பண்டிதர்கள், ஆராய்ச்சிசெய்து பார்ப்பார்களாக. அவருடைய நூல்கள் மாயாவாத நூல்களெனக் கற்காது விடுவது விவேகிகளின் இலட்சணமல்ல. களவுங்கற்றுமறவென்றார் ஏனையோரும்.

தமிழிலும், ஆரியத்திலும், ஒரே பொருளுள்ள ஒரேவிதமான பதங்களனேகவாயிரமுண்டு. அவைகள் ஆதியில் தமிழுக்கா அன்றி ஆரியத்துக்காவுரியன வென ஆராய்ச்சி செய்வது கற்றவர்களின் கடமையாகும். பழைய பாஷைகளினின்று புதிய பாஷைகள்தேவையான பதங்களையும் வாக்கியங்களையுமெடுத்து உபயோகிப்பது உலகவியல்பு. ஆகவே, தமிழோ, ஆரியமோ முந்தியதென வாராய்வது ஆவசியகமாகின்றது.

இவ்விரண்டு பாஷைகளையும் நன்குகற்று அவைகளை யாராய்ச்சி செய்தவர்கள், விசேஷமாய் பட்சபாதமற்ற மேனாட்டுப்பண்டிதர்கள், தமிழே முந்திய பாஷையெனக் கூறுகின்றனர். ஆகையால் தமிழ்ப் பாஷையிலிருந்தே ஆரிய பாஷைக்குத் தேவையான பதங்களும் வாக்கியங்களும் ஆரிய பாஷைக்காரரால் எடுக்கப்பட்டன வென்பது தானே புலப்படும். ஆகவே, தமிழ் ஆரியம் என்னுமிரு பாஷைகளிலுங் காணப்படும் பொதுப் பதங்கள் ஆதியிலே தமிழுக்கே யுரியன வென்று சொல்வது தகுதியாகும். ஆராய்ச்சிசெய்யாது, இதைப்பற்றியாட்சேபித்தல் மூடத்துவம்.

காரியமிவ்வாறாக, சமஸ்கிருதங்கற்ற தமிழ்ப்பண்டிதர்கள் தமிழ்ப்பதங்களை யெடுத்து, தம்மனம்போனவாறு பதச்சேதஞ் செய்வதும், பொருள் கொள்வதும், அழகல்ல. பொருத்தமில்லாத பொருளைக் கூறுவதாலும், திரிபுபொருளைக் கூறுவதாலும் சாமானியர் உண்மைப் பொருளை யறியாது பேதவிளக்கமுள்ளவர்களாகின்றார்கள். அன்றியும் சமஸ்கிருதங்கற்காத ஆசிரியரும்

மாணவரும் இவர்களைநம்பிமோசம்போகவேண்டியிருக்கின்றது. முயற்கொம்பு தேடுவார்போல, தமிழ்ச் சொற்களுக்கு சமஸ்கிருத தாது, மூலம் முதலியவைகளைத் தேடுவதிற் றங்கள் காலத்தைக்கழிப்பதால், தமிழ்ப்பாடங்களைத் தங்கள் பரீட்சைகளுக்குப் படிப்பதற்கு வேண்டிய காலத்தையும்வீணாக்குகின்றார்கள். அன்றியும், தமிழ்ச் சாகியத்தார் தமக்கெனவோர் சிறந்தபாஷையில்லாதவர்களென்றும், அவர்களிடத்துச்செப்பமான விலக்கணவிலக்கியங்களிருந்திருக்க வில்லையென்றும், ஆகவே, அவர்கள் பூர்வத்தில் நாகரிகம் படைத்திருக்கவில்லை யென்றும், அன்னிய சாதியினர் அவர்களை யவமதிக்கச் செய்வது தமிழ்ப்பண்டிதர்களுக்கழகல்ல. குலத்துக்கீனம் கோடரிக் காம்பென்பதுபோல, தமிழ்ப்பண்டிதரே தமிழ்ச் சாகியத்தாருக்கு ஈனத்தைவிளைவிக்கின்றார்கள். இதுவல்லவோ கலியின் புதுமை.

அறிவாளிகள், சமயம் என்னும் பதம், சம்+மயம், என்னுமிருபதங்களாலுமாயது என்பர். சம்-தனக்கெனவோர்பொருளில்லாது, மயம் என்னும் பதத்தின் பொருளை வலியுறுத்தும் பொருட்டு உபயோகிக்கப்பட்ட பதமென்பர். (சம் என்பதற்கு தனக்கெனப்பொருளில்லை யென்பதை ஆசங்கிப்பவர்கள், பூரணம், சம்பூரணம், பந்தம், சம்பந்தம் முதலியவைகளை யொப்பிட்டுப் பார்ப்பாராக). குணம், தன்மை, நிறம் என்பன மயம் என்பதற்குப் பொருளாய்க் கூறப்படினும், அவை யதனர்த்தத்தைச் சரியாக வுணர்த்தமாட்டா. சொரூபம், வடிவம் என்பன அதன்கருத்தையொருவாறு உணர்த்தும்.

சிலர், சமயம் என்னும் பதத்தை, ச+மயம் எனப்பிரித்து அதற்கு, ச-ஒத்த, மயம்-மயம், எனப் பொருள்கொள்வர். (பட்சம்-சபட்சம் முதலியவற்றைப் போல).

மேலே கூறப்பட்டிருக்கும் இருவித அர்த்தங்களும் பொருத்தமானவை. அவைகளை யங்கீகரிப்பதால், ஒருமதத்தரும் இழிவடையார் ஆகவே, சமயம்-மயமாயிருத்தல், ஒத்தமயமாயிருத்தல் எனப் பொருள்படும். (அதே சொரூபமாயிருத்தல் என்பது அதன்கருத்து). சிவமயம்-சைவசமயம் என்பதன் மரூஉ வெனச் சிலர் கூறுவர். (அகப்பை, எப்பை யெனப்பட்டாற் போல).



கருட மந்திரத்தைச் செபிப்பவர்கள், நாளடைவில், கருடமயமாவதுபோல, ஒரு சமயத்தை, விதிப்படி யனுசரிப்பவர்கள் அச்சமயக்கடவுள் மயமாவாரென அதனாற் பெறப்படுகின்றது. அதுவே சகல சமயிகளின் சாஸ்திர முடிபும். இதனுண்மை, அனுபவிகட்கே நன்றாய் விளங்கும்.

உலகத்திலுள்ள சகலசமயங்களும்மூன்றுவகைகளுளடங்கும்.

௧-வது. ஆஸ்திகம். (Theism- ஈச்சுரவாதம்)- சைவசமயம் வைஷ்ணவசமயம், கிறிஸ்தசமயம், முகமது சமயம் முதலியன.

௨-வது. நாஸ்திகம். (Atheism-நிரீச்சுரவாதம்) -லோகாயுதம் (Materialism), சூனியவாதம் (Nihilism) முதலியன.

௩-வது. நபாதிகம். (Agnostism-ஐயவாதம்) (உண்டோவில்லையோவெனச் சந்தேகித்தல்).

மேலே கூறப்பட்டவைகளில், எது சிறந்ததென உங்களுடைய மனதில் ஒரு வினாஎழும். அதற்கு விடையாக, நானொரு வினாவைக் கேட்டு, பின்விடையை யளிக்கின்றேன். யாருடைய பிள்ளை அருமையானது? குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி யென்று சொல்வது போல, அவரவர் பிள்ளை அவரவருக்கு அருமையானது. அதுபோலவே அவரவர்சமயம் அவரவருக்குச் சிறந்தது. ஒரு சமயவாதி யின்னொரு சமயவாதியை யிழிவு கூறுவது அழகல்ல. அவ்விதமாக விழிவு கூறுபவன் தானிழிவு கூறுஞ் சமய நிலையில் நின்று, இழிவு கூறுவனேல், ஏற்கப்பாலது. ஒருவன் இன்னொருவனுடைய குறைகுணங்களை அவனது நிலையினின்று நோக்காது தன்னிலையினின்று நோக்குவது சரியல்ல பாலர்களின் குணத்தைப் பாலர்களறிவார்களேயன்றி முதியோரறிய முடியாது. அவரவர் பக்குவத்துக்கும் அறிவுக்குந்தக்கதாகவே, அவரவருடைய எண்ணமும்நிலையு மிருக்கும். ஆனைகண்ட குருடர்போல, சமயவாதிகள், ஒருவரோடொருவர் சண்டை செய்வது புத்தியீனம். ஆகையால் சமயவாதிகள், சமயவாதஞ் செய்வதும், கண்டனஞ் செய்வதும் அவர்களுடைய அவிவேகத்தாலென்று சொல்வது குற்றமாகாது.

பிரதானமாகச் சைவசமயிகள் மற்றைய சமயிகளைக் கண்டிப்பது முறையல்ல. மார்க்க விரோதமுமாகும். ஏனெனில் அவர்களாலங்கிகரிக்கப்படும் மகான்கள்,

"யாதொரு தெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகன்றானே வந்தருள்செய்வன்"

என்பனவாகக் கூறியிருக்கின்றார்கள். சிலர், இதுபோன்ற பாக்கள் சைவசமயத்திலுள்ள அகச்சமயம், புறச்சமயங்களைப் பற்றிக் கூறுகின்றனவேயன்றி, அன்னிய சமயங்களைப்பற்றிக் கூறவில்லையென ஆசங்கிப்பர். (அப்பாக்களை யியற்றியவர்கள், தம்முள்ளக் கருத்தை அவர்களுக்கு வெளிவிட்டுப் போயினர் போலும். ஒவ்வொருவரும் தத்தமக்கியையப் பாக்களுக்குப் பொருள் கொள்ளல் மிகவுமெளிய குணம். சிவகாருண்ணியமுள்ளவர்களும் எதார்த்தமான சமய பக்தியுள்ளவர்களும் அங்ஙனஞ் செய்யார். செய்பவர்கள் சமயப்போலிகள்). அப்பாக்களை அன்னிய சமயங்கட்கு மொட்டுவதால், ஆசங்கிப்பவர்களுக்கு நேரிடுங் குறைவுதானென்னையோ? உண்மையான சிவபக்தர்கள் அப்பாக்களைச் சகலமதத்தருக்கும் பொதுவாக உபயோகிப்பதற்குப் பின்னிற்கமாட்டார்கள். நிற்பார்களாயின் அவர்களை வேடதாரிகளென வெண்ணுவீர்களாக. நிற்க,

ஒவ்வொரு சமயத்திலும், பற்பலபிரிவுகளுண்டு. அப்பிரிவுகள் சுருதிகளிற் கூறப்பட்டிருக்கும்வாக்கியங்களுக்குத் தத்தம் பக்குவத்துக்கும் அறிவுக்கும், சுபாவத்துக்கும், ஏற்றவகையாக உரை கூறுவதாலுண்டாயின. ஒவ்வொருவரும் சுருதியிலுள்ளவைகளில் தனது யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்த முடிபுகளை யங்கீகரித்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிடுவது புத்தியாகும். நாங்களொவ்வொருவரும் நமது சமயத்தை யனுசரித்து அதிற் கூறப்பட்டிருக்கும் விதிப்படியொழுகிவரின் படிப்படியாய் மேனிலைக்கு வரமுடியும். அதை விடுத்து சொல்வாதஞ் செய்வதால், ஒருபயனையு மடையோம். சொல்வாதஞ் செய்வது நாம்கற்ற இலக்கண விலக்கியங்களில் நாமடைந்திருக்கும் பாண்டித்தியத்தைக் காட்டுவதற்கேயாம். ஞானிகள்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்



வாதஞ் செய்வதை நாங்கள் காணவுமில்லை, கேள்விப்படவுமில்லை.

முடிவுரையாக நானுங்களுக்குச் சொல்வதைச் சற்றே கவனமாய்க்கேளுங்கள். நீங்கள் உங்கள் சமயாசாரத்தைக் கைவிடாது, அதை நீங்கள் செய்யும் ஒவ்வொருதொழிலிலும் அப்பியாசிக்கவேண்டும். நின்றும், இருந்தும், கிடந்தும், நிமலனை நினை யென வான்றோர் கூறியபடி, நீங்கள் நித்திரைவிட்டெழும் பொழுதும், நித்திய கருமங்களைச்செய்யும் பொழுதும், உண்ணும்பொழுதும், உடுக்கும்பொழுதும், சயனிக்கும்பொழுதும், இடைவிடாது கடவுளைத்தியானிக்கவேண்டும். எதொழிலிலும், அவரையே முன்னிலையாய் வைக்கவேண்டும். அவ்விதஞ் செய்துவரின், காலாதீதத்தில், கடவுள் மயமாய் வருவீர்கள். அப்பொழுது சமயாதீதநிலை வரும். வரவே, சகல சமயங்களும் சமமாய்த் தோற்றும்.

கடவுள் வாக்குமனோதீதரென்றும், சமயாதீதரென்றும், சுருதிகள் கூறுகின்றன. அவ்விதமான கடவுளை, நீங்கள் சமயாதீதநிலையில் நின்றே தரிசனைசெய்ய முடியும். செய்யவே ஞானோதயமாகும். அந்நிலையடைந்தவர்களைச் சகலமதத்தரும் தெய்வமாகப் பூசிப்பர். அதை யடைவதற்கே சமயம் ஏற்பட்டது.

சுபம்.

உபந்நியாசம் முடிந்ததும் அங்கு சமூகமளித்திருந்தவர்களனைவரும், கரகோஷஞ்செய்து, சந்தோஷித்தார்கள். அவ்விதமான உபந்நியாசத்தைத்தாங்களொருபோதுங்கேட்டதில்லையென்றும், சொற்பொழிவைக்கண்டதில்லையென்றும், தங்களுக்குட் பேசிக்கொண்டார்கள். சமயங்களைப்பற்றி சுவாமியார் சமரசமாய்க்கூறி முடித்ததினால், சகலமதத்தரும், அதிலொரு குறையுங்கூறாது அதை மிக மெச்சிக்கொண்டார்கள்.

சுவாமியார் செய்த வுபந்நியாசம் அங்கே கூடியிருந்தவர்களுக்கு ஒருபெரிய வுபதேசமாயிற்று. அநேகர் தாங்கள், அதுவரையில், சமயப்போலிகளாயிருந்ததைப்பற்றி விசனங்கொண்டு, அன்றுதொடக்கம், பக்தியுடன், தங்கள் தங்கள்

சமயநூல்களைக்கற்று, அவைகளிற்சொல்லப்பட்டிருக்கும் விதிகளின்படியொழுகிவரவேண்டுமென, மனதிற்றிட்டம் பண்ணிக்கொண்டார்கள். தங்கள் மதநூல்களில், தங்களுக்கு யாதுஞ் சந்தேகமெழின், அதைச் சுவாமியாரிடங் கேட்டுத் தெளியவேண்டுமென்றும், அப்படிச் செய்யா தொழியின், தாங்கள் நிரீச்சுரவாதிகள், நபாதிகளினும், இழிந்தவர்களென்றும், எண்ணினார்கள்.

## உசூ-ம் அத்தியாயம்.

உபந்நியாசஞ் செய்யப்பட்ட வந்நேரத்தில், சித்தகுமாரன் அங்கே காணப்படவில்லை. வைராக்கியநாதனுடன், எவ்விடத்திற்கோ போய்விட்டார். மானதராசனும் அவரது நண்பர்களும் உபந்நியாசத்துக்குச் சமுகமளித்தவர்களை, உபசரிப்பதிலும், அவர்களுக்கு ஆசனங்கொடுப்பதிலும் தங்கள் புலன்களைச் செலுத்திக்கொண்டு நின்றமையால், சித்தகுமாரனைப்பற்றிச் சிந்திக்கவில்லை. வீட்டிலுள்ளவர்கள் சயனிக்கும்வரையும் சித்தகுமாரன் வீட்டுக்குத்திரும்பவில்லை. மானதராசன், அவருக்காக அதிக நேரங்காத்திருந்தும் அவர் திரும்பவில்லை. நடுச்சாமத்தின்பின், சித்தகுமாரனும் வைராக்கியநாதனும், வீட்டுக்கு வந்து, ஒருவரையுமெழுப்பாது, புறந்திண்ணையிற்படுத்து நித்திரைசெய்தார்கள்.

இவ்விதமாக, இருவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியாது நடந்துவரும்பொழுது, வைராக்கியநாதன், சித்தகுமாரனைச் சிறிதுசிறிதாகத் தன்வயமாக்கி, ஈற்றில் முழுவதும் தன்வயமாக்கினார். வேட்டுவன், தானெடுத்தபுழுவைச் சிலநாட்களில், தன் வடிவமாக்குவதுபோல, வைராக்கியநாதனும், சித்தகுமாரனைத் தன்வடிவமாக்கினார். ஆக்கவே, சித்தகுமாரன், அடியோடு தன்னை மறந்து, தொழிலற்று, யாதோசிந்தித்துக்கொண்டிருப்பார். வித்தியாசாலையிற் றங்குவதும், அங்கு உலாவுவதும் அவருக்கு வேதனையாயிருந்தது. ஆகையால், அடிக்கடி, அவ்விடத்தை விட்டு ஓடுவார். மானதராசனும், நண்பர்களும் அவரைத்தேடிப் பிடித்துக்கொண்டு வருவார்கள்.



சித்தகுமாரனும், வைராக்கியநாதனும், எப்பொழுதும் மனித சஞ்சாரமில்லாத பற்றைகளுக்குள்ளும், மனிதர்கள் போக்குவரவு செய்யாத பாதைகளிலும் உட்கார்ந்து கொண்டு பேசுவார்கள். அக்காலங்களில், மானதராசனும் அவரது நண்பர்களும் தங்களை ஆறுதலாயிருக்க விடாது வேதனைகொடுப்பதைக் கண்டு தங்களை யவர்கள் வந்தடையக்கூடாத தூரதேசத்திற்குப் போவதே புத்தியென நினைத்து தருணம் பார்த்திருந்தார்கள்.

ஓரிரவு, வீட்டிலுள்ளவனைவரும், ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்பொழுது, இருவரும் மெல்ல வெழும்பி, வெளியே சென்று, ஒருவரோடொருவர் ஒன்றும் பேசாது ஓட்டமும் நடையுமாக சூரியனுதிக்குமுன் வெகுதூரம் போய்விட்டார்கள். அதன்பின், அவர்கள் தங்களைத் தேடிப்பிடிக்க மாட்டார்களெனத் தேறி, வீதிவழியே சம்பாஷித்துக்கொண்டு, நடந்து போனார்கள். விடிந்தும் பத்துநாழிகை வரையும் அவ்விதமாக நடந்து, வெய்யிலாலும் பசியாலும் நடையாலுங் களைத்து நடைதளர்ந்து காமபுரத்தெல்லையிலுள்ள வெளியில் நிற்கும் ஓர் மரநிழலிற் படுத்து உறங்கினார்கள்.

சூரியனுச்சிக்கு வந்தும், அவர்கள் துயிலொழியவில்லை. அவர்கள் படுத்திருந்த நிழல் மரத்துக்கு அருகேயுள்ள பாதையாற் சென்றவர்கள்சிலர் வெய்யிலில் வதங்கி, ஆறும்படி நிழலில் வந்துட்கார்ந்தார்கள். அவர்களிற் சிலர் காமபுரவாசிகள். அவர்களுக்குச் சித்தகுமாரனை நன்றாய்த் தெரியும். அவர் சற்றே குணபேதமுள்ளவராயிருந்தாரெனக்கேள்விப்பட்டிருந்தார்கள். அவர்கள் அவரைக் கண்டதும், அவர் நித்திரை விட்டெழும்பொழுது அவரைத் தங்களுடன் கூட்டிச்சென்று பசியாற்றி, அவரைக் குணப்படுத்த வேண்டுமென நினைத்து, அவர் விழித்தெழும்வரையும், அம்மரநிழலிலே யிருந்தார்கள்.

அந்த நேரத்தில், அவர்கள் தங்களுக்குட் பேசிக்கொண்டதாவது:—“இவருக்கு விசரென்று சொன்னார்கள். சொன்னவர்கள் விசர்களே யன்றி, இவர் விசரனல்ல. இவரைக் காமப்

பித்தம் பிடித்துக் கொண்டது. காமநோய்கொண்டவர்களுக்கே முகம் வெளுப்பதும், தேகம் மெலிவதும். இவருக்கு இந்த விரண்டு குணங்களுமிருக்கின்றன. என்ன மருந்தைக் கொடுத்தாலும், இவர் குணப்படார். பெண்போகமே யிவரைக்குணப்படுத்தும் மருந்து. இவரை வலிந்திழுத்தாகுதல் அதற்குச்சம்மதிக்கப் பண்ணவேண்டும். அதைச் செய்யக்கூடியவர்கள் எங்கள் கிராமத்தில் அனேகருண்டு. நாங்கள் இவரை யவர்களிடம் ஒப்புக்கொடுத்து அவர்களைக் கொண்டு குணப்படுத்தி, அதன் பின் அவரை நன்றாய்ப் போஷித்தால், அவர்பழையதேகத்தைப் பெற்று முன்போல வாழ்வார். அதனால் எங்களுக்குப் பேரும் புகழுமுண்டு. அவர் எங்கள் கிராமத்தில் வசித்துவரின் எங்களுக்கு மிகவுமுபயோக முள்ளவராயுமிருப்பார்."

இவ்வாறு அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது சித்தகுமாரன் விழித்தெழுந்தார். வைராக்கியநாதனும் விழித்தார். பார்வைக்குச் சித்தகுமாரன் நெடுங்காலமாக நோய் கொண்டிருந்தவர் போல விருந்தார். அவராசிரியராயிருந்த காலத்திலிருந்த தோற்றம் அவரிடத்து இப்பொழுது காணப்படவில்லை. கேர்த்தியான வுடையையாவது, அங்கவஸ்திரத்தை யாவது தரித்திருக்கவில்லை. விபூதி உருத்திராட்சம் முதலிய சிவசின்னங்கள் அவரிடத்திற் காணப்படவில்லை. அங்கு நின்றவர்களோடு முற்காலத்திற் போல வார்த்தையாடவும் பிரியப்படவில்லை. மௌனமாயிருந்தார். ஆனால் அவருக்கோ சகிக்க முடியாத பசிவந்து விட்டது. ஆகையால் காமபுரவாசிகள் தங்களுடன் வரும்படி யழைத்தபொழுதுமறுக்காது அவர்களுடன் கூடிச்சென்றார். வைராக்கியநாதனும் விட்டு நீங்காத நிழலைப் போல அவரைப் பின்றொடர்ந்தார்.

அவர்கள் காமபுரத்தைச் சேர்ந்தவுடன் அக்கிராமவாசிகள் அவரை மிக முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரித்து அறுசுவையுண்டிகளைப் படைத்து, போசனஞ் செய்வித்தார்கள். சித்தகுமாரன், போசனமானபின், களைப்பாறுது அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அவர்கள் அவரைச் சிலநாட்கள் அங்கு தங்கிப் பினபு அவ்விடம் விட்டுப் போகலாமெனக் கேட்டும்,



அவர் சம்மதியாது புறப்படவே, அவர்கள் அவரைக் கூட்டிச் சென்று, பெண்களிடத்து ஒப்புவித்தார்கள். வைராக்கியநாதனும் அவருடன் கூடிச் சென்றார்.

அங்கிருந்த பெண்களோ மிகவு மழகுவாய்ந்தவர்கள். அவர்களினழகை வர்ணிக்கமுடியாது. அவர்களுக்கு அவர்களே நிகரானவர்களென்று சொல்லலாமே யன்றி, வேறொருவரையும் ஒப்புக்கூற முடியாது. அவர்களுடைய பேச்சோ எவர்களையும் அவர்கள் வசப்படுத்தக்கூடிய இனிமையானது. அவர்களைக் காண்பவர்கள் அவர்களுடைய கண்களாகிய வலையிலகப்பட்டு அவர்களிற் சிக்குப்படுவது நிச்சயம். அவர்களிலகப்படுபவர்கள் அவர்களை விட்டுப் பிரியாது, அடிமைகள் போல, அவர்கள் கற்பிப்பதை மறக்காது செய்வார்கள். காலாலிடுபவற்றைத் தலையாற் செய்வார்கள். ஒருமுறை அவர்களைக் கண்டவர்கள் அவர்கள் சந்நிதானத்திலிருந்து அவர்களைச் சதாதரிசனம் பண்ணினால் தாங்கள் பிறந்ததின் பயனை யடைவோமென்றெண்ணுவார்கள். அவ்விதமான பெண்களிடத்திலேயே சித்தகுமாரன் அகப்பட்டார். அவர் உட்கார உடன்படாதிருந்தும் அவர்கள் அவரை வலிந்திழுத்து, உட்காரவைத்து அவர் வெளியே போகாவண்ணம் கதவுகளைப்பூட்டிக் கொண்டார்கள். அப்பொழுது அவர் வைராக்கியநாதனை நோக்க, அவரும் கூடவுட்கார்ந்தார். சித்தகுமாரன் தைரியங்கொண்டு, திடசித்தமுள்ளவராய் வரப்போவனவற்றை யெதிர் பார்த்திருந்தார்.

அதன்பின் அங்கிருந்த பெண்களனைவரும், அவரிடத்து ஒருவரொருவராகச் சென்று, வார்த்தையாடி, தங்களாலியன்ற சாமர்த்தியங்களைக் காட்டவாரம்பித்தனர். அவைகளைத்தனித் தனி யிங்கு கூறுவதிலும் திரட்டிக் கூறுவது உசிதமாகும். அவை பின்வருமாறு:—

"அர்ச்சுனனை யொத்த அழகுவாய்ந்த அரசே! மகளிர்களை மருளச்செய்யும் மாரனே! மதியை மயக்கும் மாயமருந்தே! காதலிப்பவர்கள் கண்களைக் கவரும் காமரசமே! அதிட்டதேவதை அருளுடனளித்த ஆணிப்பொன்னே! தின்னத் தின்னத்

தெவிட்டாத தேன்பாகே! அடியேங்களை யாளப்பிறந்த வாண் சிங்கமே! நாங்கள் உம்மைக்கண்ட கணமே உம்வயமானோம். நமது செயலற்றோம். தொழிலற்றோம். ஆகையால் உம்மை விட்டுப்பிரிய உடன்படோம். விதி கூட்டி வைத்ததை விட்டுப் பிரிபவர் உலகிலுண்டா? நாம் சொல்வதைக் கேட்டுச் சற்றே சிந்தித்துப்பாரும்.

உலகத்திலுள்ள வஸ்துக்களனைத்தும் ஒன்றிற்கொன்று உபயோகமுள்ளவைகளாகவே சிருட்டி கர்த்தா சிருட்டித்திருக்கின்றார். ஆகையால் அவைகள் ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவைகள். இயல்பாயுள்ள தொடர்பை யில்லாமற் செய்வது இயற்கைக்கு விரோதமல்லவா? இயற்கைக்கு மாறான செய்கைகள் பாவத்தொழில்களன்றோ? உலகத்திலுள்ள சராசரங்களனைத்தும், ஆண்பெண்ணென விருதிறத்தனவா யுண்டாக்கப்பட்டிருக்கின்றன. சிருட்டி கர்த்தாவும் சக்தியின்றிச் சிருட்டிக்க மாட்டார். சக்தியே சிருட்டிக்குக் காரணமாயுள்ளது.

மனுடருள்ளும் மற்றைய சீவராசிகளுள்ளும், ஆண்பெண்ணென விருப்பதை நாங்கள் காண்கின்றோம். அங்ஙனமின்றேல் உலகம் எவ்விதம்விர்த்தியடையும்? எவ்வகைச் சீவராசிகளிலும் பெண்களுக்கு ஆண்கள் தஞ்சமானவை. இயற்கையில் ஆண்கள், தைரியம், பெலம், வீரம், முதலிய ஆண்மையுள்ளவர்கள். பெண்களுக்கு அவ்வித குணங்கள் கிடையா. வீரம், தீரம், பெலம், தைரியம் முதலியன ஆண்மக்களின் குணங்களாகும். சில அறிவிலிகள் ஆண்பெண்ணென்னு மிருபாலாரும் ஓரே தன்மைத்தானவர்களென்றும், அவர்களுடைய தேகக்கூறுகள் ஓரே வகைத்தான பஞ்சபூதக்கலப்பாலாயினவென்றுங் கூறுவர்.

பெண்களாகிய எங்களுக்கு ஆண்களாகிய உங்களுடைய துணை ஆவசியகமானது. உங்களையின்றி நாங்கள் உயிர்வாழ்தலரிது. ஆண்மையுள்ள எவனும் பெண்ணோடுகூடியே வாழ்வன் இன்றேல், அவன் பேடியாயிருக்கவேண்டும். ஒருபெண்ணை புருஷனின் வாழ்க்கைத் துணையென்று கூறுவர். ஆகையால்,



அடியேங்களை ஆள்வது உமது கடனாகும். தின்பவர்களுக்கே தீன் உருசி தெரியும். நீர் எங்களுடன் கூடி வாழ்ந்தபின்பே, எங்களுடைய சுகத்தையும், நீர் நுகரும் இன்பத்தையும் அறிவீர். பெற்றவளுக்கே பிள்ளையருமை தெரியும். பெறாத மலடிக்குத் தெரியுமா? ஆகையால் நீர் நாங்கள் சொல்வதின் உண்மையை ஒருமுறை பரீட்சித்துப் பாரும்”

இவ்விதமாக அவரது மனதைக் கவரக்கூடிய வார்த்தைகளைக் கூறியதுமன்றி, சிற்றின்பத்தை விளைக்கக்கூடிய பலபல பாட்டுகளைப் பாடினார்கள். அவருக்கருகே யிருந்துகொண்டு பலபல லீலைகளையுஞ் செய்தார்கள். அவரது கண்களைக் கவரக்கூடிய ஆடைகளையும் ஆபரணங்களையு மணிந்துகொண்டு, அங்குமிங்கும் ஒய்யாரமாக வுலாவினார்கள். அவருடைய மனதைக் கவரும்பொருட்டு தங்கள் தேகத்தில் வாசனைத் திரவியங்களைப் பூசிக் கமகமவெனச் சுகந்தவாசனை வீசப்பண்ணினார்கள். கண்களுக்கு மைதீட்டி, நெற்றிக்குப் பொட்டிட்டு, முகத்துக்கு மஞ்சட்பூசி, அதை மினுக்கி, அவரை ஆசைவலையிற் சிக்கப்பண்ணக் கூடியபலபலவெத்தனங்களையுஞ் செய்தார்கள்.

அவரைத் தங்கள்வசப்படுத்த அவர்கள் ஒவ்வொருவரும் செய்த முயற்சிக்கு ஓரளவில்லை. அவர் அவர்களுடன் ஒன்றும் பேசாது, மௌனமாயிருந்தார். ஈற்றில் அவர்கள் தனக்குச் செய்த துன்பங்களைக்கண்டு, அவைகளால் அவர்கள் ஓர்வித பயனையுமடையார்களென அவர்களுடைய மனதில் வற்புறுத்தும்பொருட்டு, பின்வருவனவற்றைச் சொல்லி தன்னை விட்டு விடும்படி யிரந்து கேட்டார்.

1. கைப்பிடி நாயகன் றூங்கையிலே யவன்கையை யெடுத்
தப்புறந் தன்னி லசையாபன் முன்வைத்தயல்வளவில்
ஒப்புடன் சென்று துயினீத்துப் பின்வந்துறங்குவளை
யெப்படி நான் நம்புவே னிறைவா கச்சியேகம்பனே.

2. சீறும் வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினல்
மீறுமலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரை கண்டிலே னிறைவா கச்சியேகம்பனே.

3. பெண்ணாகி வந்தொருமாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடப்[பறிக்க
புண்ணாங் குழியிடைத் தள்ளியென்போதப் பொருள்
எண்ணாதுனை மறந்தே னிறைவா கச்சியேகம்பனே.

4. முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற் கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப்பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கே செயும் பாவையர்மேல்
இட்டத்தை நீ தவிர்ப்பா யிறைவா கச்சியேகம்பனே.

5. காதென்று மூக்கென்றுகண்ணென்று காட்டியென்கண்ணெ
மாதென்று சொல்லி வருமாயைதனை மறலிவிட்ட [திரே
தூதென்றெண்ணாமற் சுகமென்றுநாடிமித்துற்புத்தியை
யேதென் றெடுத்துரைப்பே னிறைவா கச்சியேகம்பனே.

6. சீயுங் குருதிச் செழுநீர் வழும்பும் செறிந்தெழுந்து
பாயும் புடைவை யொன்றில்லாதபோது பகலிரவாய்
ஈயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகல்
மாயும் மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே.

7. வாய்நாறும் ஊழல் மயிர்ச்சிக்குநாறும் மையிடுங்கண்
பீநாறும் அங்கம் பிணவெடில் நாறும் பெருங்குழிவாய்
சீநாறும் யோனியழல் நாறும் இந்திரியச்சேறுசிந்தும்
பாய்நாறும் மங்கையர்க்கே யிங்ஙனே மனம்பற்றியதே.

8. எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றியிழுத்த விதழ்—நித்த நித்தம்
பொய்யடா பேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

இவ்விதமாகச் சித்தகுமாரன் கடவுளைநோக்கிப் புலம்பினதே யன்றி, அப்பெண்களுடைய கேள்விகளுக் கிசையவில்லை. அவர்கள் அவருடைய நிலையைக் கண்டு, அவரை யங்கு தடுத்து வைப்பதா லோர்பிரயோசனமு மில்லையென நினைத்து, கதவுகளைத் திறந்து சித்தகுமாரனை வெளியே போகவிட்டார்கள்.



## ௨௭-ம் அத்தியாயம்.

காமபுரத்திலுள்ள பெண்கள், சித்தகுமாரனை வெளியே விட்டவுடன், அவர் வேடர் வலையிற் சிக்கியமான் அதினின்றும் தப்பிக்கொண்டால், எவ்விதமோடுமோ அவ்விதமாக அவர்மிக வேகமாயோடி, அடுத்த காட்டினுள் நுழைந்தார். வைராக்கியநாதனும் விடாது பின்றொடர்ந்து ஓடினார். காட்டு மத்தியில் இருவரும் சற்றுநேரமிளைப்பாறி, பின்னெழுந்து விரைவாய் நடந்தார்கள். அப்பொழுது அக்காட்டினெல்லையில், ஓர்கிராமமிருக்கக்கண்டு, அக்கிராமவாசிகளும் தங்களுக்குத் தீமைவிளைப்பார்களென நினைத்து, அவர்களுடைய கண்களுக்குப் புலப்படாது காட்டிற்கூடாக அடுத்த காட்டை நோக்கி, வேகமாய் நடந்து சென்றார்கள். போகும்பொழுது, அக்கிராமவாசிகளிற் சிலர் காட்டினுள் உலாவிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் காரபுரவாசிகள். இயல்பிலே கோபமுள்ளவர்கள். மூர்க்கர்கள். நினைத்ததைச் செய்து முடிப்பவர்கள். இரக்கமில்லாதவர்கள். அன்போ அவர்களுடன் பிறக்கவில்லை அவர்கள் இருகால் மிருகங்கள். நாற்கால் மிருகங்களுக்குத் தப்பினாலும், இந்த விருகால் மிருகங்களுக்குத் தப்பமுடியாது. ஆனைவாயிலகப்பட்ட கரும்புபோலவும், பூனைவாயிலகப்பட்ட எலிபோலவும் பாம்பின் வாயிலகப்பட்ட தவளை போலவும், அவர்களிடமகப்பட்டவர்கள் தப்பமாட்டார்கள் அவ்விதமான குணமுள்ளவர்களிடத்தே சித்தகுமாரனகப்பட்டார், சித்தகுமாரனை யவர்களுக்கு நன்றாய்த் தெரியும். எவ்விதமும்சித்தகுமாரனைக் குணப்படுத்த வேண்டுமென நினைத்து, அவர் பிரியப்படாதிருந்தும், அவரைப் பிடித்திழுத்துக் கொண்டு தங்கள் கிராமத்திற்குப் போனார்கள்.

அங்கே யவர்கள் அவரைப் போசனஞ் செய்வித்தபின் தங்களுடன் சிலநாட்டங்கி, பின்புபோகுமாறு அவரை யிரந்து கேட்டார்கள். அவர் உடன்படாது ஓடத்தலைப்பட, அவரைப் பிடித்துக் காவலில் வைத்து புத்திநாதனை யவருக்குக் காவற்காரனாக்கினார்கள்.

புத்திநாதன் ஒற்றைப்புத்தியுள்ளவர். பிடித்ததைச் சாதிப்பவர். இருந்தும் சார்ந்ததைக் காட்டும் பளிங்குபோல, தன்னுடனைக்கியமானவர்களுடைய எண்ணப்படி நடப்பவர். சித்தகுமாரனில் மிகவுமன்புள்ளவர். அவரைக் கண்டவுடன் அவர் நிலையைக்கண்டு, மிகப்பரிதாபப்பட்டு, அவரைக் குணப்படுத்த முயன்றார். தன்னாலியன்றளவு புத்திகளைக்கூறி, அவராசிரியரா யிருந்த காலத்து எவ்விதம் நடந்து வந்தாரோ அவ்விதம் நடக்கும்படி கேட்டார். இவ்விதமாகச் சிலதினங்கள் தெண்டித்தும் ஒன்றும் பயன்படவில்லை. ஈற்றில், தண்டஞ் செய்து அவரைப் பயமுறுத்தி தான் கற்பிக்கும் விதமாகச் செய்விக்க வெண்ணி, அவரை யடிக்கவும், உதைக்கவும், குத்தவுமாரம்பித்தார். அத்தண்டங்கள் சித்தகுமாரனுக்கு மிருந்த வேதனையைக் கொடுத்தும் அவர் வைராக்கியநாதனுடைய சகாயத்தால் அவைகளைச்சகித்துக்கொண்டிருந்தார். வைராக்கியநாதன் அவருடைய காதுக்குள் பின்வருமாறு உபதேசித்தார்:—

"செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ விருவினையம்" என்றபடி வினையை நோவதன்றி, வேறொருவரையும் நோகாதே. "நல்லகுருநாதன் நம்மை வருத்துவது, கொல்லவல்லக் கொல்லவல்ல, பொல்லாவினையறுக்க" என்பதை மனதிலே வைத்துக்கொள். பொன்னை எவ்வளவு காச்சுகினும், அவ்வளவு சுத்தமாகும். அதுபோலவே நாமெவ்வளவு கஷ்டப்படுகின்றோமோ, அவ்வளவு மனச்சுத்தமடைவோம். பட்டினத்தடிகள் கழுவேற்றப்பட்டபொழுது, அவர் பயப்படாது துக்கப்படாது "என்செயலாலாவதொன்றில்லை" எனப்பாடியருளியதை மறந்து விட்டீரோ? உன்னைவருத்துபவர்கள் உன்னைக்கொல்ல வல்லவரா? நீரினாலும் நெருப்பினாலும் மற்றென்னத்தாலும் கொல்ல முடியாத வும்மை இவர்கள் கொல்ல வல்லவர்களா? எய்தவனிருக்க அம்பை நோவதுபோல நாம்செய்த தீவினைகள், நம்மை வருத்த, நாம்பிறரை நோவதாற் பயனென்ன? கருவியாய் நின்று நம்மை வதைப்பவர்களை நாம் பகைப்பது நீதியா? தர்மமா? நீர் உண்மையான ஆண்மகனாயிருப்பின், உமது தைரியத்தைவிடாதிரும். மனஞ்சோராதிரும். உமக்கு மிகவிரைவில் அதிக நன்மையுண்டாகும். இவ்வேதனைகள் மின்னல் மின்னி மறைவதுபோல, விரைவாக ஒழிந்துவிடும்.



சித்தகுமாரன் மனந்தெளிந்து, ஞானிகள் கூறியிருக்கும் வாக்குகளை நினைத்தார். அவைகள் ஒன்றின் பின்னொன்றாய், அவருடைய ஞாபகத்துக்கு வந்தன. வரவே துக்கத்தையும், துன்பத்தையும் அறவொழித்தார். சந்தோஷமாக தனது வேதனைகளை யனுபவித்தார். அதுவே வினையொழிக்கும் வழியென நினைத்தார். அவருடைய ஞாபகத்திற்கு வந்த ஞானிகளின் வாக்குகளிற்சில பின்வருமாறு:—

1. அச்சமாங்காரம் அடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங் கழலேனே யென்குதே.

2. காண்பதும்பொய்கேட்பதும்பொய்காரியம்போலேயிதமாய்ப்
பூண்பதும்பொய்கவ்விடத்தும் போகமும்பொய்-மாண்பாகத்
தோற்றியின்பவெள்ளமாய்த் துள்ளியென்னுட்சம்பந்தன்
வீற்றிருப்பதொன்றுமே மெய்.

3. அவரவருக்குள்ளபடி யீசனருளாலே
அவரவரைக் கொண்டியற்றுமாறு—லவரவரை
நல்லார் பொல்லாரென்று நாடுவதென்னெஞ்சமே
யெல்லாஞ் சிவன் செயலென்றெண்.

4. எவ்வுயிருங் காக்க வோரீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரினுமொருவனல்லவோ—வவ்விப்
பொருவதும் நெஞ்சே புழுங்குவதும் வேண்டாம்
வருகுவதுந் தானேவரும்.

5. சத்துருவும் மித்துருவுந் தாரணியில் வேறில்லை
சத்துருவும் மித்துருவுந் தன்னெஞ்சே—பெத்தமலம்
வீட்டும்படிக்கு வினைக்கீடு உனைத்தனுவோ
டாட்டுஞ் சிவனென்றறி.

6. அன்றே யனாதி யமைத்தபடி யல்லாதொன்
றின்றே புதிதாய் இசையுமோ—என்றுஞ்
சலியாதியற்றுவான் தன்னையே நோக்கி
மெலியாதிருந்துவிடு.

7. சும்மா தனுவருமோ சும்மா பிணிவருமோ
சும்மா வருமோ சுகதுக்கம்—நம்மால் முன்
செய்தவினைக் கீடாச் சிவனருள் செய்விப்பதென்றால்
எய்தவனை நாடியிரு.

8. கூட்டுவதுங் கூட்டிப்பிரிப்பதுவும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டியடக்குவதும்--காட்டுவதும்
காட்டிமறைப்பதுவும் கண்ணுதலோன் முன்னமைத்த
எட்டின்படி யென்றிரு.

9. உள்ளதுதான் போமோ மற்றில்லாதது வருமோ
பள்ளமே வெள்ளம் பரவாதோ--கள்ளமாய்
பித்துப்போலே பிதற்றும் பேதைமட நெஞ்சமே
செத்துப்போனானோ சிவன்.

10. அவரவர் வினைவழி யவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி யவரவரனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க்குதவிலர்
தவரவர் நினைவது தமையுணர்வதுவே.

இவ்வாறு புலம்பி, சித்தகுமாரன், புத்திநாதனின் சித்திர வதைகளைச் சகித்துக்கொண்டு நாட்களைக் கழிக்கும்பொழுது தான் செய்யுந்தண்டத்தால், யாதும் பயனில்லையெனக்கண்டு, புத்திநாதன் சித்தகுமாரனைக் காவலினின்றும்விடுதலைசெய்தார். உடனே சித்தகுமாரன் திரும்பியும்பாராது, ஓட்டம்பிடித்து கரணக்காட்டை விட்டகன்று, அதற்குமேலேயுள்ள ஓர்காட்டை நாடி, வைராக்கியநாதனுடன் மிகவிரைவாகச் சென்றார். சிறிது நேரத்தில் இருவரும் ஓர்சோலைக்காட்டை யடைந்தார்கள்.

## உ௯-ம் அத்தியாயம்.

சித்தகுமாரன் போய்ச் சேர்ந்த காடு ஓர் சோலைக்காடு. அங்குநின்று பார்ப்பவர்களுக்கு, ஓர்சமுத்திரக்கரைதோன்றும். அச்சமுத்திரம் இக்கரையினின்று பார்ப்பவர்களுக்கு அக்கரை தோற்றாத வோர் விசாலித்த சமுத்திரம். மேற் கூறப்பட்ட காட்டில், கரணக்காட்டிற் போல, உபயோகமற்ற பற்றைகள்,



செடிகள், கிடையா. மனதிற்குச்சாந்தத்தையும், புலன்களுக்கு ஒடுக்கத்தையுங் கொடுக்கும் மரங்கள், செடிகள், கொடிகளே யங்குவளர்வன. தேக போஷணைக்கு வேண்டிய பழவர்க்கங்களும், கந்தமூல பதார்த்தங்களும் அக்காட்டில் ஏராளமாய் அகப்படும்.

அக்காட்டை நோக்கி மிகத் தூரத்தே வருபவர்களை, அங்கே மிகவோங்கி வளரும் அசோகு, சந்தனம், தேவதாரு முதலிய விருட்சங்கள், காற்றிலசைந்து "இங்கு வாருங்கள் இங்கு வாருங்கள்" எனச் சொல்வதுபோல, தங்கள் தலைகளைத் தாழ்த்தி யழைக்கும். மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலிய புட்பச் செடிகள், தங்களரும்புகளென்னும் பற்களைக் காட்டிச் சிரித்து அங்ஙனமழைக்கப்பட்டவர்களையுபசரிக்கும். நறுமணம் வீசும் புஷ்பக் கொடிகள் பல மரங்களையுந் தாவிப்பிடித்து, நெருக்கமாகப் படர்ந்து, பலவிடங்களிலும் பந்தரிட்டு, அப் பந்தரின்கீழ் அவர்களை உட்காரச் செய்யும். கீழே சொரிந்துபடை படையாய்க் கிடக்கும் புஷ்பங்கள், கிடப்பதற்கு பாயல்களை யுதவும். நாற்புறமும் நிற்கும் பழமாவர்க்கங்கள், "பசியாய்க் கிடவாதிர், இவைகளைச் சாப்பிடுங்கள், இதோ தருகின்றோம்" எனச் சொல்லிக் கொடுப்பது போல, தங்கள் தலைமேற் சுமந்திருக்கும் இனிய கனிவர்க்கங்களை யங்கே படுத்திருப்பவர்களுக்குக் கிட்டச் சொரியும். மிகவுமணித்தாக ஓடும் சிற்றாறுகள் கலகலவெனச் சத்தமிட்டு, தாகசாந்தி செய்ய விரும்புவர்களையழைக்கும். படுத்திருப்பவர்களைச் சுற்றிநிற்கும் செடிகளும் கொடிகளும் காற்றிலசைந்து, அவர்களுடைய ஆயாசத்தைத் தீர்க்கும் பொருட்டு, சாமரை வீசுவது போல முன்னும் பின்னும் ஆடும். அங்குநடக்கும் சம்பவங்களனைத்தையுங்கண்டு சமுத்திரமானது ஆ, ஓ, வெனச் சத்தமிட்டு, அவர்களைத் தாலாட்டி, நித்திரை செய்யப்பண்ணும். ஆகவே, அக்காட்டை யடைபவர்கள், அனுபவிக்கக்கூடிய தேக போகங்களுக்கு ஓரெல்லை கூறமுடியாது. அவ்விதமான வோரிடம் மாயாபுரியிலெவ்விடத்தாவது, கிடையாது. ஆகையால் அவ்விடத்தைச் சேர்ந்தவர்கள், அதைவிட்டுத் திரும்பமாட்டார்கள். அவ்விடத்

திலேயே சஞ்சரிப்பார்கள் அதைக் காணாதவர்களே வேறிடங்களிற் சஞ்சரித்து, தாங்களனுபவிப்பவைகளைச் சுகமென வெண்ணி, தங்கள் வாழ்நாளைக் கழிப்பார்கள்.

மேலே கூறப்பட்ட வனம், தேகப்பற்றை யொழித்து, மேனிலையை யடைந்தவர்களுக்கு மிகவுமுவந்த விடம். அதனியல்பும், அமைப்பும் பக்குவிகளுக்கே நன்றாய் விளங்கும். ஏனையோருக்கு அவைகள் புலப்படா. பக்குவமில்லாதவர்கள் அங்கு செல்ல நேரிடின் அவர்கள் அவ்வனத்தை மற்றைய காடுகளைப் போல மதித்து, அங்கு நடப்பவைகளை புலப்படுத்தாது திரும்பி விடுவார்கள் அறிவாளிகள் தங்களனுபவத்திற் கண்டவைகளே பின்னாற் கூறப்பட்டிருக்கின்றன.

அலைகள் மோதாநின்ற சமுத்திரமானது, ஓயாது "ஓ" வென அகண்டமாக வொலிக்க, அவ்வொலி காட்டினுட் புகுந்து அக்காட்டில் வீசுங்காற்றின் "ஓ" வென்னுஞ் சத்தத்துடன் கலந்து, சதாசத்தித்துக் கொண்டிருக்கும். அவ்வொலி அக்காடு முழுவதும் பரவி, மரங்கள், செடிகள், கொடிகள் முதலியன வற்றூற்றடைபட்டு, மீண்டு, அம்மரங்கள், செடிகள், கொடிகள் முதலியனவற்றினின்றும் வருவது போற்றோன்றும்.

அந்த "ஓ" என்னும் ஒலி அகண்டமாய் ஒலிப்பதைக் கண்டு, அதை யொடுக்கும்பொருட்டு, அவ்வனத்திலிடையீடில்லாது புஷ்பித்திருக்கும் புஷ்பங்களில், மதுவையுண்ணும்வண்டுகள் "ம்" என்னும் ஒலியைச் செய்யும். அவ்வண்டுகள், தாங்களொடுங்கியிருப்பது, உலகவொடுக்கத்துக் கறிகுறியெனக் காட்டும். சமுத்திரமும் காற்றும், சிருட்டி திதியைக் குறிப்பது போலவே வண்டுகளும் சங்காரத்தைக் குறிக்கும். இவ்விரண்டொலிகளுஞ் சேர்ந்து, "ஓம்" என்னும் பிரணவத்தை யுண்டாக்குகின்றன. இந்தப் பிரணவ மந்திரம் அவ்வனம் முழுவதும் அல்லும் பகலும்ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் இது சதாசத்திப்பதைக் கேட்டு ஞானிகள் ஆனந்த நித்திரை செய்வார்கள்.

"ஓம்" என்னும் பிரணவம், நிரை நிரையாய் நிற்கும் விருட்சங்களினூற் றடைபட்டு, "அம்" "உம்" என விகாரமடைந்து, "அம்," "உம்" எனச் சத்தித்துக் கொண்டு மீளும். மீள்வதால்



பீசமந்திரங்களாகிய "அம்", "உம்" என்னும்மந்திரங்கள் தாமே யொலிக்கின்றன. அதைக்கண்டு, மதுவுண்டு களித்த வண்டுகள் றீம், என்னும் ஓசையுடன், தாமிருந்து மதுவுண்ட புஷ்பங்களை விட்டு, மறு புஷ்பங்களுக்குச் செல்லும். அதனால் "றீம்" என்னும் இன்னொரு பீசமந்திரமுண்டாகின்றது. அதுமட்டோ! அவ்வனத்தில் இருப்பதும் பறப்பதுமாகிய பட்சிசாதிகள் தாம் ஒன்றுஞ் செய்யாது சும்மா விருப்பது தகாதென வெண்ணி, * ஈ, கூ, வெனக் கத்தும் நாம்முன்கூறியசத்தங்களையொருங்கு சேர்க்கின், அவை, அம், உம், ஓம் றீம் என்னும் மந்திரமாகும். ஈ, கூ, வென்பன, அதிக ஆழ்ந்த கருத்துள்ள பீசாட்சரங்களாயிருப்பினும் மந்திரவாதிகளே யன்றி, ஏனையோர் தங்கள்செபங்களில் உபயோகிப்பதாகத் தெரியவில்லை.

அவ்விதமாக, அவ்வனம் முழுவதும், ஒலி மந்திரவடிவாயிருக்கும் பொழுது, பக்குவிகள், சிருட்டியின் காரணத்தையும் அதனமைப்பையும், அனுபவத்திற் கண்டு, களிப்பார்கள். சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழிலும் நாதகாரியமெனக்கண்டு, அகமுகமாய்த் தங்கள் நாட்டத்தை யதில் வைப்பார்கள். அறிவு குறைந்தசிருட்டிகள் எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ள கடவுளைத்தியானிக்கும் பொழுது, அனேக தவங்களைச் செய்து கிடைத்தற்கரிய மானுடப்பிறவியை யெடுத்தவர்கள் அவரைத் தியானியாது விடுவது தகாதென அவ்வனமே எவருக்குமறிவித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வனத்திலிருந்து தியானஞ் செய்து, முதிர்ச்சி யடைந்தவர்கள் தாங்கள்

---

1. * செச்சையென்ற மூச்சிறேடு சிகாரமும் வகாரமும்
பச்சையாகி நின்றதே பரவெளியின் பான்மையே
இச்சையான கூவிலே யிருந்தெழுந்த ஈயிலே
உச்சியான் கோணத்தி லுதித்ததே சிவாயமே.

2 அருளிருந்த வெளியிலே அருக்கனின்ற விருளிலே
பொருளிருந்த சுழியிலே புரண்டெழுந்த வழியிலே
தெருளிருந்த கலையிலே தியங்கிநின்ற வலையிலே
குருவிருந்த வழியினின்று கூவுங்கீபு மானதே.

செபிக்கும் பிரணவத்தின் ஓசையை வனத்தினின்றெழும் பிரணவத்தின் ஒலியுடன் கலந்துவிட்டு, அதைச்சதா செவிப்படுத்திக்கொண்டு தங்களை மறந்து இராப்பகலற்ற நிலையிலிருப்பார்கள். ஆ! என்ன வின்பமான நிலை! என்ன ஆனந்தம்! அப்பொழுது மனமெங்கே! புலனெங்கே! அவைகளின் சேட்டைகளெங்கே! நன்மை தீமைகளெங்கே! விருப்பு வெறுப்பெங்கே! பிறப்பிறப்பெங்கே! நினைப்பு மறப்பெங்கே! உலகமெங்கே! ஓ, எங்குந் தானே தானாய் நிற்கும் நிலை யல்லவோ!

அந்தவனமும், பக்குவிகள் அங்குகேட்கும் அதிசயவோசையும், லௌகிகத்திலழுந்துபவர்களுக்கு ஒருவிதமான வுபயோகத்தையுங் கொடா. சூரியவொளி குருடனுக்கு எவ்வித முபயோகப்படாதோ, அவ்விதமே லௌகிகர்களுக்கு இவ்வனமும் உபயோகப்படாது. அவர்களுக்கு வனத்தின் காட்சியும், அதிலெழும் ஓசையும், ஊமைகண்ட கனவையும் செவிடன் காதிலூதிய சங்கு நாதத்தையு மொக்கும்.

சித்தகுமாரன் போய்ச் சேர்ந்தவனம், அந்தவனமே. அவரங்குபோய்ச் சேர்ந்தவுடன், அவரடைந்த கஷ்டங்களும் வேதனைகளும், தாமே யொழிந்தன. அவருக்கு அவரை யறியாது மிகவுஞ் சந்தோஷமானவோருணர்ச்சி யுண்டாயது. அவ்விதமானவுணர்ச்சியை அவர் தனது சீவியகாலத்தில் ஒருநாளும் உணரவில்லை. மனஞ் சாந்தமடைந்தது. வைராக்கியநாதனிலிருந்த பற்று அடியோடு கழன்றது. தனக்கு அவருடைய சகாயந்தேவையில்லையென்னுந் திடம் வந்தது. அவரைவிட்டுப் பிரிவதே புத்தியென்னு மெண்ண முதயமானது. தமியனாயிருக்கும் விருப்பமுண்டாயது. சும்மாவிருப்பதே சுகமென்னு மெண்ண முதித்தது. ஆனால், சும்மா விருக்கும்வழியவருக்குத் தெரியவில்லை. அந்த ஞானசூரியன் இன்னுமவரிட முதயமாகவில்லை. இருந்தும் சூரியனுதிக்கச் சில நாழிகைகளுக்குமுன், தங்களியற்கையறிவாலறிந்து, *சேவல்கள்கூவுவதும்நரிகள் கூப்

---

* நெஞ்சறிவிளக்கம்.

தாவுநல்லுதயகாலந் தபனன்றே ரெழும்பக்கண்டு
கூவுமாங் குக்கிடங்கள் கூப்பிடும் காட்டிற்சம்பு
மேவியே நீயுமந்த மெய்யறிவறிந்தாயானால்
மூவர்கோனாகை நாதர் முன்வந்து நிற்பார் நெஞ்சே.



பிடுவதும்போல சித்தகுமாரனிடத்தும் அவ்விதமான வோரறிவு தோற்றியது.

வைராக்கியநாதன், இனிமேல் சித்தகுமாரனோடு கூடித்திரிவதால், ஓர் பிரயோசனமு மில்லையென்றும், தானவருக்குச் செய்யவேண்டிய கடமைகள் முற்றுப்பெற்றனவென்றும் தன்னை விரும்புபிவர்களோடு கூடி அவர்களுக்குபகாரியா யிருப்பதே புத்தியாகுமென்றும் நினைத்து அவரை விட்டுப் பிரிய மனங்கொண்டார். இருந்தும் சிறிது தூரம் அவரைப் பின்றொடர்ந்தார். சித்தகுமாரனோ, அவரைத் திரும்பியும் பாராது விரைவாகப் போய்விட்டார். ஆகையால் வைராக்கியநாதன் சித்தகுமாரனைத் தனியனாய் விட்டுப் பிரமபுரத்தை நோக்கிநடந்தார்.

சித்தகுமாரன் சஞ்சரித்து வந்த வனத்தினெல்லையில் ஓர் வெளியில், ஓர் குமராலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதிலெழுந்தருளியிருக்கும் மூர்த்தி மிகவும் விசேஷம் பெற்றவர். குமாரக்கடவுள் தம்மை யடைந்தவர்களுக் கபயங்கொடுத்து, அருள் செய்வதற்கு குரு முகூர்த்தமாய் எழுந்தருளியிருக்கின்றார். அவ்வாலயத்தில் அவரை எண்ணில்லாதவர்கள் வந்து தரிசனை செய்வார்கள். அனேகர் சுவாமிதரிசனத்தின்பொருட்டு அங்குவந்து அவ்வனத்தினோரத்தில் பர்ண சாலைகளமைப்பித்துச் சிலநாட்கள் அங்கு வசிப்பர். பக்தர்கள் செய்யும் பசனையோ வனத்திலுண்டாகும் ஓங்கார வொலியையும் அடங்கச்செய்யும். கடற்காற்றுக் கணகணவென வீசவும், வனத்திலிருந்து, கமகமவென நறுமணங் கமழவும், பக்தர்கள் தோம் தோம் எனத் தாளம் போடவும், அவர்கள் திமி திமியெனவானந்தக் கூத்தாடவும், நமநமவென ஸ்தோத்திரஞ் செய்யவும் சுவாமி தரிசனஞ் செய்பவர்கள், பரவசராகி, கடவுளிற்றங்கள் மனதைப்பதித்து, உலகத்தைமறந்து, தலைமேற்கூப்பியகையுடன் ஆடாது, அசையாது, சித்திரப்பதுமைகள் போல, சந்நிதானத்தில்நிற்பார்கள். கந்தசுவாமியார், அங்கே யெழுந்தருளியிருப்பதால், அந்தவனம் கந்தவனமென் றழைக்கப்படும்.

கந்தவனத்திலே, சித்தகுமாரன், ஏகாந்தமாயிருந்து தியானஞ்செய்வார். பசிவேளையில் ஆலயத்துக்குச் சென்று அங்கு வசிக்கும் பக்தர்களிடம் யாதும் வாங்கிப் புசித்துவிட்டு மறு

படியும் காட்டினுட் புகுந்து, தியானஞ் செய்து கொண்டிருப்பார். இவ்விதமாக அவர் தியானஞ் செய்யுங் காலங்களில் அவருக்கு சந்தேகங்களும், மலைவுகளுந் தோற்றி, அவரைமயக்கும். அந்த மயக்கவிருளை யோட்டுவதற்குப் பலமுறை பிரயாசப்பட்டும் பயனடையவில்லை. ஆகவே அதைத் தெளிவித்தற்கு ஓர் ஞானசாரியர் தேவையெனவும், அவரே தனக்கு உய்யும் வழியைக் காட்டுவாரெனவும், அவ்விதமானவோர் ஆசாரியரைத் தானடையவேண்டுமெனவும், மனதிற்றிட்டம் பண்ணினார்.

## உகூ-ம் அத்தியாயம்.

இஃதிங்ஙனம் நிகழ, மானதராசனும் அவரது நண்பர்களும் சித்தகுமாரன் வீட்டைவிட்டுப் புறப்பட்ட வன்றிரவு விடிந்தபின், சித்தகுமாரனை அங்கு காணாது, வழக்கம்போல வருவாரெனக் காத்திருந்தார்கள். மத்தியானமாகியும், அவர் வீட்டுக்குத்திரும்பவில்லை. அன்று சாயுங்காலம் அவர் வழக்கமாகப் போயிருக்குமிடங்களிற் றேடிப்பார்த்தும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பலரிடத்தும் விசாரணை செய்தார்கள். ஒருவராவது அவரைக் கண்டதாகச் சொல்லவில்லை. இவ்விதமாகச் சூரியாஸ்தமனம் வரைக்கும் அவர்கள் அவரைத் தேடிப் பார்த்தார்கள்.

அடுத்த நாடடொடக்கம், அயற்கிராமங்களுக்குச் சென்று பலவிடங்களிலுந் தேடியும், விசாரித்தும் பார்த்தார்கள். அவரைப்பற்றிய செய்தி யொன்றும் அவர்களுக்குக் கிட்டவில்லை. அவரிறந்து போனாரோவெனஐயங்கொண்டு, காடுகள், செடிகள் மலைகள், ஆறுகள், குளங்கள், வாவிகள் முதலியனவற்றையெல்லாஞ் சோதனை செய்தார்கள். இவ்விதமாக அனேக நாட்கள் கழிந்தன. அதன்பின் தூரத்தேயுள்ள கிராமங்களிலுஞ் அவைகளுக்குச் சேர்ந்த காடுகளிலுந்தேடும்பொருட்டு, மானதராசன் காமநாதன் ஆணவநாதனென்னும் மூவரும் புறப்பட்டார்கள். ஒவ்வொரு கிராமமாய் ஒவ்வொரு காடாய் அவர்கள் தேடிப் பார்த்தும், அனுகூலப்படாது சுற்றில் காமபுரத்தை யடைந்து அக்கிராமவாசிகளிடம் அங்கு நடந்த சம்பவங்களனைத்தையும் கேள்விப்பட்டு அவரிறக்கவில்லையெனச் சந்தோஷமும் திடமுங் கொண்டு, அயற்கிராமமாகியகாமபுரத்தை நோக்கிநடந்தார்கள். அவ்விடத்தும் நிகழ்ந்தனவற்றைக் கேள்விப்பட்டு, அடுத்த காட்டை நோக்கிச் சென்றார்கள். அதிகதூரம் நடந்து தாங்கள் சென்ற காட்டைக் கடந்து, அடுத்தகாட்டினெல்லையிற் போகும் பொழுது, தங்களுக்கெதிரே, வைராககியநாதன் வருவதைக் கண்டு, அவரிடம் விசாரித்தறியும் பொருட்டு, ஓரிடத்திலுட் கார்ந்து அவர் வரும்வரைக்கும் காத்திருந்தார்கள்.



வைராக்கியநாதன் அங்கு வந்தவுடன் மூவருமெழுந்து மிக்க ஆவலுடன் சித்தகுமாரனைப்பற்றி விசாரணைசெய்தார்கள். அவர் அவர்களை நோக்கி, "நீங்களேன் கஷ்டப்படுகின்றீர்கள். சித்தகுமாரனைப் பற்றிய சிந்தனை இனிமேல் உங்களுக்கு வேண்டியதில்லை. அவரிவ்வுலக வாழ்வை யொருவினர். அவருங்களுக்குதவார். ஆகையால், நீங்கள் தேடுவதாற் பயனில்லை. அவரை நான் கரையேற்றி விட்டேன். அவரிப்பொழுது இருக்குமிடத்துக்கு, உங்களாற் போகமுடியாது. அவர் முன்னிலையிலில்லை. தேடிப்போகின்றவர்கள் அவரைக் காண முடியாது திகைப்பர். அவரிப்பொழுது இருக்குமிடத்தைப் போய்ச் சேர்ந்தவர்கள் திரும்பியுங்களிடத்துக்கு வரமாட்டார்கள். ஆகையால் நீங்கள் திரும்புவதே புத்தியாகும். அன்றிப் போகவிரும்புகில் நீங்களென்னைத் துணைக்கொள்ள வேண்டும். என்னையன்றி வேறொருவரும் உங்களுக்கு வழிகாட்டமுடியாது. பிரியமானால்என்னைப் பின்றொடருங்கள். நானுங்களையும் அங்கு கொண்டுபோவேன்" என்றார்.

வைராக்கியநாதன் சொல்லியவற்றைக் கேட்டு, மூன்றுபேரும் சித்தகுமாரன் இறந்துவிட்டாரென்றும், அவருடைய மரணத்துக்கு வைராக்கியநாதனேகாரணரென்றும், தங்களையும் வைராக்கியநாதன் மரணத்துக் கிரையாக்க வழிதேடுகின்றாரென்றும் எண்ணி, அவரில் வெறுப்புங் கோபமுங் கொண்டார்கள். அப்பொழுது அவர்கள் முடியுமானால்வைராக்கியநாதனைக் கொலைசெய்தும்விடுவார்கள். ஆனால், அவர்கள் அவரையணுகப் பயந்து தூரத்தே நின்றார்கள்.

வைராக்கியநாதன் முன்னும் அவர்கள் பின்னுமாக, பிரமபுரத்தை நோக்கி, மூவரும் தளர்ந்த நடையோடு நடந்தார்கள். வைராக்கியநாதன் வேகமாய்ப் போகும்பொழுது அவர்கள் தன்னோடு கூடி வருவார்களோவென வெண்ணி, திரும்பிப் பார்த்துக்கொண்டு போனார். மானதராசனும் அவரது நண்பர்களும், அவரிலே கொண்ட வெறுப்பினாலே, கூடிப்போகாது தமியராய்ச் சென்றார்கள். வைராக்கியநாதன் அவர்களுடைய உள்ளக்கிடக்கையை யறிந்து, மிகவிரைவாக நடந்து அவர்களுடைய கண்களுக்குத் தோற்றாது மறைந்தபின், அம்மூவரும் சுவாமியாரைக்கண்டு, அங்கு நிகழ்ந்தனவற்றையும் தாங்கள் கேள்விப்பட்டனவைகளையுஞ் சொல்லி, அவருடைய எண்ணத்தின்படி யொழுகுவதே முறையென நினைத்து, பிரமபுரியை நோக்கி நடந்தார்கள். அவர்கள் பிரமபுரிக்குவந்தவுடன் சுவாமியாரைக்கண்டு, அவருக்குச் சகல விபரங்களையுஞ் சொல்லி புலம்பியழுதார்கள்.

சுவாமியார், அவர்களையிருத்தி, அவர்களின் தேகத்தைத் தடவி, அழவேண்டாமென ஆறுதல் சொல்லி, பின்வருமாறு கூறினார்.

"நீங்கள் வைராக்கியநாதன் கூறியவற்றை விளங்காது, துக்கப்படுகின்றீர்கள். உலகத்தவர்கள், உண்மையைவிளங்காது தோற்றத்தைக் கண்டு, துக்கப்பட்டுப் புலம்புகின்றார்கள். வைராக்கியநாதன் சொல்லியவற்றின்கருத்து இதுவே:- நீங்கள் மனக்கிலேசமடைய வேண்டியதில்லை. சித்தகுமாரன் லௌகிக வாழ்க்கையை விட்டுவிட்டார். ஆகையால் அவரைத் தேடிப் பிடிப்பதால், நீங்கள் ஒரு பிரயோசனமு மடையமாட்டீர்கள். அவரிடமிருந்து ஓர்வித உதவியும் பெறமாட்டீர்கள். அவரிப்பொழுது, முன்னேயிருந்த நிலையிலில்லை. ஞானபூமிகள் ஒன்றிலிருக்கின்றார். அப்பூமியை யடைந்தவரே, அவருடைய நிலையை யறியவல்லவர். ஏனையோர் அப்பூமியை யடைய முடியாது. நீங்களும், அந்தப்பூமியை யடைய விரும்புகில், வைராக்கியத்தைத் துணைக்கொள்ள வேண்டும். வைராக்கியமே, உங்களை யவ்விடத்துய்க்கும்.



நான் சொல்லியபடி விளங்காது, மாறாக விளங்கிக் கொண்டு, வைராக்கியநாதனில் வெறுப்புக்கொண்டீர்கள். உங்களைப்போல அனேகர் ஞானிகள் கூறியிருக்கும் பரிபாஷையை விளங்காது, அவர்கள் கூற்றை வெறுங்கூற்றென நினைத்துப் பரிகாசம் செய்கின்றார்கள். உதாரணமாக,

கட்டுப்படாதந்த வச்சுமட்டம் அது
காலோபன்னிரண்டாகையினால்
எட்டுக்கயிற்றினாற் கட்டிக்கொண்டாலிது
மட்டுப்படுமடி ஞானப்பெண்ணே.

என்னும் பாவின், உண்மைப்பொருளை நோக்காது வெளிப்படையாயிருக்கும் பொருளைப்பார்த்து, குதிரைகளுக்குப் பன்னிரண்டுகால்களுமுண்டா? அவ்விதமிருப்பினும், எவ்விதம் பன்னிரண்டு கால்களையும் எட்டுக்கயிறுகளினாற் கட்டுவதென ஆட்சேபிக்கின்றனர். அதன் உண்மையான கருத்துப் பின்வருமாறு:—

வழக்கமாக வாசி (சுவாசம்) பன்னிரண்டங்குலம் பாயும். பன்னிரண்டங்குலம் பாயுமாகில், சுவாசத்தைக் கைவசமாக்க முடியாது. அதை யெட்டங்குலம் செல்லவிடின், அதைக் கைவசமாக்கலாம். (கால்=காற்று, சுவாசம். வாசி=குதிரை. கயிறு=விடாது தடுக்கும் சக்தி. அச்சுமட்டம்=குதிரை=வாசி மட்டுப்படுதல்=வசமாகல்). உண்மைக் கருத்தையறியின் மனச்சந்தோஷமடைவது மன்றி, ஞானிகள் எவ்வளவு ஞானத்தைப் பாக்களிற் புதைத்து வைத்திருக்கின்றார்களென அறியலாம். இப்பாவிற் கூறப்பட்டிருக்கும் உண்மையை யோகிகள் தங்களனுபவத்திற் காண்பார்கள்.

## ௩0-ம் அத்தியாயம்.

காமநாதனும், ஆணவநாதனும், சுவாமியார் செய்த உபந்நியாசத்தினாலும், அவர் பகர்ந்த விடைகளினாலும், அவரளத்தற்கரிய ஆழ்ந்த வறிவுள்ளவரெனக்கண்டு, அவரில் முன்னையிலும் ஆயிரம் மடங்கு மதிப்புள்ளவர்களாகி, தங்களாத்மலாபத்துக்கு வேண்டிய சாத்திரங்களைக் கற்று வந்தார்கள். அவர்களில் முன்னே காணப்பட்ட காமம், குரோதம், லோபம், மதம்

முதலிய துற்குணங்கள் முழுவதும் அற்றுப் போயின. சாந்தம் சன்மார்க்கம், தயாளம், பொறுமைமுதலிய நற்குணங்களமைந்தன. ஆகையால் சுவாமியார் அவர்களுக்கு முன்னிடப்பட்டிருந்த காமநாதன், ஆணவநாதன் என்னும் பெயர்களை மாற்றி அவர்களிடத்தப்பொழுதமைந்திருந்த குணங்களுக்கியையப் பேரின்பநாதன், சாந்தலிங்கன் என்னும்பெயர்களைச் சூட்டினர். அன்று தொடக்கம், அனைவரும் அவர்களுக்கு அப்பெயர்களையே வழங்கி வந்தார்கள்.

மானதராசன். பேரின்பநாதன், சாந்தலிங்கன் என்னும் மூவரும் ஒழுங்காக ஆலயதரிசனமும், யோகாப்பியாசமுஞ் செய்து வருங்காலத்தில் தங்கள் கடமைகளைப் பார்க்கும் நேரங்களைத்தவிர மற்றைய நேரங்களை சுவாமியாரிடத்தில் அறிவு நூல்களைக் கற்பதிலும் தங்களுக்கெழும் சந்தேக விபரீதங்களை யவரிடஞ் சொல்லி அவைகளை யகற்றுவதிலும் செலவழித்து வந்தார்கள். அக்காலங்களில் சுவாமியார் அவர்களுக்கு அத்தியாவசியம் வேண்டிய வுண்மைகளைப் போதித்து வந்தார். ஆரம்பத்தில் மாயை யின்னதென்பதையும்அதேயுலகதோற்றத்துக்கு காரணமாயுள்ள தென்பதையும் விரிவாய் விளக்கினர்.

சுவாமியார். இயற்கையிலே காணப்படும் சகல தோற்றங்களும் மாயையால் வந்தனவெனவும், அத்தோற்றங்கள் முற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினைக் கீடாக சகச மலத்தினாலுண்டாகுமெனவும், சகல சிருட்டிகளும் எங்களுக்கு நிதமும் அறிவித்துக்கொண்டிருக்கின்றன.

மானதராசன். அவைகளை நாங்கள் காணவுமில்லை, கேட்கவுமில்லை

சு. உலகவாசனைகளிற் றங்கள் புலன்களைச் செலுத்தி, அவைகளிலாழ்பவர்களுக்கு நாம் கூறியவைகள் புலப்படா. லௌகிகத்திலழுந்துபவர்கள், அவைகள் சாதாரண சம்பவங்களென நினைத்து அவைகளைக் கவனிப்பதில்லை.

மா. இனிமேலாவது, அவைகளிலெங்கள் புலன்களைச்செலுத்தி அவைகளை யறியும்படி தயைசெய்து சிலவற்றைச் சொல்லும்படி கோருகின்றோம்.



சு. சிருட்டிகள் பூமியிற் செனித்தவுடன், சில மாயோ, மாயோவெனவும், சில கீயோ, கீயோ வெனவும், சில கூயோ, கூயோவெனவும் கத்துவதை நீங்கள் கேட்கிறதில்லையா?

மா. அச்சத்தங்கள், சிருட்டிகளின் இயல்பான சத்தங்களேயன்றி, விசேஷமானவைகளல்லவே.

சு. இயல்பான சத்தங்களே யுண்மையையுரைக்கும். செயற்கையாலானவை எப்பொழுதும்உண்மையையுரையா. ஆகையால் சுபாவத்தைக் கவனித்து அதில் நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கின் அனேக வுண்மைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

மா. அவைகளை நாங்கள் வழக்கமாகக் கேட்பதுண்மை. ஆனால் அவைகள் கருதுமுண்மைகளை யறியாதபடியால் நாங்கள் அவைகளுக்குச் செவிகொடுப்பதில்லை.

சு. அச்சத்தங்கள், அரிய ஞானார்த்தங்களைக் கொண்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி ஞானிகள் என்ன கூறுகின்றார்களெனச் சிந்தித்துப் பாருங்கள்.

1. உதித்தெழுந்த வாலையு முயங்கிநின்ற வாலையும்
கதித்தெழுந்த வாலையுங் காலையான வாலையும்
மதித்தெழுந்த வாலையும் மறைந்து நின்ற ஞானமுங்
கொதித்தெழுந்து கும்பலாகி கூயுங் கீயுமானதே.

2. நாதமான வாயிலில் நடித்துநின்ற சாயலில்
வேதமான வீதியில் விரிந்தெழுந்த சுடரிலே
கீதமான கீயிலே கிளர்ந்துநின்ற கூயிலே
பூதமான வாயிலைப் புகலறிவனாதியே.

3. சடுதியான கொம்பிலே தத்துவத்தின் கீயிலே
அடுதியரான ஆவிலே யானிருந்த கூவிலே
இடுதியென்ற சோலையி லிருந்த முச்சுடரிலே
நடுதியென்னு நாதமோடி நன்குற வமைந்ததே.

மா. இப்பொழுது, அச்சத்தங்களின் ஆழ்ந்த கருத்து விளங்குகின்றது. தயைசெய்து இன்னுஞ் சிலவற்றைச் சொல்லும்படி பணிந்து கேட்கின்றோம்.

சு. நாம் முற்பிறப்பை யுடையேமெனத் தாய்மார் பிள்ளைகளைத் தாலாட்டும் பொழுது சொல்வதைக் கேட்கவில்லையோ? தாய்மார் "நீர், ஆராரோ, ஆரிரரோ" என்று எப்பொழுதும் தாலாட்டுகின்றார்களே. அதன் கருத்தென்ன? பிள்ளையை நோக்கி, நீர் முற்பிறப்பில் ஆரோ எவரோ எனப் பிள்ளையை வினவுவது போலிருக்கவில்லையா? அப்பொழுது பிள்ளை தன் சத்தத்தினால் என்னசொல்லுகின்றதெனக் கவனித்தீர்களா?

மா. நாங்கள் பிள்ளைகளின் அழுகைச் சத்தத்தைக் கேட்கின்றோம். ஆனால், அதன் கருத்தை என்னவெனச் சிந்திக்கவில்லை.

சு. பிள்ளைகள் மாயோ, மாயோ வென அழுவது "நாங்கள் மாயையாலானோம் மாயையாலானோம்" எனச் சொல்வதாகும். இன்னும் அப்பிள்ளைகள் வளர்ந்து விளையாடும் பொழுது,

"கீச்சுக் கீச்சுத்தம்பலம் கீயோமாயோத் தம்பலம்
மாச்சு மாச்சுத் தம்பலம் மாயோ மாயோத் தம்பலம்

எனப் பாடிக்கொண்டு கீச்சுக் கீச்சுத்தம்பலம் விளையாடுகின்றார்கள்.

மா. அதன் கருத்தென்ன?

சு. முற்காலத்திருந்த ஞானிகளும் சித்தர்களும் சனங்களுக்கு நன்மை பயக்கக் கூடியதும் ஆத்மவீடேற்றத்தைக் கொண்டு வரக்கூடியதுமான மந்திரங்களை, விளையாடும் பொழுதும், தொழில்களைச் செய்யும்பொழுதும் உபயோகிக்கக் கூடிய பாக்களில் நுழைத்துப் பாடும்படி பழக்கி வந்தார்கள். அப்பாக்களைப் பாலர்முதல் விருத்தரீறாக, அனைவரும் அக்காலங்களில் பாடிவந்தார்கள். காலாதீதத்தில், சனங்கள் அவ்விதஞ் செய்வது அநாவசியகமென நினைத்து அப்பழக்கத்தை விட்டுவிட்டார்கள். ஆகையால், தற்காலத்தி லுள்ளவர்களுக்கு அவைகள் தெரியமாட்டா. அப்பாக்களில் மிகச்சிலவே இப்பொழுது உபயோகிக்கப்படுகின்றன

மா. அவ்விதமான வழக்கங்களிற் சிலவற்றைச் சொல்லும்படி பிரார்த்திக்கின்றேம்.



சு. கந்தசுவாமியாரை மரக்கலத்திலேற்றி, இலங்கைக்குக் கொண்டுவந்தபொழுது, முற்குகர் "ஓவேலா" எனச்சொல்லி கலத்தை யோட்டி வந்தனர். இப்பொழுதும் தமிழ் மாலுமிகள் கிறிஸ்தவர்களா யிருப்பினும், முகம்மதியராயிருப்பினும் "ஓவேலா" எனச்சொல்லியே கலத்தை யோட்டுகின்றார்கள். திருவள்ளுவநாயனார், தனது நண்பரான ஏலேலசிங்கன் என்னும் பிரபுவின் மரக்கலம் நிலத்திற் பொறுத்து மிதவாதிருந்தபொழுது, "ஏலேலையா" எனச் சொல்லி மரக்கலத்தைத் தள்ளினார். உடனே மரக்கலம் மிதந்து ஓடவாரம்பித்தது. பாரமிழுப்பவர்கள் இப்பொழுதும், "ஏலேலையா" வெனச் சொல்லி இழுக்கின்றார்கள்.

மா. தயைசெய்து, "கீச்சுக் கீச்சுததம்பலம்" முதலியவற்றின் கருத்தை விளக்கும்படி மிகமன்றாட்டமாய்க் கேட்கின்றோம்.

சு. சகல சிருட்டிகளும் உயிர் நீங்குந் தருணத்தில் அதாவது உலகத்தை மறந்து தங்கள் சுபாவ நிலையிலிருக்கும்பொழுது, சில கீச்சு, கீச்சு என்றும் சில கீயோ கீயோ, வென்றும் சில மாச்சு மாச்சு வென்றும் சில மாயோ மாயோ வென்றும் கத்துவதைக் கேட்கவில்லையா? அச்சத்தங்கள் பிறக்கும் பொழுது கூடப்பிறந்தன. அவைகள் பிறந்து மாயையாற் கட்டுண்டு, மறைக்கப்படும்பொழுது அவைகளை மறந்து விடுகின்றன. இறக்கும்பொழுது சுபாவம் மேற்பட்டு இச்சத்தங்களையுண்டாக்குகின்றது. அச்சத்தங்கள் தோற்றத்திலும் ஒடுக்கத்திலும் விசேஷமாய்க் காணப்படும். ஞானிகளின் பாக்கள் அவைகளின் கருத்தை நன்கு விளக்கும்.

1. உந்தியிற் சுழிவழியி லுச்சியுற்ற மத்தியிற்
சந்திர னொளிகிரணந் தாண்டிநின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வளையிற் பஞ்சபூத விஞ்சையாங்
கிந்துபோற் கீயினின்று கீச்சு மூச்சு வென்றதே.

2. அகாரமான தம்பல பனாதியான தம்பலம்
உகாரமான தம்பல முண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே.

3. பார்த்துநின்ற தம்பலம் பரமனாடு மம்பலம்
கூத்துநின்ற தம்பலம் கோரமான தம்பலம்
வார்த்தையான தம்பலம் வன்னியான தம்பலம்
சீற்றமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே.

சிச்சு சிச்சென்றும் சியோ, சுயோவென்றும் தம்பலம் தம்பலமென்றும், நிதமுஞ் சொல்லிக்கொண்டு வரின், அவைகளை யுச்சரிப்பவர்கள் பிரணவத்தையும் பஞ்சாட்சரத்தையும்செபஞ் செய்பவர்களடையும் பயனை யடைவார்கள்.

மா. காரியம் விளங்காது ஒன்றைச்செய்வதால் யாதும் பிரயோசனமுண்டா?

சு. இனிக்குமெனத் தெரியாது இனிப்பான பதார்த்தத்தை யுண்கில் இனியாதா? அதுபோல நன்மையைத் தருமெனத் தெரியாது ஒன்றைச் செய்வதால், நன்மையையே யன்றித் தீமையைக் கொடாது.

மா. மாயை, மாயை எல்லாம் மாயை யென வனேகர் சொல்லுகின்றார்களே. அதைப்பற்றிச் சற்றே சொல்லும்படி யிரந்து கேட்கின்றோம்.

சு. அவித்தை (அஞ்ஞானம்)யே மாயைக்குக் காரணமாயிருக்கின்றது. அந்த மாயையே பிறவியைக் கொடுப்பதும். அவித்தையை யறுக்கும் வரைக்கும் மாயை கெடாது. ஆகையால் அவித்தையை யொழிக்க வழிதேடவேண்டும்.

மா. அவித்தையை யெவ்வித மறுக்கலாம்.

சு. இருளை வெளிச்சத்தாலோட்டுவது போல, அஞ்ஞானத்தை ஞானத்தாலகற்ற வேண்டும். நீங்கள் மூவரும் நாம் யார் என்பதைப் பற்றி நன்றாயறிவீர்கள். இப்பொழுது நீங்கள் சாதனை செய்து, ஞானத்தைப் பெறவேண்டும்.

மா. அச்சாதனங்களை எங்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு, மன்றாடிக் கேட்கின்றோம்.

சு. சாமானியரைப்போல, நீங்கள் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டியதில்லை. சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் அனுசரித்து, அதிலனுபவமுள்ளவர்களா யிருக்கின்



றீர்கள். மனச்சுத்தமுள்ளவர்களாய்வந்து விட்டீர்கள். ஆனால் மனம் எப்பொழுதும்ஒரேநிலைத்தாயிருக்கமாட்டாது. அதை யொருநிலைப் படுத்துவதற்கான சாதனங்களை நீங்கள் சாதனை செய்யவேண்டும். அவைகளைப்பற்றி யின்னொரு முறை கூறுவேன்.

## ௰௧-ம் அத்தியாயம்.

ஒருநாள், சுவாமியார் மானதாசன் முதலிய மூவரையு நோக்கி, நானுங்களுக்கு முன்னே கூறியபடி, சாதனங்களைப் பற்றிச் சுருக்கமாய்க் கூறுவேன். நம்மவருட் சிலர், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கினையும் சாதன சதுட்டயமென்பர். வேறுசிலர், நித்தியாநித்தியவஸ்துவிவேகம் இகமுத்திரார்த்தபரபோக விராகம், சமாதிசட்க சம்பத்து, முமுட்சுத்துவம் என்னும் நான்கினையும் சாதன சதுட்டயமென்பர். பெயர்களைப்பார்த்து மயங்காதீர்கள். இருவகையும் பெயரளவிற் பேதமுள்ளவைகளே யன்றி, எதார்த்தமளவிற் பேதமுள்ளவைகளல்ல. சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையுமனுசரித்து அவைகளில் நீங்கள் அனுபவமுதிர்ச்சி யடைந்தபடியால் உங்களுக்கு அவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இனிமேல் நீங்கள் ஞானசாதனை செய்யவேண்டும். அதைப்பற்றிப் பின்னை கூறுவேன்.

இப்பொழுது மற்றைய சாதனங்களைப் பற்றிச் சொல்லி, அவைகளின் தாரதம்மியங்களை உங்களுக்குக் கூறுவேன்.

நித்தியா நித்திய வஸ்துவிவேகம்—நித்தியமான வஸ்து வின்னதெனவும், அனித்தியமான வஸ்து வின்னதெனவும், அறிந்து, அநித்தியமானவஸ்துக்களிலாசைவைக்காது நித்தியமான வஸ்துவிலாசை வைக்கவேண்டும் என்னும் அறிவே. அந்த நித்திய வஸ்துவென்ன? கடவுளை யன்றி வேறொன்றிருக்கின்றதா? ஆகையாற் கடவுளைப்பற்றியறியும் விவேகமே அந்த விவேகமாகும். அந்த விவேகமுள்ளவர்களே, ஆலய வழிபாடு, சுவாமி தரிசனம் முதலியவைகளைச் செய்து வருவார்கள். சரியையை யனுசரிப்பவர்களும் அவைகளையே

செய்வார்கள். ஆதலால் நித்தியா நித்திய வஸ்து விவேகமும் சரியையும் ஒக்கும்.

(2) இகமுத்திரார்த்த பரபோகவிராகம்—இம்மை மறுமைகளில் வரும் போகங்களில் வெறுப்படைதல். அதாவது, இப்பிறப் பிலாவது மறுபிறப்பிலாவது போகங்களை யனுபவிப்பதால், ஒருபயனுமில்லையென அவைகளை யொதுக்கி விடலாகும். அவ்விதமான நினைவுள்ளவர்கள், போகங்களைக் குறித்து, கிரியைகள் செய்யாது, மோட்ச பதவியை யடைய விரும்பி சிவபூசை முதலியவற்றைச் செய்வார்கள். கிரியையை யனு சரிப்பவர்களும் இவைகளையே செய்வார்கள். ஆகையால் இகமுத்திரார்த்த பரபோகவிராகமும் கிரியையும் ஒக்கும்.

(3) சமாதிசட்க சம்பத்து— இச்சாதனம் யோகசாதனத்தி லடங்கும். (பின்னே விரிவாய்க் கூறப்படும்).

(4) முமுட்சுத்துவம்— மோட்சவிருப்பம். ஞானசாதனமும் மோட்சத்தை விரும்பியே செய்யப்படும். ஆகவே, முமுட் சுத்துவத்துக்கும், ஞானசாதனத்துக்கும் பேதமில்லை.

மூன்றாவதான சமாதிசட்கசம்பத்து—சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை என்னும் ஆறினையும் சம்பா தித்துக் கொள்ளுதல்.

(1) சமம்-மனதைத் தான் நினைத்தபடி செல்லவிடாது தண்டித்தல்.

(2) தமம்-ஞானேந்திரியங்களையும் கர்மேந்திரியங்களையும் புறம்பே செல்லவிடாது தண்டித்தல்.

(3) விடல்-குடும்ப விவகாரங்களைச் சுருங்கச் செய்தல்.

(4) சகித்தல்-சுகதுக்கங்களை வினைப்படி வருவனவென நினைத்து பொறுமையுடன் அனுபவித்தல்.

(5) சமாதானம்-ஞானநூல்களைக் கற்று, அவைகளைச் சதா தியானித்தல்.

(6) சிரத்தை-ஞானநூல்களைக் கற்பிக்கும் சற்குருநாதனி லும் அவர் கற்பிக்கும் ஞானநூல்களிலும் அன்பு வைத்தல்.



மேலேசொல்லப்பட்டவைகளில், முதல் மூன்றும் யோகாப் பியாசிகளுக்கு அத்தியாவசியகமானவை. அவைகளைச் சாதனை செய்யாது யோகாப்பியாசஞ் செய்வது கூடாது. பின்னைய மூன்றும் நியமமென்றழைக்கப்படும் வைராக்கியத்திலடங்கும். ஞானவிசாரணை செய்பவர்கள் வைராக்கியமின்றி, ஞானமடைய முடியாது. ஆகவே மேலே கூறப்பட்ட சமாதிசட்கசம்பத்தில் முதன் மூன்றும் யோகத்திலும், பின்மூன்றும் ஞானத்திலு மடங்கும்.

ஆகவே, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சாதனங்களும், நித்தியா நித்திய வஸ்துவிவேகம், இகமுத்திரார்த்த பரபோகவிராகம், சமாதிசட்கசம்பத்து, முமுட்சுத்துவம் என்னும் நான்கு சாதனங்களுக்கும் ஒப்பா னவை. இருவகைகளையும் வேறு வேறென நினைத்து, வெற் றெலும்புக்குச் சண்டை செய்யும் நாய்களைப்போல, சொல் வாதஞ் செய்வது மூடத்துவமாகும். வாதமுறையில் பேதமிருப் பதாக ஒப்புக்கொள்ளினும், அவைகளைப்பற்றி வாதுபுரிவதிலும் சண்டையிடுவதிலும் நாமடையும் பயனென்ன? ஒவ்வொரு மதத்தரும் தத்தம் பக்குவத்துக்கும், மனவியல்புக்கு மேற்ற சாதனங்களைக் கைக்கொண்டு அவைகளைச் சாதிப்பது யுக்த மல்லவா? ஒரு சாதனையுமின்றி நிரீச்சுரவாதிகளையும் நபாதி களையும்போல விருப்பது மற்றவர்களுக்குச் சம்மதமா? சிவகா ருண்ணியமுள்ளவர்களும் மார்க்கபக்தியுள்ளவர்களும் சமயங் களைப்பற்றி வீண்வாதமுஞ் சண்டையுஞ் செய்யார்.

மா. மேலே கூறப்பட்டிருக்கும் சாதனங்களையெவ்வளவு காலத் துக்குச் செய்துவரவேண்டும்?

சு. காலவரையறை எல்லாருக்கும் ஒரே வகைத்தாயிராது. அது அவரவர் பக்குவத்துக்கும் சுபாவத்துக்கும் தகுந்ததாயிருக் கும். யோகாப்பியாசஞ் செய்து, அதில் அனுபவ முதிர்ச்சி யடைந்தவர்கள் மிகவிரைவில் இச்சாதனங்களைச் செய்து முடிப்பார்கள். ஒவ்வொரு சாதனையிலும் ஸ்திரப்படும் வரைக்கும் அச்சாதனம் சாதனைசெய்யப்பட வேண்டும்.

மா. சுவாமி! அச்சாதனங்களை எல்லோரும் முறையாகச்செய்வ தாகத் தோற்றவில்லை. சரியை முதலியவைகளை யொவ்வொன்

றாக அனுட்டியாது, சிலர் சரியையில் ஆரம்பிப்பதாயும், சிலர் கிரியையிலாரம்பிப்பதாயும், சிலர் ஞானத்திலேயே தொடங்குவதாயும் தெரியப்படுகின்றது. அவ்விதஞ் செய்வதினால், செய்பவர்கள் பயனையடைவார்களோ? முறை தவறிச் செய்வதற்கு விதியுண்டா?

சு. நீங்கள் சொல்வதுண்மை. நீங்கள்சொல்வது போல, பலரும் பலவிதமாக ஆரம்பிப்பதே முறையாகும். பிறப்பிலே மனிதர்களனைவரும் ஒரே சுபாவமுள்ளவர்களாய்ப் பிறப்பதில்லை. சிலர் அதிவிவேகிகளாயும், சிலர் மந்தபுத்தியுள்ளவர்களாயும், சிலர் விவேகமே யில்லாதவர்களாயும் பிறப்பதை நீங்கள் காணவில்லையா? அவர்களுடையவிவேகம் அவர்களுடையமுற்சென்ன தேட்டத்துக்குத் தக்கதாயிருக்கும். அவ்விதமே முற்செனனங்களில் சாதனை செய்து முடித்த சாதனங்களை, செய்து முடித்தவர்கள் ஆரம்பிக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுடைய மனச்சார்பும், அவைகளை இப்பிறப்பிலாரம்பிக்கவாவது செய்யவாவது இடங்கொடுக்கமாட்டாது. செய்து முடித்தவர்களைச் செய்யவில்லை யெனச் சொல்வது தவறு. அவர்கள் தாங்கள் முற்பிறப்பில்விட்டவைகளிலேயே தொடங்குவார்கள். இதையே விட்டகுறை யென ஆன்றோர் கூறுவர். சிலர் பிறக்கும்பொழுது ஞானிகளாய்ப் பிறப்பதை நீங்கள் கேள்விப்படவில்லையா? ஸ்ரீ இராமகிருஷ்ணபரம அம்ச அவர்கள் அதிகங் கற்றவரல்ல. சரியை, கிரியை, யோகம் முதலியவைகளை முறையாக அனுட்டித்தவரல்ல. பின் அவர் ஞானியாய் வந்தது எவ்வாறு? அவர் முற்செனனங்களிற் செய்யவேண்டியசாதனங்களனைத்தையும் முடித்து ஞானமடைந்து சீவன்முத்தராய் வரமுன், பிராரத்துவ வினைவசத்தால் இறக்கநேரிட்டது. விட்டகுறையை இப்பிறப்பில் வந்து முடித்து சீவன்முத்தரானார். சீவன்முத்தர்களும், தத்தம் கன்மங்களுக்குத் தக்கதாகப் பலதிறத்தவர்களாவர். அவர்களைப்பற்றி பின்னொருமுறை கூறுவேன்.

## ௩௨-ம் அத்தியாயம்.

முன்னத்தியாயத்திற் கூறிய சாதனங்களைப்பற்றிச் சுவாமியார் பின்னுங் கூறுவாராயினார்.



சு. நீங்கள் முன்னேகூறப்பட்ட சாதனங்களில், நீங்கள் செய்து முடித்தவைகளை விட்டு மற்றவைகளை யாரம்பிக்க வேண்டும். யோகசாதனத்தில் நல்ல அப்பியாசமுள்ளவர்களானகையால் சமாதிசட்கசம்பத்தில் முதன் மூன்று சாதனங்களையும் செய்து முடித்து விட்டீர்கள். மற்றவைகளை ஒவ்வொன்றாக அப்பியாசஞ் செய்து, அவைகளை ஸ்திரப்படுத்த வேண்டும். அதன்பின் உபாசனை, தியானம் முதலியவைகளை யாரம்பிக்க வேண்டும்.

மா. உபாசனை யின்றித் தியானஞ் செய்ய முடியாதா?

சு. முன்னிலையாகவோர் உபாசனா மூர்த்தியை வைத்து, அவரைத் தியானஞ் செய்வது எவர்களுக்கு மிலகுவாயிருக்கும். ஓர்வித இலக்குமின்றி, மனம் என்னத்தைத் தியானிக்கும்.

மா. நாங்கள்எந்தமூர்த்தியை உபாசனாமூர்த்தியாக்கவேண்டும்?

சு. எவரெவருக்கு எந்தெந்த மூர்த்தி மனதுக்குவந்ததாயிருக்கின்றதோ, அந்தந்த மூர்த்தியை அவரவர் உபாசனா மூர்த்தியாக்குவது நன்மையாகும். அவரவர் மனதுக்குவந்த மூர்த்தியே அவரவர் மனதில் பதிந்திருப்பர். மனதில் நினைத்தவுடன் தோற்றுவர். சாத்திரங்கள் இன்ன தெய்வத்தையே உபாசனாமூர்த்தியாக்க வேண்டுமென வற்புறுத்த மாட்டா. ஏனெனில் சகல மதத்தவர்களுக்கும் பொதுவான சாத்திரங்கள் அவ்விதங் கூறுகில், அவை பொதுவானவைகளாயிருக்க மாட்டா. சகல மதத்தரும் அவைகளை யங்கீகரிக்க மாட்டார்கள்.

மா. மூர்த்திபாவனை எவ்வளவு காலத்துக்குச் செய்யப்பட வேண்டும்?

சு. நீங்கள் பாவனையின்றி, தியானிக்கக்கூடிய பக்குவம் வரும் வரையில் பாவனை வேண்டும். பாவனையின்றித் தியானிக்கக் கூடியவர்கள் ஞானிகளாவார். கடவுள் பாவனாதீதராகையால் பாவனையின்றித் தியானிப்பதே அவரைத்தியானிப்பதாகும்.

மா. சுத்த ஞானிகளாய் வந்தபின்னும் சிலர் பாவனைகளை மறக்காதிருக்கின்றார்களே.

சு. பாவனாதீத நிலையை யடைந்த ஞானிகளுக்கு பாவனை வேண்டியதில்லை. இருந்தும் காயமிருந்த பாண்டம்போல, சிலரிடத்து அவ்வாசனை காணப்படும்.

மா. பாவனையால் வரும் பயன் யாது?

சு. பாவனை செய்துகொண்டுவர, மனமானது வேறிடத்துச் செல்லாது பாவனையிற் பற்றி நிற்பதால், ஒருவழிப்படும். அப்பழக்கம்முதிர்ச்சியடையவே மனம்ஆடாது, அசையாது, ஒரேநிலையாய் நிற்கும். நிற்கவே, அது அகமுகநோக்கத்தைப் பெறும். பெறவே, புலன்களின் சேட்டை யொழியும். அப்பொழுது மனோவிர்த்தி நின்றுவிடும். நிற்கவே, துக்கநிவிர்த்தியுண்டாகி ஆனந்தமுதயமாகும்.

மா. சுவாமி! உங்களுடையஉபதேசத்தால், எங்களுக்கு ஞானத்தையடையுமிச்சையுண்டாயது. அதைப் பூர்த்தி செய்து வைப்பது உங்கள் கடனாகும்.

சு. இப்பொழுது உங்களிடத்துண்டாய ஞானம் வித்தியா ஞானம். அது கல்வி கேள்விகளால் வரும். அதை ஞானிகள் பரோச்ச ஞானமென்பர் அவ்வித ஞானம்விசாரணையில்லாக் காலத்து நழுவியும் விடும்.

மா. அதை நழுவ விடாது வைத்திருப்பதற்கு நாங்களென்ன செய்யவேண்டும்?

சு. கல்வி கேள்விகளாலடைந்த ஞானத்தைத் அனுபவத்துக்குக் கொண்டுவரவேண்டும். வரின் அதனுண்மைகள் மனதிற் பதிந்து நன்றாய்விளங்கும். விளங்கவே, அது இலகுவில் உங்களை விட்டு நழுவாது. அனுபவத்துக்குக் கொண்டுவரப் பட்ட ஞானம் அபரோச்ச ஞானமென்று சொல்லப்படும்.

மா. இந்த ஞானமும் நழுவுமா?

சு. இந்த அனுபவ ஞானமும் சிலகாலம் சாதனை செய்யப்படாவிடின், நழுவும். ஆகையால், அது நழுவாது, ஸ்திரப்படும் வரைக்கும் சாதனத்தைக் கைவிடப்படாது. ஸ்திரப்பட்ட ஞானம் நழுவாது. ஆத்மா தனக்கியல்பான ஞானத்தைப் பெறும். பெறவே, ஆனந்தம் வெளிப்படும். இவ்விதமான ஞானம் ஸ்திர ஞானமென்று சொல்லப்படும்.



மா. ஸ்திரஞானத்தாற் பெறப்பட்ட ஆனந்தத்துக்கு நாசமுண்டா?

சு. "கண்டவர் விண்டிலர்" என்னும் ஞானிகளின் வாக்கின்படி ஆனந்தத்தின் சுகத்தைக் கண்டவர்கள் அதை ஒருகாலமும் விடமாட்டார்கள். விடாது சதாநிஷ்டையிலிருந்து கொண்டு அந்தவானந்தத்தைச் சுகிப்பர்.

மா. லௌகிக வாழ்விலிருப்பவர்கள், அவ்வித ஆனந்தத்தை யனுபவிக்க முடியுமா?

சு. முடியும். நான் முன்னே யுங்களுக்குக் கூறியவண்ணம் அவரவரின் பூர்வசென்ம கன்மவினைகளின் பயனாகிய இன்பதுன்பங்களை ஞானிகளும் இப்பிறவியில் அனுபவித்தே தீரவேண்டும். "தாந்தாஞ் செய்தவினை தாமே யனுபவிப்பார்" என்றார் ஔவையாரும். "ஊழிற்பெருவலி யாவுள" வெனத் திருவள்ளுவநாயனார் கூறியிருக்கிறபடி, ஞானிகள் தங்கள் இன்பதுன்பங்கள் தங்களூழின்வண்ணம் வருகின்றன வென வெண்ணி, அவைகளில் சந்தோஷமாவது துக்கமாவது அடையாது, அவைகளைச் சமதிருட்டியுட னனுபவிப்பார்கள். ஆகையால், அவர்களை யானந்தம் விட்டு விலகாது. அவர்கள் என்ன தொழிலைச் செய்யினும் அதிற்றோயாது அத்தொழிலைச் செய்வார்கள்.

மா. தொழில்களைச் செய்யும்பொழுது அவைகளிற் றோயாது அவர்கள் எங்ஙனஞ் சதாநிஷ்டையிலிருக்க முடியும்?

சு. ஒரு சோரஸ்திரி, தனது நாயகன், பிள்ளைகள் முதலியவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யும்பொழுது, தான் சோரநாயகனுடன் கூடியனுபவித்த சுகத்தை யிடைவிடாது நினைத்துக்கொண்டிருப்பது போலவும், நீர்க்குடத்தைத் தலைமேல் வைத்துக் கொண்டு இரண்டு கைகளையும் வீசித் தனது தோழிகளுடன்வார்த்தையாடினும், தாதியினது மனம் நீர்க்குடத்திலிருப்பது போலவும், ஞானிகளும் எத்தொழிலைச் செய்யினும் அவர்களுடைய மனம் நிஷ்டையிலடங்கி நிற்கும்.

பட்டினத்தடிகள்.

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப்பட்டாலு
முத்தர்மன மிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடி யிருகை வீசிவந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

மா. ஞானிகள், தொழிலைச் செய்யும்பொழுது அதிற்பற்றின்றிச் செய்யமுடியுமா?

சு. ஞானிகள் தங்கள் பிராரத்தத்தைத் தொலைக்கும்படியே தொழிலைச் செய்வார்கள். அத்தொழிலால், ஒரு பிரயோசனத்தையுங் கருதார். வரும் பயனையும் ஈசுரார்ப்பணஞ் செய்வார்கள். தொழிலாலடையும் பயன் நன்மையா யிருப்பினும் தீமையாயிருப்பினும், அவைகளைப் பொருட்படுத்தார்கள். ஆகையால் அவர்கள் தொழிலிற் பற்று வைக்க வேண்டிய அவசியமின்று.

மா. ஞானிகள் கூடும் சமாதிகள் யாவை?

சு. தத்துவ விசாரணை செய்து, தேகம் நாமல்ல, மனம்முதலிய கரணங்கள் நாமல்ல, பிராணன் நாமல்ல, பஞ்சகோசங்கள் நாமல்ல வென்று ஒவ்வொன்றாய் நியதிகளைந்து செல்லும் பொழுது, ஈற்றில் அறிவே எஞ்சும். அதாவது, அறிவு சொரூபமான ஆத்மாவே எஞ்சும். ஆத்ம சொரூபத்தைப் பார்த்துக்கொண்டு அதிலாழ்வது ஓர்வகைச் சமாதி. இச்சமாதியைச் சொரூப சமாதி யென்பர். இச்சமாதி யகத்தே நிகழ்வதால் அகச்சமாதி யென்றும் பெயர்பெறும். சிவபூசை செய்பவர்களும் யாதுமோர் உபாசனா மூர்த்தியை முன்னிலையாய் வைத்துத் தியானஞ் செய்பவர்களும் சொரூபசமாதி கூடுபவர்களாகும்.

சொரூபசமாதியிலிருப்பவர்கள், சமாதியை விட்டு நீங்குங் காலத்தில், உலகத்தைக் காண்பார்கள். காணவே, அதிலுள்ளவைகள் உள்பொருள்களென்றும் தமக்கன்னியமானவைகளென்றும், எண்ணும் ஓர் நினைவு வரும். வரவே, மாயை பந்திக்கும். அதனால்விருப்புவெறுப்புண்டாகும்.உண்டாகவே



சமாதி நிஷ்டையாலடைந்த வானந்தங்கெடும். அநேககாலம் கஷ்டப்பட்டு மிகவரிதாய்ச் சம்பாதித்த ஆனந்தத்தை யிழப்பது எவ்வளவுமதியீனம். ஆகையால்அவ்விதம் வராவண்ணம் உலக தோற்றத்தையும் அதனாலுண்டாகும் பந்தத்தையும், அறுக்க வேண்டும். அதற்காகவேசகசசமாதி பழகவேண்டும்.

அண்டபிண்டங்களும், அவைகளிலுள்ளசராசரமனைத்தும் மாயையின் தோற்றமென்றும், அதாவது, மாயைக்குக் காரணராகிய கடவுளின் தோற்றமென்றும், ஆகவே யவைகள் கடவுளையன்றி யன்னியமல்ல வென்றும், தங்களுக்குமவைகளுக்கும் யாதும் பேதமில்லை யென்றும், பார்க்கப் பழகவேண்டும். அப்பழக்கம் ஸ்திரமாகும்பொழுது, சமதிருட்டியுண்டாகும். உண்டாகவே, சகலமும் தாமென வெண்ணும் எண்ணமுதிக்கும். உலகத்திலுள்ள வனைத்தையும் தாமாய்க் காண்பர். ஒன்றும் அன்னியமாய்த் தோற்றாது. தோற்றாது போகவே, விருப்பு வெறுப்பொழியும். ஒழியவே ஆனந்தமயமாவர். இச்சமாதி நிஷ்டையிலிருந்து நீங்குபவர்களை உலகம் பந்தியாது. அப்படிப்பட்டவர்கள் உலகந்தோற்றினாலுஞ்சரி தோற்றாவிடினுஞ்சரி, விகாரமடையார்கள். அவர்கள் மற்றவர்களைப்போல, உண்டுடுத்துஉலாவித்திரியினும், எவ்வகைப்பட்ட தொழில்களைச் செய்யினும், உலகப்பற்றை யொழித்த ஞானிகளாவர்.

மேலே கூறப்பட்ட ஞானிகள், அவர்களுடைய கன்மவினைக்கீடாகச் செய்யுந்தொழில்வேறுபாட்டால்,பிரமவித்துவரன், வரியான், வரிட்டன், என நால்வகைப் படுவர்கள். ஆனால், அவர்களடையும் முத்திதிசையில் பேதமில்லாது சமானமுள்ளவர்களாயிருப்பார்கள்.

பிரமவித்து—உலகத்திலே மற்றவர்களைப்போல, எத்தொழிலையுஞ்செய்வன். பிச்சையெடுத் துண்ணுகினுமுண்பன். வாணிகஞ்செய்யினுஞ்செய்வன். இராசாவாயிருந்து அரசாளுகினும் அரசாள்வன். ஆனால் அவனொன்றையும் பற்றான்.

மா. அஃதெங்ஙனம் கூடும்?

சு. தண்ணீரிலுண்டாகி, யதில் வளரும் தாமரையிலையானது, தன்னை நீர் பற்றுகினும் தான் நீரைப் பற்றாதிருப்பது போலவும், பஞ்சபூதங்களில் ஆகாயமொழிந்த மற்றைய பூதங்கள் ஆகாயத்தை யாதாரமாய்க்கொண்டு, அதைப்பற்றிநிற்பினும், ஆகாயம் அவைகளைப் பற்றாது நிற்பது போலவும், பிரமவித்துவும், தன்னைமற்றவர்கள்பற்றுகினும்தானொருவரையும், ஒன்றையும் பற்றாது உலகத்தவர்கள்போல வாழ்வன்.

வரன்—சமாதி நிஷ்டையிற் காலங்கழிப்பன். இடைக்கிடை நிஷ்டை தெளிவன். தெளியுங்காலத்து, பசிகொள்ளின், சமாதியை விட்டு, வெளியேசென்று, அயலவர்களிடம்யாதும் வாங்கிப் புசிப்பன்.

வரியான்—சமாதி நிஷ்டையிலிருந்து தெளியான். தெளிவிக்கில் தெளிவான். அந்நேரம் ஊட்டப்படும் உணவுகளை அறிந்துண்பன்.

வரிட்டன்—சமாதி நிஷ்டையிலிருந்து ஒருகாலமுந்தெளியான். அவனைத்தெளியப்பண்ணவும்முடியாது வலிந்துஉணவூட்டப்படின், உணர்வு தெளியாது உண்பான்.

வரன், வரியான், வரிட்டன் என்னும் மூவரும்பிராரத்த கன்மங் குறைந்தவர்கள். அவர்கள் தங்களுடைய தேகத்தைக் காலம் நாசமாக்கும் வரைக்கும், தேகத்துடனிருப்பார்கள். அவர்களது காரணசூக்மதேகங்கள்,முன்னமேநாசமடைந்தபடியால், தூலதேகம் ஒழிந்தவுடன், அவர்கள் மோட்சமடைவார்கள். அதன்மேல் அவர்களுக்குப் பிறப்பில்லை. பிரமவித்துவோ, தனது பிராரத்த மொழியும் வரைக்கும் பிராரத்த கன்மத்தால் தான் செய்யவேண்டிய தொழில்களைச் செய்துமுடித்தபின், தேகத்தை விடுவன். மேலே கூறப்பட்ட நான்குவகையான ஞானிகளுக்கும் ஓரேவிதமான முத்தியேகிடைக்கும்.

மா. சுவாமி! நீங்கள் கூறியபடி, ஒருவன் எவ்விதம் அறிவு தெளியாமல் உண்ணமுடியும்?



சு. மனிதர்களொவ்வொருவரிடத்திலும் சாதாரணமாக நனவு நினைவு, கனவு, சுழுப்தி என்று சொல்லப்படும் நான்கவஸ்தைகள் காணப்படும்.

(1) நனவு-சாக்கிரம்-விழித்திருத்தல். உணர்ச்சியோடிருத்தல். நனவுகாலத்தில், மனிதர்கள் எதிர்ப்படுவனவற்றைப் புலன்களாலறிந்து மனதுக்குச் செலுத்துவார்கள். தொழில் செய்யும்பொழுது, சிந்தித்துச் செய்வார்கள். அதுபோலப் பிரமவித்துவும் தான் செய்யுந் தொழிலை யறிந்து செய்வான்.

(2) நினைவு-மனநிகழ்ச்சி. புலன்வழிப்படாது, மனநினைவின்படி தொழிலைச் செய்வதாகும். அதுபோல வரனும், நினைவுவந்தவுடன், நினைவின் வண்ணம் யாதும் வாங்கிப் புசிப்பன்.

(3) கனவு—நித்திரையாயிருக்குங் காலத்துள்ள மனநிகழ்ச்சி. அக்காலத்து, ஒருவனுடைய துயிலைநீக்கின், அவன் உணர்ச்சியுடன் உணவை யுண்பன். அதுபோல வரியானும் நிஷ்டையிலிருந்து தெளிவிக்கின், கொடுக்குமுணவை அறிந்துண்பன்.

(4) சுழுப்தி—தெளியாதநித்திரை. இவ்விதநித்திரையினின்றும் ஒருவனைத் தெளிவிக்க முடியாது. சிலபாலர்கள் நித்திரை தெளியாதிருப்பினும், ஊட்டும் பால் முதலியவற்றை அறியாது உண்பார்கள். நித்திரை தெளியும்பொழுது தங்களுக்கு உணவூட்டியதை யறியாது, ஏன் தங்களுக்குணவூட்டவில்லையென்று பெற்றோர்களைக் கேட்பார்கள். இது உலகப்பிரசித்தம். அதுபோல, வரிட்டன், நிஷ்டையிலிருந்து ஒருகாலமும் தெளியான். மற்றவர்கள் சீவகாருண்ணியத்தால், யாதும் ஊட்டுகில், அதையறியாது உண்பன்.

மா. இப்பொழுது அந்த ஞானிகளின் தாரதம்மியம் நன்றாய் விளங்குகின்றது. எங்கள் தேகம் எவ்விதம் நாசமடையும் என்பதை அறிவிக்கும் பொருட்டுப் பிரார்த்திக்கின்றோம்.

சு. வெளியாகத் தோற்றுமிந்தத் தூலதேகம் காலத்தால் நாசமடையும். தூலதேகம் நாசமடைவதால், ஒருவரும் முத்தியடையார்கள். அதனுள் சூக்ம தேகமும், அதற்குக் காரணமாகிய காரண தேகமுமென இரண்டு தேகங்களுண்டு. சூக்ம தேகம் மனத்தாலாயது. மனம் நாசமடைந்தாலன்றி,

சூக்ம தேகம் நாசமடையாது. காரண தேகம் அவித்தை (அஞ்ஞானம்) யால் வந்தது. சூக்ம தூலமாகிய விருதேகங்களும் காரண தேகத்தாலேயேவந்தன. காரணதேகமிருக்கும் வரைக்கும், ஒருவன் முத்தியடையான். ஞானமே காரண தேகத்தை நசிக்கும். அது அழியவே, சூக்ம தேகமானது, அக்கினியினாற் சூடானஇருப்பு, நீரை யெவ்விதமுண்ணுமோ அவ்விதமே ஞானாக்கினியால் வெந்த மனமானது, சூக்ம தேகத்தை யொழிக்கும். ஒழியவே, காலத்தினால் தூலதேகமும் நாசமடையும். பிறப்புமொழியும்.

மா. அதை யின்னுஞ் சற்றே விரிவாய் விளக்கும்படி கேட்கின்றோம்

சு "பற்றே பிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே" என ஆன்றோர் கூறியவண்ணம், மனப்பற்றே பிறவிக்குக் காரணமாயிருக்கின்றது. மனம் என்னத்தை யிச்சிக்கின்றதோ அதைப் பூர்த்தி செய்யவே, பிறவி யேற்படுகின்றது. மனமானது புறத்தே சென்று எவ்வளவு விர்த்தியாகின்றதோ, அவ்வளவு பிறவிகள் ஏற்படுகின்றன. மனத்தைப் புறத்தே செல்லாது தடுப்பதற்காகவே, சாதனைகள் செய்யப்படுகின்றன. சாதனைகளால் மனமொடுங்க, இச்சைகள் சுருங்கும். சுருங்கவே, பிறவியுஞ் சுருங்கும். ஆகையால், ஒவ்வொருவரும் மனோநாசஞ் செய்யவேண்டும். ஞானமே மனதைச் சுட்டுச் சாம்பராக்கக் கூடியது. மனம் பிரவிர்த்தியிற் செல்வதால், நாங்கள் கடவுளைத் தரிசனைபண்ண முடியாமலிருக்கின்றது.

இத்துடன் சுவாமியார் தனதுபோதனைகளை நிறுத்தினர்.

## ௩௩-ம் அத்தியாயம்.

இஃதிங்ஙனம் நிகழ, கந்தவனத்திற் சமாதி கூடியிருந்த சித்தகுமாரன், பஞ்சகோசங்களையுங் களைந்து, அப்பாற்செல்ல ஒன்றுந் தோற்றாது பாழாயிருப்பதைக் கண்டு, என்ன செய்வதெனத் தெரியாது, மிகக் கலக்கமுற்றிருந்தார். இந்நிலையிலிருக்கும்பொழுது, ஒருநாள் சுவாமியார், அங்குசெல்ல, சித்தகுமாரனவரைக்கண்டு, எதிர்சென்று, சாஷ்டாங்கமாய் விழுந்து



வணங்கி, கண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ் சொரிய அவரையழைத்துச் சென்று, உபசரித்து ஓரிடத்திலுட்கார வைத்தார். பின் அவரை நோக்கி, பின்வருமாறு கூறினர்.

சி. சுவாமி! அடியேனிருக்குமிடந்தேடி, தாங்கள் வர, என்ன தவஞ் செய்தேனோ! அடியேன் செய்த பூர்வபுண்ணியமே தங்களை யிவ்விடங் கொண்டுவந்து விட்டது. தங்களுடைய கிருபையால் அடியேன் எனது மயக்கந் தீர்ந்து, தெளிவடைவேனென நினைக்கின்றேன்.

சு. உமது தற்கால அனுபத்தையும்மயக்கத்தையுஞ் சொல்லும்.

சி. சமாதிநிஷ்டைகூடி, பஞ்சகோசங்களையும்கடந்து, அப்பாற்செல்ல பாழேயன்றி வேறொன்றுந் தோற்றவில்லை. எனது சமாதிநிஷ்டையின் முடிவு பாழ்தானோ? இந்தப் பாழைக் காணவா நானிவ்வளவு காலமுங் கஷ்டப்பட்டது?

சு. நீர், அஞ்சவேண்டாம். கலங்கவேண்டாம். உமது அனுபவம் முழுவதும் சரியாக வொத்திருக்கின்றது. சொரூப சமாதி செய்பவர்கள், அந்தநிலைக்குவந்தபின்பே, எதார்த்தநிலையைக் காண்பார்கள். நீர், சகலதத்துவங்களையும் நானல்ல, நானல்லவென ஒவ்வொன்றாய் நியதிகளைந்து மேலே சென்றீர். ஈற்றில் ஒன்றையுங் காணவில்லையெனச் சொல்லுகின்றீர். நீர் எதைக் கொண்டு இவைகளைக் களைந்தீர்?

சி. அறிவைக் கொண்டே நானிவைகளைக் களைந்து சென்றேன்.

சு. பாழைக்கண்டது யாது?

சி. அந்தவறிவுதானே பாழையுங் கண்டது.

சு. அந்த அறிவு எங்கே? அதையுங் கண்டீரோ? தேகத்திலுள்ள சகல தத்துவங்களும் கழிய, எஞ்சியது அறிவல்லவா?

சி. எஞ்சியது அறிவு மாத்திரமே. அதை நான் காணவில்லை. அதை எதைக்கொண்டு பார்ப்பது?

சு. அறிவிருக்கும் வரைக்கும் பாழ்தோற்ற நியாயமில்லையே. அறிவைக்காணாததால், அங்கொன்றமில்லையெனவெண்ணினீர். அந்தஅறிவை அதைக்கொண்டேபார்க்கவேண்டும். வெளிச்சத்

தைப் பார்க்க வேறு வெளிச்சந்தேவையா? சூரியனைப்பார்க்க தீபம் வேண்டுமோ? வேண்டியதில்லையே. அதுபோலவே, அறிவைக்காண அயலான வின்னொரு அறிவு வேண்டியதில்லை அவ்வறிவே நீர். அறிவே ஆத்மன். அறிவாகிய உம்மை அறிவாகிய நீர் காண்பீராகில், உமது சமாதி பூரணமடையும். அதை நீரே அனுபவத்தாற் கண்டறிய வேண்டும்.

சி. சுவாமி! தங்களுடையகிருபாநோக்கத்தால், எனது மயக்கந் தெளிந்தது. தங்கள் பாதங்களுக்கு அனேக நமஸ்காரம்.

சு. நீர் இனிமேல் ஓர் ஞானாசாரியரை யடைந்து, அவரது பாத தீட்சையாலும், நயன தீட்சையாலும், பரிச தீட்சையாலும் இடைக்கிடை உம்மை மயக்கும்மாயையை எரிக்க வேண்டும். அவருடைய பாதங்களுக்குப் பூசைசெய்து, அவருடைய சந்நிதானத்திலிருந்து, சமாதி செய்துவரின், பூரணதிசையை யடைந்து, மிகவுன்னத நிலையை யடைவீர். என்னுடைய குருசுவாமிகள் இந்த வனத்திலேயே, எழுந்தருளி யிருக்கின்றார். அவரடியாருக் கருள்செய்யக் குருமுகூர்த்தமாய் எழுந்தருளி வந்த கடவுள். பிறவிநோய் தீர்க்கும் பரமவைத்தியன். அஞ்ஞானவிருளை யோட்டும் ஞான சூரியன். அவரே யும்மை யாண்டடிமை கொள்ளும் ஞானாசாரியர். எழுந்து வாரும். அவரிடத்துக்குப் போவோம்.

இதைக் கேட்டதும் சித்தகுமாரன் எழுந்துநின்று, தன்னை மறந்து, ஆனந்தக் கூத்தாடினார். பாடினார். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். சுவாமியாரை விழுந்துநமஸ்கரித்தார். தோத்திரஞ் செய்தார். பின்னெழுந்தார். அதன்பின் சுவாமியார் முன்னும் சித்தகுமாரன் பின்னுமாக, இருவரும் குருசுவாமிகள் எழுந்தருளி யிருக்கும் பர்ணசாலையை நோக்கி நடந்தார்கள். சிறிது நேரத்தில் குருசுவாமிகள் எழுந்தருளி யிருக்கும் பர்ணசாலை கண்களுக்குப்புலப்பட்டது.புலப்படவேசித்தகுமாரன் தாயைத் தேடிக்கண்ட கன்றைப்போல, சுவாமியாரைப் பின்னேவிட்டு விரைவாக ஓடி, குருசுவாமிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து பின்வருமாறு தோத்திரஞ் செய்தார்:—



“அடியேனை ஆண்டடிமை கொள்ள ஆசாரிய முகூர்த்தங் கொண்ட கடவுளே! மனிதரை மயக்கும் மனவிருளை யோட்ட மானுடச் சட்டைசாத்தி, மண்ணுலகில் உதயஞ்செய்த ஞான சூரியனே! அரியாலும் அயனாலும் அடிமுடிதேடிக்காணற்கரிய ஆதிமூலமே! ஒளிக்குள் ஒளியாய் விளங்கும் ஒளிப்பிழம்பே! சொல்லுக்கடங்காச் சொற்பிரகாசமே! அடியேன் தங்களுடைய பாதங்களையே கதியென நம்பி யிங்குவந்தேன். பிறவியாகிய கடலைக்கடக்கத் தங்களுடைய பாதங்களாகிய தெப்பமிருக்கும் பொழுது அடியேனுக்கோர் குறையுமில்லை. பக்குவாபக்குவம் பாராது அடியேனை யாட்கொள்வது தங்கள் மேற் பொறுத்த கடனாகும். அடியேனுடைய பவநோயைத் தீர்ப்பது பரமவைத்தியனாகிய தங்கள் கடமையன்றோ? பிள்ளைகள் செய்யும் பிழைகளைப் பிதாக்கள் பொறுப்பது முறையல்லவா? துட்டப்பிள்ளையாயினும் பெற்றவளடித்துத் துரத்துவாளா? துரத்துகினும் பிள்ளை யவளைவிட்டுப் போகுமா? பெற்ற பிதாமாதக்களிலும் சிறந்த தங்களை விட்டு, உதைத்துத் தள்ளுகினும், அடியேன் பிரிவேனோ? தங்கள் பாதங்களை விட்டு ஒரு காலமும் விலகேன். தங்களைத் தஞ்சமென்று தங்களிடம்வந்த அடியேன் வேறெங்கு செல்வேன்”?

இவ்விதமாகச் சொல்லிக்கொண்டு, சித்தகுமாரன் குருசுவாமிகளுடைய பாதங்களைப் பிடித்தபிடி விடாது, நிலத்திற் கிடந்தார். குருசுவாமிகள் அவருடைய அதிதீவிரபக்குவத்தைக் கண்டு, அவரைத் தடவி, அவரை யருட்கண்ணால் நோக்கி, அவருடைய மனமும் உயிரும் குளிரத்தக்க அமிர்த வசனங்களைத் திருவாய் மலர்ந்தருளினார்.

“புத்திரா, நீ ஒன்றிற்கும் அஞ்சற்க. உனது பேரன்பும், ஸ்திரநிலையும், தீவிரபக்குவமும், உன்னை யீடேற்றும். நீமுற் செனனங்களில் சம்பாதித்து வைத்த சம்பத்துக்கள் பயன் றராமற் போகா. அதைத்தடுக்க ஒருவராலு மியலாது. எழுந்திரு.” என்றார்.

இதைக்கேட்டதும், சித்தகுமாரனுடையஉள்ளம் மாத்திரமல்ல, உயிருங்குளிர்ந்தது. குருசுவாமிகளின் சந்நிதானத்தை

யடைந்து, அவரைத் தரிசித்த மாத்திரத்தில், அவரிடத்துண் டாய மயக்கம் ஓட்டெடுத்தது.

* "பொன்றுமுடப்பளவாகி யிருப்பாரும்பூசுரராவர்களோ என்றுமுள வறிவானவரன்றோ விருபிறப்பாளராவர்."

எனத் தத்துவராயர் கூறியபடி, அறிவினால் இருபிறப்பாள ரானார். அவருக்கு ஆனந்தம் பிறந்தது. யாதோவொரு அதிசய நிலை வந்தது. வரவே, தன்னை மறந்து, உலகத்தை மறந்து, குரு சுவாமிகளின் பாதங்களுக்குக் கிட்டவிருந்து, சித்திர தீபம் போல, ஆடாது, அசையாது, சமாதி நிஷ்டை கூடினார். சிறிது நேரம் நிஷ்டையிலிருந்து பின்தெளிந்து மறுபடியுங் குருசுவாமி களின் பாதங்களை வணங்கினார். அதன்பின் குருசுவாமிகளுடைய ஆஞ்ஞைப்படி எழுந்து அவருக்குக் கிட்ட வணக்கத்துட னிருந்தார்.

இவ்விதம் சில மாதங்களாக, சித்தகுமாரன் குருசந்நி தானத்திலிருந்து நிஷ்டைகூடி, சகச சமாதியிலிருந்து, தனக் கெழும் சந்தேகங்களையும், மயக்கங்களையும், அவராற்றெளிந்து, நிர்விகற்ப சமாதியில் ஸ்திரமடைந்தார். உலகத்திலே தோற்று மனைத்தையு மந்தப்பரமசிவமாய்க் கண்டார். கிருத கிர்த்திய னானார். பிராரத்த கன்மத்தைப் புசித்து முடியும் வரைக்கும் தேகத்தைப் போஷித்துக்கொண்டுகாலங்கழித்தார். குருசுவாமி களைத் தரிசனஞ் செய்ய வருபவர்களும் அவருடைய சிஷ்யர் களும் சித்தகுமாரன் சீவன் முத்ததிசையை யடைந்தாரெனக் கண்டு அவருக்குக் குமாரசுவாமிகளெனப்பெயர்சூட்டி, அவ்வித மழைத்து வந்தார்கள்.

குமாரசுவாமிகள்குருசுவாமிகளின்சிஷ்யவர்க்கத்தில்சிரேட்ட சிஷ்யராயும், மிக்கவிசேஷம் பெற்றவராயும் விளங்கினார். அவர் தனது ஆசாரியருடைய ஆஞ்ஞைப்படி அவரிடத்துக்கு வருப

---

* "Unless you are born again, you cannot see the kingdom of God-நீங்கள் மறுபிறவி யெடுக்காவிடின், கடவுளின் இராட்சி யத்தை (ஞானபூமியைக்) காண உங்களால் முடியாது" என இயேசுக்கிறிஸ்துநாதர் கூறியிருக்கு முண்மையும், தத்துவராய சுவாமிகள் இப்பாவிற் கூறியிருக்கு முண்மையும் ஒன்றே.



வர்களுக்கு அவரவர் பக்குவத்துக்கேற்றபோதனைகளைச்செய்து கொண்டு அந்த வனத்திலேயே இன்னொரு பர்ணசாலையிலெழுந் தருளியிருந்தார். அவருடைய பெயரும், புகழும் மாயாபுரி முழுவதும் பரவிய. காணக்காட்டைச் சேர்ந்த கிராமங்களில் வசிப்பவர்களும் பிரமபுரம்பக்தபுரம்முதலிய கிராமங்களிலுள்ள வர்களும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்து அவரைத்தரிசனைசெய்ய வந்தார்கள். குமாரசுவாமிகள் ஆரம்பத் திலேசித்தகுமாரன்என்னும்பெயரைத்தாங்கி ஆசிரியாயிருந்து லோகோபகாரமாய், சனங்களுக்கு லௌகிகவாழ்வுக்குவேண்டிய கருவிநூல்களையும், சமய நூல்களையும், சன்மார்க்கம் முதலிய வைகளையும் கற்பித்து அவர்களுக்கு நன்மை செய்து வந்தார். இப்பொழுது அவர் பூரண ஞானதிசையை யடைந்து, சீவன் முத்தர்களுடைய இலட்சணங்களைப் பொருந்தி, ஒன்றிலும் பற்றின்றி, சீவர்களிற் கொண்ட கருணைமேலீட்டால், சனங் களுக்கு ஆன்ம வீட்டேற்றத்துக்குரியஞானநூல்களையும், அவை களிலுள்ள இரகசியார்த்தம், தத்துவார்த்தங்களையும், அவரவர் பக்குவத்துக்கேற்ப போதித்துக்கொண்டு வந்தார்.

## ௩௪-ம் அத்தியாயம்.

மானதாசன், பேரின்பநாதன், சாந்தலிங்கன் என்னும் மூவரும், சாதனைகளில் முதிர்ச்சி யடைந்து அநித்தியமான உல கத்தில், உண்பதும், உடுப்பதும், உழைப்பதுமேகதியென்றிருப் பதால், ஒரு பிரயோசனமுமில்லையென வநுபத்திற்கண்டு, உலக விவகாரங்களுக்குரிய தொழில்களனைத்தையும் ஒருங்கே யொழித்து, ஆத்மவீட்டேற்றத்துக்குரிய சமாதியைப் பழகிவந் தார்கள். இடை நேரங்களை, ஞானநூல்களைக் கற்பதிலும் தங்க ளுடைய மயக்கங்களைச் சுவாமியாரிடங் கேட்டு தீர்ப்பதிலும், கழித்து வந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் சுவாமியாரை நோக்கி,

மா. சுவாமி! சுருதிகளில் சிலவிடங்களில் ஒருவிதியும், சிலவிடங் களில் அதற்கு முழுமாறான இன்னொரு விதியுங் கூறப்பட் டிருக்கின்றனவே. அவைகளில் எதுசெய்யப்படவேண்டியது? எது விலக்கப்பட வேண்டியது?

சு. வேதம் பொய்சொல்லுமா? சொல்லாதே. ஆகையால் சுருதிகளிற் சொல்லப்படுபவைக ளெல்லாம் உண்மையானவைக ளென்றே யெண்ணப்படவேண்டும். விதிகள் வேண்டியவிடங்களிற் செய்யப்பட வேண்டும். வேண்டாதவிடங்களில் விலக்கப்பட வேண்டும். அவைகளொன்றிற் கொன்று மாறுயிருக்கின்றனவென்று எண்ணுவது தவறு. விதிகள் அவரவர் பக்குவத்திற்கேற்பக் கொடுபட்டிருக்கும். கள்ளுக்குடித்தல், மாமிசம்புசித்தல் முதலியனவற்றைவிலக்கும்வேதமே, சீவகாருண்ணியங்கருதி, விதிக்கடங்காதார்கள், யாகாதி கர்மங்களைச் செய்து அவைகளையுபயோகிக்கலாம் என்றுசொல்லுகின்றது. இவ்விதங் கூறுவது வேதத்தின் தந்திரமாகும். அவைகளை உண்மையான விதிகளென நினைத்து, வேதம்ஒன்றிற்கொன்று மாறுனவிதிகளைச் சொல்லுகின்றதென்றுகூறுவது அறியாமையாகும்.

மா. பாவனை எவர்களுக்கும் ஆவசியகமானதோ?

சு. ஒன்றை யொன்றாக மதித்தலே பாவனையாம். ஒருகாலமும் சிங்கத்தைக் காணுதவொரு பிள்ளைக்கு ஓராசிரியர் அதைப்பற்றிக் கற்பிக்கும்பொழுது, சிங்கத்தினுருவத்தைச் சித்திரித்து, அச்சித்திர மூலமாகக் கற்பிக்கின்றார். சிங்கத்தைக் கண்டு அதை நினைக்கக்கூடிய பிள்ளைக்குச் சித்திரந் தேவையில்லை. அதுபோலவே இலக்கின்றி தியானிக்க முடியாதவர்களுக்கு பாவனை வேண்டும். பாவனையின்றித் தியானிக்கக்கூடியவர்களுக்கு அது தேவையில்லை.

அறிவாளிகள் சனோபகாரமாக கடவுளுடையசக்திகளையும் இலட்சணங்களையும் உருவகப்படுத்தி, உருவமில்லாத கடவுளுக்கு ஒருருவமேற்படுத்தியிருக்கின்றார்கள். அவரவர்பக்குவத்தையும் மனவியல்பையும் நோக்கி, பலபல விதமான மூர்த்திகளையும் உண்டாக்கியிருக்கின்றார்கள்.

மனிதர் அவர்களுடைய பூர்வசென்ம வினைகளுக்குத் தக்கதாகவும், சம்பத்துக்குத் தக்கதாகவும், பலதிறத்தினராயும் பிறக்கின்றார்கள். அவரவர் பக்குவத்துக்கு ஏற்ற மூர்த்திகளமைக்கப்படுவது முறையாகும். ஒரேவிதமான ஒரேயள



வான ஒரு சட்டை எல்லாருக்கு முதவாது. அவரவர் விருப்பத்துக்கும், அளவுக்குந் தகுந்த சட்டைகள் அவர்களுக்குத் தேவை. அதைவிட்டு, எல்லாரும் ஒன்றையே யணியவேண்டுமெனக் கூறுவது மூடத்துவமல்லவா? அதுபோல, மனிதராய்ப் பிறந்தவர்களனைவரும், ஒரே சமயத்தையும், ஒரே விதமான வணக்கத்தையும், ஒரேவிதமான தியானத்தையும் வைத்திருக்கவேண்டுமென சுருதிகள் சொல்லுமா? அவ்விதமவைகள் சொல்லுகின், அவைகள் சுருதிகளாகா.

வேதம் சகல மதத்தருக்கும் ஆதாரத்தையும், பிரமாணத்தையுங் கொடுக்க வேண்டியது. மனிதர்கள் எத்தேசத்திற் பிறந்தாராயினும், எச்சாதியிற் பிறந்தாராயினும், எப்பாஷைக்காரராயிருப்பினும், எம்மதத்தை யனுட்டிப்பவராயினும், அவர்களுக்கு உபயோகமாயிருக்கும் நூலே, வேதமென்று சொல்லப்படத்தகும். மற்றைய நூல்கள் சுயநயங்கருதி ஒருசார்பினால் செய்யப்பட்டவைகளாகும். அவைகள் அங்கீகரிக்கப்படத் தக்கனவல்ல.

நிரீச்சுரவாதிக்கும்வேதமே பிரமாணநூல் ஈச்சுரவாதிக்கும் வேதமே பிரமாணநூல். மாறுன கொள்கைகளையுள்ள இருவகை மதத்தருக்கும் உபயோகமாயிருக்கும் நூலே வேதமாகும். வேதம் மனிதர்களுக்கு வேண்டிய இஷ்டத்தைக் கொடுக்கும் பொழுது, மதத்தர்கள் வெற்றெலும்புக்குச் சண்டை செய்யும் நாய்களைப்போல, ஒருவரோடொருவர் வாது செய்வதும், சண்டை செய்வதும் அழகா? சமயவாதத்தில் தங்கள் காலத்தை வீணுகச்செலவழிப்பதிலும், தத்தம்மதத்தை நன்றுயாராய்ந்து, அதன்படி யொழுகுவதே மதத்தருக்குச் சிறப்பாகும். மதவுண்மைகளை யுள்ளபடி யறிந்தவர்கள், வாது செய்யத் துணியார். சீவகாருண்ணிய முள்ளவர்களும், சமய பக்தியுள்ளவர்களும், மற்றவர்களைப் பகைத்து அவர்களையும், அவர்களுடைய மதத்தையும் தூஷிக்க மாட்டார்கள்.

அறிவில்லாத ஒரு பாலகன் அறிவுள்ள ஒருவயோதிபனைப் போல. ஒன்றையறிந்து செய்யவல்லவனு? அப்பாலகன் வயோதிபனைப்போலச் செய்யவில்லை யென்று அவனைத் தூஷிப்பவருண்டா? பாலகன் அறிவுவந்தவுடன்வயோதிபனைப் போலவே

செய்வான். அதுபோலவே மதத்தார்கள் தங்கள் அறிவுக்கெட்டிய வரையில் விதிகளை யேற்படுத்தி ஒழுகுதல் தவறாகுமா? அவ் விதிகளை மற்றவர்கள் கண்டிப்பது அழகாகுமா? அவ்விதங் கண்டிப்பவர்கள், அவர்கள் கண்டிக்கும் மதத்தார்கள் தங்கள் மதங்களை விடுத்து நிரீச்சுரவாதிகளாயும், லோகாயுதர்களாயும் வரின் சந்தோஷப்படுவார்களா?

ஒரு மதத்தவர் மற்றமதத்தவர் செய்யும் கிரியைகளிலும் ஒழுகும் விதிகளிலும், தவறிருக்கக் காணின், அவைகளை அவர் களின் மதக்கொள்கைகளின்படி யாராய்ந்து அத்தவறுகளை, பிதா பிள்ளைக்கு புத்திபுகட்டுவதுபோல, அவர்களுக்குக்காட்ட வேண்டும். பிதா பிள்ளைகள் சண்டை செய்யும்பொழுது சந்தோஷப்படுவாரா? பரமபிதாவாகிய கடவுளுக்குப் பிள்ளை களாகிய பக்தர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுவது, சம்மதமாகுமா? கடவுளுக்கு நாங்களனைவரும் சமமானவர்கள். அவர்பட்சபாதமில்லாதவர். அவ்விதமான கடவுளை வணங்குப வர்கள் அவருக்கு மாறான செயல்களைச் செய்து கொண்டு தாங்கள் மதாபிமானிகளென்று சொல்வது தகுமா?

மா. யோகாப்பியாசம் மாத்திரம் மனதை யொருவழிப்படுத்தி, முத்தியை யளிக்காதா?

சு. யோகாப்பியாசத்தால் மனமொருவழிப்படுமேயன்றி, முத்தி சித்திக்காது. சித்திக்குமாயின் சுவாசத்தை யடக்கி, ஒன்றை யும் புசியாது, ஓடாது, உலாவாது இயல்பாக யோகஞ் செய்யும் அட்டை முதலிய செந்துக்கள் முத்தியடைய வேண்டுமே. அங்ஙன மவை முத்தியடைவதாகத் தோற்ற வில்லை. யோகாப்பியாசத்தால் மனதை யொருவழிப்படுத்தி, அதனால் ஞானமுதிக்கப் பெற்று ஞானத்தினாலேயே, மோட்ச மடைய வேண்டும்.

மா. சரியை, கிரியை முதலியவைகளால் ஒருபயனுமில்லையா?

சு. அவைகளை யொழுங்காக அனுட்டித்து வருவதால் மனஞ் சுத்தமடையும். அதனால்தியானசக்தியுண்டாகும். அன்றியும் அவைகள் பதவி முத்தியை விரும்புவர்களுக்கு பதவி முத்தி யையுங் கொடுக்கும். பதவி முத்திகளாவன, சலோக சாமீப சாரூப முத்திகளாம்.



மா. இப்பதவி முத்திகள், பிறவியை யொழியாவோ?

சு. பதவிமுத்தியடைந்தவர்கள், காலாதீதத்தில் பதவிமுத்தியில் அதிருப்தி கொண்டு, மேற்பதவிக்கு ஆசைகொள்ளுவார்கள். ஆசைபிறவிக்கு வித்தாயிருப்பதால், அது பழையபடி பிறவி யையுண்டாக்கும். ஆகையால் அவைகள் நிலையானவைக ளல்ல. அன்றியும் பிறவிக்கு ஏதுவாயுமிருக்கின்றன.

மா. பின் நாமென்னத்தை விரும்ப வேண்டும்?

சு. ஞானத்தைப்பெற்று அதனால் கடவுளோடு இரண்டறக் கலக்கும் அத்துவித முத்தியாகிய சாயுச்சிய முத்தியைப் பெறவிரும்ப வேண்டும்.

## ௰௫-ம் அத்தியாயம்.

மானதராசன், பேரின்பநாதன், சாந்தலிங்கன் என்னும் மூவரும் குமாரசுவாமிகளடைந்த உன்னத நிலையையும், மகத்து வத்தையுங் கேள்விப்பட்டு, மிகவுஞ் சந்தோஷமடைந்து அவ ரைத் தரிசிக்க மிக்க ஆவல் கொண்டவர்களாய், சுவாமியாரையு மழைத்துக்கொண்டு, கந்தவனத்துக்குப் போனார்கள். அங்கே சுவாமிகளைக் கண்டவுடன் அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, பின்வரும்விதமாகத் துதித்தார்கள்.

"எங்களுக்குச் சகோதரனாயும், நண்பனாயுமிருந்து எங்க ளுக்கு வேண்டிய புத்திகளைப்புகட்டியதுமன்றி, சமயசாத்திரங் களையும்போதித்துவந்தீர். நீர்எங்களை நன்னெறிப்படுத்துவதற்கு அவதாரஞ் செய்த ஓர் ஆண்சிங்கம். நாங்கள் எங்களுடைய வாலிபதிசையில் அறியாமை மேலிட்டு, காமம், கோபம், அகங் காரம், பொறாமை, உலோபம் முதலிய கெட்டகுணமுள்ளவர் களாயிருந்த காலத்து, நீர் அவைகளைக்கண்டு மிகச்சாந்தமாயும் பொறுமையாயும் எங்களுக்கு நற்புத்தி புகட்டி, நல்வழியில் நடத்திவந்தீர். எங்கள் அக்கிரமங்களைச் சகித்து, வேண்டிய புத்திகளைக் காலத்துக்குக் காலஞ் சொல்லி வந்தீர். அத்துடன் விடாது, சுவாமியாரை யழைத்துவந்து, நாங்கள் மேனிலையை யடையக்கூடிய சாத்திரவுண்மைகளை யுபதேசித்து வரும்படி செய்தீர். நாங்கள் இப்பொழுதடைந்திருக்கும் நிலைக்கும், பக்கு வத்துக்கும் நீரே காரணர்.

நீர் வைராக்கியமடைந்து சாதனை செய்துவரும் நாட்களில் எங்களறியாமையால், உமது நிலையை விளங்காது உமக்கு அனேக கஷ்டங்களைக் கொடுத்தோம். அவைகளைச் சகித்துக் கொண்டு, உமது நிலைதவறாது சாதனங்களைக் கைவிடாது ஏகாந்தத்திலுட்கார்ந்து கொண்டு சாதனைகளைச் செய்துவந்தீர். சிலகாலஞ்செல்ல, நீர் பூரணதிசையை யடையவும், எங்களுக்கு ஞானசாரியராயமைவதற்கு பக்குவமடையவும், எங்களைவிட்டுப் பிரிந்து இவ்விடத்துக்கு வந்து பூரண நிலையை யடைந்தீர். உமது பிரிவாற்றாது நாங்கள் துன்பப்பட்டுவிசனமடைந்தோம். சுவாமியார் அதைக்கண்டு எங்களைத் தேற்றி, ஆறுதலான வார்த்தைகளைச்சொல்லி, எங்களைப்பக்குவிகளாக்கும்பொருட்டு ஞானநூல்களைக் கற்பித்து, அவைகளிலுள்ள இரகசியார்த்தங்களை எங்களுக்குபதேசித்தார். நாளுக்கு நாள் இவ்விதமாக அறிவூட்டப்பட்டு நாங்கள் உம்மையடைந்து உபதேசம் பெறக் கூடிய பக்குவர்களானோம்.

முன் எங்களை நல்வழிப்படுத்தி ஞானவிசாரணை செய்ய ஏவியதுபோல, இப்பொழுது எங்களுடைய அஞ்ஞானவிருளை யோட்டி அகக்கண்களைத் திறந்து ஆட்கொண்டு அடிமைகளாக்குவது உமது கடனாம். நாங்கள் இனிமேல் உம்மைவிட்டுப் பிரியேம்." என்றிவ்வாறாகச் சொல்லி அவருடைய பாதங்களில் வீழ்ந்து மறுபடியும் வணங்கினார்கள்.

குமாரசுவாமிகள் அவர்களுக்கு இனிய வார்த்தைகளைக் கூறி, அவர்களை யாசீர்வதித்து, உட்காரும்படி ஆஞ்ஞாபித்தார். அதன்பின் ஒருபிதா தனது பிள்ளைகளுடன் எவ்வளவன்பாய் வார்த்தையாடுவாரோ அவ்வளவன்பாய்அவர்களுடன்வார்த்தையாடினார். அன்று தொடக்கம் மானதராசன் முதலிய மூவரும் சுவாமிகளுடைய சிஷ்யராகி அங்கே வசித்து வந்தார்கள்.

மாயாபுரிக்குச்சேர்ந்த சகலகிராமங்களினின்றும் சனங்கள் அவரைத் தரிசனை செய்யும்பொருட்டுக் கூட்டங் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுள்ளே பக்குவிகளானவர்கள் சுவாமிகளுடைய சீடவர்க்கத்திற் சேர்ந்தார்கள்.

42064



சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளை ஆண்டடிமைக் கொள்ளும் பொருட்டு, திருப்பெருந்துறையிலே, தனது அடியார்கள், சூழ எங்ஙனம்வீற்றிருந்தாரோ, அங்ஙனமாக குமாரசுவாமிகளும் தனது சீடர்கள் சூழ பர்ணசாலையில் வீற்றிருந்தார்.

குமாரசுவாமிகள் தனது சந்நிதானத்தில்அடியார்களிருக்க நிஷ்டைகூடியிருந்தது சிவபெருமான் ஞானசாரிய முகூர்த்தங் கொண்டு சின்மாத்திரையாய் சனகாதியோருக்கு மௌனோபதேசஞ் செய்யக் கல்லால மரத்தின் கீழ் வீற்றிருந்ததை யொத்திருந்தது.

இரண்டாம்பாகம் முற்றிற்று.

சுபம்.

நூலகம்

# புத்தக விளம்பரம்.

1. சித்தகுமாரன். முதலாம் பாகம் ரூ. க. ச. உரு.
2. ,, உ-ம் ,, ரூ. க. ,, 00
3. நீலகண்டன் ரூ. க. ,, ரு0.
4. சிறிய வினோதக்கதைகள். க-ம் பாகம் ,, க0.
5. மற்றைய பாகங்கள் விரைவில் வெளிவரும்.
6. Eng-Eng-Tamil Dictionary by the late Mr. A. Mootootamby Pillai, Fourth-Edition. வெளியாய் விட்டது. ரூ. 5-50.

## விலையாகும் இடங்கள்.

மானேஜர்

பிறிற்ருனியா ஸ்ரோர், The Britannia Stores,
வண்ணார்பண்ணை Vannarpannai
யாழ்ப்பாணம். JAFFNA.

S. S. சண்முகம். S. S. Sanmugam.
S. K. கந்தையாபிள்ளை. S. K. Kandiah Pillai.